# நிவேதினி

பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை

இதழ் 14, 2011

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

*நூற்பதிப்பு:*
2011

*பதிப்புரிமை:*
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

*பிரதிகள்:*
200

*அளவு:*
1/8

*அச்சு:*
ஓவ்செற்

*பக்கங்கள்:*
118

*கடதாசி:*
70கிராம் வெள்ளைத்தாள்

*வெளியீடு:*
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

*அச்சுப்பதிப்பு:*
யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
48B, புளூமெண்டல் வீதி, கொழும்பு 13.

*விலை:*
ரூபா 275/–

ISSN: 1391 – 0353

# நிவேதினி

## பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை

இதழ் 14, 2011

**பிரதம ஆசிரியர்**

செல்வி. திருச்சந்திரன்

**ஆசிரியர் குழு**

தேவகௌரி சுரேந்திரன்

மகேஸ் வைரமுத்து

சிவமணி பரராஜசிங்கம்

# இவ்விதழில்...


பக்கம்

முன்னுரை

01. பெண்களின் இன உரிமைப் போராட்டம் 01

*அப்துல் காதர் லெப்பை*

02. சமூகவியல் கோட்பாடுகளும் அவை பற்றிய சில வாதங்களும் 35

*செல்வி திருச்சந்திரன்*

03. தொழிலில் பெண்களின் நிலை – ஏறாவூர் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 43

*எம். எஸ். நூர்ஜஹான்*

04. பின்னைப் பெண்ணியங்கள் (Post Feminisms) – ஓர் அறிமுகம் 64

*நதீரா .ம*

05. பெண்கள் மீதான வன்முறை தந்தையாதிக்கக் கருத்தியலை மறுவிசாரணைக்கு உட்படுத்தல். 81

*சந்திரசேகரன் சசிதரன்*

06. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் 92

*து. ஜீவரதி*

# முன்னுரை

நிவேதினியின் இவ்விதழில் 6 கட்டுரைகளை அடக்கியுள்ளோம். கட்டுரைகளின் தலைப்புக்களில் தொடர்ச்சி இருப்பது போலத் தெரியாவிட்டாலும் கட்டுரை கூறும் பொருளிலும் அவை குறிக்கும் தத்துவங்களிலும் பெண்நிலைவாத பிரக்ஞை இருப்பதை நாம் மறுக்க முடியாது. இத்தொகுப்பில் வித்தியாசமாகத் தெரிவது ஆண் முஸ்லிம் பெரியாரின் சிந்தனைக்கோவைகள். அப்துல் காதர் லெப்பையின் **''பெண்களின் இன உரிமைப்போராட்டம்''** என்ற கட்டுரை முக்கியமானது, வித்தியாசமானது. நாம் அதைப் **''போராட்டச்சிந்தனை''** என்ற நூலில் இருந்து மறுபிரசுரம் செய்வதில் பெருமைப்படுகின்றோம். பெண்களை ஒரு சில பெண்நிலைவாதிகள் சாதியாகவும், வர்க்கமாகவும் ஆண்களிடம் இருந்து பிரித்து ஒரு குழுமமாக ஆய்வு செய்துள்ளனர். அப்துல் காதர் லெப்பை பெண்களை ஒரு தனி இனமாகக் காண்கிறார். இன விடுதலையை வேண்டி நிற்கிறார். மேலும் இக்கட்டுரையில் பெண்களின் அன்றாடப் பிரச்சினைகளைக் குவியமாக்கி ஆய்வு ரீதியில் கள ஆய்வின் மூலம் இனங்கண்டு, பிரச்சினை மையங்கள், அவற்றின் காரணங்கள் போன்றவற்றை இனங்கண்டு தீர்வுகளை முன்வைக்கின்றார். ஏனைய கட்டுரைகள் பெண்களின் தொழில் நிலையையும், குடும்பத்தின் பாரத்தைத் தாங்கும் தனிப்பெண்களின் நிலையையும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆய்வு செய்துள்ளன. இன்னுமொரு ஆணும் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறையையும், ஆதிக்க கருத்தியல்களையும் மறுவிசாரணைக்கு உட்படுத்துகிறார். இவ்விதழின் சிறப்பு ஆண்களின் கட்டுரைகளால் மேலும் சிறப்புப் பெறுகின்றது. பெண்களை இன, வர்க்க, சாதிய ரீதியில் பிரிக்கப்படுவதை நாம் அறிவோம். ஆனால் துரதிஷ்டவசமாக அவர்களை வேறுபிரிவினைகளுக்கும், ஆண்களுக்கு வகுக்கப்படாத பிரிவுகளுக்கு உட்படுத்துகிறார்கள். தேவதாசிகள், விலைமகள், பரத்தை

போன்று வகைப்படுத்தப்பட்ட பெண்களுடன் இன்னுமொரு வகையாக நேபாளத்தில் குமாரி என்று தெய்வத்திற்கு சமமாக பெண்குழந்தைகள் பூஜிக்கப்படுவதும் ஒரு வகை மாதிரி. இதைப்பற்றியும் ஒரு கட்டுரை ஆய்வு ரீதியில் இவ்விதழில் அடங்குகின்றது. இறுதியாக சமூகவியல் கோட்பாடுகளில் தொனிக்கும் ஆண்நிலை பண்புகளை ஒரு கட்டுரை விவரிக்கின்றது. இவ்வாறு பலவிதமான கருப்பொருள்களை உள்ளடக்கிய இதழாக இந் நிவேதினி வெளிவருகின்றது.

கட்டுரைகள் வாதப் பிரதிவாதங்களை எழுப்பக் கூடியன. கட்டுரை நியாயங்கள் பலரால் எதிர்க்கவும் படலாம் Post Feminism என்ற பின்னைய பெண்நிலைவாதம் Post Modernism என்ற பின்னைய நவீனத்துவத்தை எட்டியது. இவற்றில் புதைந்து கிடக்கும் அர்த்தப்பாடுகள் பல்முனைப்புப்பெற்றால், தீராதவாதங்களையும், எதிர்வாதங்களையும் தோற்றுவிக்கும். இவற்றில் பின்னைய (Post) என்ற பதம் கோட்பாடு ஒரு நீட்சியைக் குறிப்பதல்ல. மாறாக முன்னைய கோட்பாடுகளை முற்றாகவோ, அல்லது பகுதிகளாகவோ நிராகரிக்கின்றன. இங்குதான் பிரச்சினை உள்ளது. Post Feminism என்ற சொற்பதம் பலவாறாக உபயோகிக்கப்படுகின்றது. அதற்குரிய பொருளை உபயோகிப்போர் நிறுவத்தவறி விடுகிறார்கள். இதனால் இச்சொற்பதம் பல மாயைகளைத் தோற்றுவிக்கிறது. பொதுவாக இதை நாம் கீழ்கண்டவாறு விளக்கிகொள்ளலாம். இரண்டாம் நிலையில் தோன்றி பெண்நிலைவாதம் (70-80 வரையில்) முதலாம் கட்டம் (60-70 வரையில்) பல நெகிழ்ச்சிப் போக்குகளைக் கொண்டிருக்கின்றது. பல குறைபாடுகள் அதில் உள்ளன. ஆகையால் அவற்றை நிவர்த்தி செய்யவேண்டும். உதாரணமாக வர்க்கம், சாதி, இனம், ஐரோப்பிய, ஆசிய வேறுப்பாடுகள் போன்றவற்றின் அடிப்படையில் தோன்றும் வேறுபாடு முன்னைய பெண்நிலைவாதம் கணக்கில் எடுக்கவில்லை ஆகையால் அவற்றையும் ஒருங்கிணைத்து பின்னைய பெண்நிலைவாதம் தோற்றம் பெற்றது. இரண்டாவதாக பெண்நிலைவாதம் அதன் குறிக்கோளை, பால்நிலைச் சமத்துவத்தை அடைந்துவிட்டது. ஆகையால் இனிப்போராட்டங்கள் தோன்றவில்லை. இந்நிலையில் தற்போதைய பெண்நிலைவாதக் கோட்பாடுகளையும் இதற்கு முந்திய பெண்நிலைவாதக் கோட்பாடுகளையும் எதிர்நிலையில்

வைக்கமுற்படும் பின்னைய பெண்நிலைவாதம் சரியானதா? என்ற கேள்வியும் எழுப்பப்படலாம். ஏனெனில் முன்னைய கோட்பாடுகள் ஒரு விழிப்புணர்ச்சியின் வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் ஒரு புரட்சியையே தோற்றுவித்தது, அதை அகற்ற முடியாது, நீக்க முடியாது. பின்னைய வாதங்கள் எல்லாம் அன்று 60-80 வரை தோன்றிய கருத்தியல்களின் நீட்சியே. ஆனாலும் வேறுபல அம்சங்கள் கோட்பாட்டு ரீதியில் தோன்றின என்பதை மறுக்க முடியாது. இரண்டையும் நாம் ஏற்க வேண்டும்.

பெண்நிலை கற்கை நெறியை உள்ளடக்கிய நிவேதினி போன்ற சஞ்சிகைகள் அறிவு பூர்வமான பல கருத்துக்களையும் கோட்பாடுகளையும் முன்வைக்கின்றன. ஆனாலும் அவை அறிவு என்ற நிலையில் நின்று விடாமல் மாக்ஸியத்தைப் போல சமூக மாற்றத்திற்கும், சமூக மேம்பாட்டிற்கும், சமூகத்தை நிலைநாட்டுவதற்கும் ஆதார பூர்வமாக இருக்க வேண்டும்.

இது ஏனைய பல கற்கை நெறிகளில் இருந்து முற்றாக வேறுப்பட்ட ஒன்று என்பதை நாம் அழுத்திக் கூற விரும்புகின்றோம். வாசித்தோம், அறிவு பெற்றோம் என்று மட்டும் இல்லாமல் அவ்வறிவு சமூக மாற்றத்திற்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும். மாயைகளை அகற்றி பரம்பரைக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அகற்றிப் புதிய கொள்கை, கோட்பாடுகளையும் இயற்றுவதற்கு இக்கற்கை நெறி பயன்படவேண்டும். நிவேதினி அதற்கு ஒரு சாதனமாகத் திகழும் என்பதில் எமக்கு ஐயமில்லை.

**செல்வி திருச்சந்திரன்**
*பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்*

# பெண்களின் இன உரிமைப் போராட்டம்

**அப்துல் காதர் லெப்பை**

> *இக்கட்டுரை "போராட்டச் சிந்தனைகள்" என்ற நூலிலிருந்து முதல் கட்டுரையாக ஆசிரியரால் எழுதப்பட்டது. "எனது சிந்தனைகள் பாமரர்களுக்காக எழுதப்படவில்லை படித்துச் சிந்திப்பவர்களுக்காகத்தான் எழுதப்பட்டது" என்று 1. 2. 1980ல் அவரால் கூறப்பட்டதும். கவனத்திற்கெடுக்க வேண்டும்.*

**ஏன் இந்தப் போராட்டம்?**

இன்று பெண்கள் சுதந்திரம், விடுதலை, சம அந்தஸ்து என்று போராடுகிறார்கள். அரசியலில் வாக்குரிமையும் பெற்று விட்டனர். உயர்தரக் கல்வி கற்கின்றனர். உத்தியோகம் பார்க்கின்றனர். விண்வெளியையும் கடந்து விட்டனர். இவ்வகை முன்னேற்றங்களை இன்று பெண்ணினம் அடைந்துள்ளதென்பது மெய்யே. ஆனாலும் இம்முன்னேற்றம் உலகம் முழுவதும் ஒன்றுபோற் காணப்படவில்லை. சில தேசங்களிற் பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. உத்தியோகம் பார்ப்பதுமில்லை. உயர்தரக் கல்வியில்லை. இதை நோக்கும் போது இன்னும் பெண்களின் விடுதலைப் போராட்டம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. நாகரீகமடைந்த நாடுகளிற்கூட பெண்கள் உரிமைக்காக இன்னும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் பெண்குலம் இன விடுதலைப் போராட்டத்தில் இறங்கியதேன்?

எல்லாப் போராட்டங்களும் பொதுவில் மனித உரிமைப் போராட்டமென்று சொல்லப்படுகின்றது. ஆனால் இது ஆண், பெண்

என்ற இனப் போராட்டமாக இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இப்போராட்டத்தின் சாதக பாதகங்கள் ஒரு புறமிருக்க இது முடியாத ஒரு போராட்டமாக இன்றுவரையும் காணப்படுவதற்குரிய காரணங்களை நாம் ஆராய வேண்டும். இதைச் சரித்திரபூர்வமாய் ஆராய்வதால் பல உண்மைகள் நமக்குப் புலப்படும். கலாசாரமும் மதமும் இப்போராட்டத்தில் மிகத்தூரம் பங்குபற்றி இருக்கின்றன. பல இன, சமூக மக்கள் இதில் பங்குபற்றியுள்ளனர். பொதுவாக, உலகம் முழுவதுமே இதிற் பங்குபற்றியிருக்கிறதென்று நாம் சுருக்கமாய்க் கூறலாம்.

பெண்ணினத்தின் விடுதலைக்காக மேல் நாடுகளிலும் கீழ் நாடுகளிலும் பல ஞானிகள், தத்துவசாத்திரிகள், அரசியல் மேதைகள் காலத்துக்குக் காலம் போராடியிருக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் பெண்ணினத்தின் உயர்ச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். கவிஞர்கள் புரட்சிக் கவிதைகள் மூலம் சமூகத்தைத் தட்டி எழுப்பியிருக்கிறார்கள். இவ்விதம் எண்ணத்திலும் செயலிலும் பாடுபடவேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது? பெண்ணினத்துக்கு இது இயற்கையாயுள்ள அடிமைத்தளையா? அல்லது, இதை ஆணினம் வேண்டுமென்றே ஆக்கிவிட்டதா? இறைவனின் திட்டமான நோக்கு என்ன? மனிதன் இதிலே தவறிழைத்து விட்டானா? என்பது போன்ற பல வினாக்களுக்கு நாம் விடை காணவேண்டும். ஒரு பக்கம் ரம்பை என்றும் மறு பக்கம் பேய் என்றும், ஒரு பக்கம் உயிருள்ள மானிடப் பிறவி என்றும் மறுபக்கம் உயிரற்ற மரக் கட்டை என்றும், ஒரு பக்கம் கற்புக்கரசி என்றும் மறுபக்கம் கபடமுள்ள கணிகை என்றும் பலதரப்பட்ட நிலையில் இப்பெண் குலத்தை ஏன் வருணிக்க வேண்டும்? ஆகவே நடுநிலையில் நின்று இப் பிரச்சினையை நாம் ஆராயவேண்டி இருக்கிறது. அப்போதுதான் இதிலுள்ள சிக்கல்களை நாம் தெளிவாய்க் காணலாம். எங்கே தவறிழைக்கப்பட்டிருக்கிறதென்பதையும் திட்டமாய் அறிய முடியும்.

## சடத்துவ வேறுபாடுகள்

மதங்களின் செல்வாக்குக்குமுன் பூர்வீக மக்களிடம் காணப்பட்ட ஆசாரங்களை ஆராய்வதன் மூலம் சில உண்மைகளை நாம் அறியலாம். இவ்வாராய்ச்சியிற் காணப்படும் முடிபுகள் அநுமான

ரூபத்திலேயே இருக்கின்றன. இவ்வாராய்ச்சியில் இறங்குமுன் உயிரியலின் சில விதிகளை நாம் முதலில் மனதிற் கொள்ள வேண்டும். ஏனெனில் இவ்விதிகள் மனித இனம் இவ்வுலகிற் தோன்றியபோதே கூடத்தோன்றியவை. ஆகவே இவ்விதிகள் இயற்கை விதிகள் அல்லது இயற்கைச் சட்டங்கள். இவற்றை யாராலும் மாற்ற முடியாது. சரீர அமைப்பில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிற் சில வேறுபாடுகளுண்டு. அவ்வேறுபாடுகள் காரணமாகப் பெண் வலிமை குறைந்த இனம் (Weaker sex) என்று சொல்லப்படும். எலும்புகளின் அமைப்பும் தசைநார்களின் அமைப்பும் ஆணுக்கு இருப்பதுபோற் பெண்ணுக்கு இல்லை. ஜனனத்தின் தொழில் பெண்ணுக்கே உரியது. இத்தொழில் காரணமாய் அவளின் சரீரம் அடிக்கடி இளைத்துவிடுவதும் உண்டு. இக்காலங்களில் அவள் நோய் முதலியவற்றிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியவளாகிறாள். ஆணைப்போல் கடும் முயற்சி அவளாற் செய்ய முடியாது. குழந்தையை வளர்த்தல் தாய். இது மற்றைய பாலூட்டும் ஜீவராசிகளிடத்தும் காணப்படும் ஒரு பண்பு இவையெல்லாம் சடத்துவ காரணங்கள் சடத்துவ நிலையில் இவ்வேறுபாடுகள் ஜீவராசிகள் யாவற்றுக்கும் பொது. இந்த நிலையில் ஓர் ஆண் வேறு எந்த மத, தார்மீக, நியாயவாத தூண்டுதலுமின்றி வெறும் உணர்ச்சியறிவின் உந்துதலால் மட்டும் ஒரு பெண்ணை அடக்குவதாயின் அது சடத்துவ அடிப்படையில் மட்டுமே நிகழ முடியும். அதாவது, உடலமைப்பில் ஆண் வலிமையிற் கூடியது, பெண் வலிமையிற் குறைந்தது என்ற ஒற்றைக் காரணத்தால் மட்டுமே நிகழ முடியும். இது மிருக சுபாவத்தின் அடிப்படையிற் பொது. ஆகவே நாம் தேடவேண்டிய காரணம் இதுவல்ல. ஒரு சாதாரண உதாரணம் பெண்ணிலும் ஆண் வலிமையிற் கூடியது. ஆனால், இவை இரண்டையும்விட யானை வலிமையிற் கூடியது. ஆகவே யானை உயர்ந்த இனமா? இயற்கையின் முடிவு தலைகீழாகக் காணப்படுகிறது. வலிமையிற் குறைந்த ஒன்று வலிமையிற் கூடிய இன்னொன்றை வேறொரு வகையில் மிகைப்பதைக் காண்கின்றோம். இது சிருஷ்டியின் விசித்திரம். உதாரணமாக, ஒரு பெரிய யுத்த வீரன் தன் காதலிக்கு முன்னால் சோர்ந்து விடுகிறான். இவையெல்லாம் உயிரியலின் காரணங்களுக்குள் உட்பட்டவை. இவற்றைக் கொண்டு உயர்வு தாழ்வு பேச முடியாது. காதல் என்பதும் இந்த விதிக்குள் அடங்கியதே.

இவை உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் பொது, ஆகவே பெண்ணினம் விடுதலைக்காகப் போராடியதும் போராடிக் கொண்டிருப்பதும் இந்தச் சடத்துவ வேறுபாட்டை நீக்குவதற்காக அல்ல. இதற்காக எந்த ஞானியோ தத்துவ விற்பன்னனோ அறிஞனோ போராடவில்லை. போராட்டமெல்லாம் பின்வரும் கேள்விகளைப் பற்றியதுதான். எஜமான் அடிமை என்ற தோரணையில் பெண்ணினம் உரிமையிழந்து காணப்படுவதேன்? ஆணுக்குள்ள அதே உரிமை ஏன் பெண்ணுக்கில்லை? இந்த உரிமைகளை யார் மூடி மறைத்தவர்? இவை பற்றியே நாம் ஆராய வேண்டும்

## வேட்டுவப் பருவத்தில் பெண்ணினம்

மனிதன் வேட்டையாடும் பருவத்திலிருந்தபோது குடும்பங்கள் சிதறியே காணப்பட்டன. ஆண்கள் வேட்டைக்குச் செல்லப் பெண்கள் வேட்டைப் பொருளைப் பாதுகாத்தும் பக்குவப்படுத்தியும் வந்தனர். குகைகளிலும் தனி இடங்களிலும் கொடிய விலங்குகளுக்குச் சதா பயந்துகொண்டு வாழ்ந்தனர். இந்தப் பருவத்தில் பெண் அடிமையாக வாழ்ந்திருப்பாள் என்று எண்ண இடமில்லாமலிருக்கிறது. சில நேரம் குடும்பங்களுக்கிடையிற் போர் மூண்டபோது தலைவன் இறந்தால் அவனுடைய குடும்பம் வென்றவனுடைய குடும்பத்துடன் ஒன்றி இருந்திருக்கிறது. இதில் பெண் ஒரு கொள்ளைப் பொருளாகக் காணப்பட்டாலும் அவள் வீட்டு வேலைகளிற் சமபங்கைப் பெற்றிருக்கிறாள். இல்லையெனில் வேட்டைப் பொருளைக் கொண்டு இப்படிப்பிடிபட்டவர்களையெல்லாம் வைத்து உணவு கொடுப்பது அவ்வளவு இலகுவல்ல.

## கமத் தொழிலும் பெண்ணினமும்

வேட்டைப் பருவத்தைவிட்டும் கமம் செய்யும் பருவத்தில் மனிதன் இறங்கியபோது அங்கே தொழிற் பிரிவுகள் பல தோன்றியிருக்கின்றன. நாடோடியாய்த் திரிந்த குடும்பங்கள் நிரந்தரமாக ஓரிடத்தில் வாழத் தொடங்கின. மிருகங்கள் வளர்க்கப்பட்டன: பழக்கவும்பட்டன. பறவைகள், எலி, பூனை போன்ற சில பிராணிகள் மனிதனை அண்டியதும் இதே பருவத்திலேதான் இந்தச் சின்னம் இன்னும் அழிந்து போகவில்லை.

ஆண் நிலத்தைப் பண்படுத்தல், உழுதல் போன்ற வேலைகளைச் செய்ய பெண் அறுவடை செய்தல், தானியம் பிரித்தல், உமி நீக்கல், சேமித்தல், பாதுகாத்தல், வீட்டு மிருகங்களை வளர்த்தல் போன்ற பல தொழில்களில் ஈடுபட்டாள். இதனால் தொழிற்பிரிவிற் பெண்களின் பங்கு அதிகம் வேண்டப்படுவதாயிற்று. ஒரு தலைவன் இதற்காகப் பல பெண்களை வைத்திருக்க வேண்டியவனாயும் இருந்திருக்கிறான். பலதாரமணம் சாதாரணமாகவே வேரூன்றியிருக்கிறது. போரிலே கொள்ளைப் பொருளாகப் பிடிபட்ட பெண்கள் வயலிலே வேலை கொள்ளப்பட்டனர். எல்லாரும் உணவுக்காக உழைத்தனர். இந்த வாழ்க்கையில் ஓரளவு ஓய்வு காணப்பட்டதும் இந்த ஓய்வு வேறு இரசாயன முயற்சியில் செலவிடப் பட்டிருக்கிறது. இந்த நிலையிற் பெண் ஆணுடன் சமநிலையில் நின்றிருக்கிறாள்.

இங்கே நிலம் பொதுவுடமை. அது யாருக்கும் சொந்தமில்லை. ஏனெனில் நிலம் ஏராளமாக இருந்தது. மனித முயற்சி மட்டுமே தேவை. ஆனால் மனிதப் பெருக்கம் குறைவு. இதனால் விரும்பிய குடும்பம் விரும்பிய நிலத்தைத் தெரிந்தெடுத்துக் கொண்டது. குடும்பங்கள் நெருங்கின. வம்சம் உண்டாயிற்று வேட்டைப் பருவத்தில் வம்சம் உதயமாகவில்லை. இப்பருவத்திற் பலதாரமணம் தோன்றியபோதும் சில கட்டுப்பாடுகள் இருந்தன. கலாசாரம் உதயமானதும் இப்பருவத்திலேயே.

### நில உடமையிற் பெண்ணினம்

வளமுள்ள நிலம் குறைந்து சனம் பெருகியதும் நில உடமை தோன்றலாயிற்று. ஆதியிற் குடியேறியவர்களிடம் வளமுள்ள நிலங்களும் அப்பால் வந்து குடியேறியவர்களிடம் வளம் குறைந்த நிலங்களும் சிக்கின. மேலும் போகப் போக மலட்டுத் தரை நிலங்களே மிஞ்சின. இவற்றைப் பக்குவப்படுத்த மனித சக்தி அதிகம் தேவைப்பட்டது. விளைச்சலும் குறைவாய் இருந்தது. இந்தப் பருவத்திலேதான் நிலச்சுவாந்தாரி முறை ஆரம்பமானது. வளமான நிலமுள்ளவன் அதனைத் தானே செய்யாமல் தேவைப்பட்டோனுக்குக் குத்தகைக்கு விட்டுவிட்டுத் தான் ஓய்வு பெற்றான். இதனால் குத்தகை கொடுத்தோனும் குத்தகை பெற்றோனும் இலாபம் கண்டனர். மலட்டுத்

தரையைச் செய்வதிலும் வளமான நிலத்தைச் செய்தால் கூடிய விளைச்சலைப் பெறலாம். அதில் ஒரு பகுதியை நிலச் சொந்தக்காரனுக்குக் கொடுத்துவிட்டு மிகுதியை உற்பத்தி செய்தவன் பெறலாம். இந்த முறை ஈற்றில் நில உடமையைச் சட்டபூர்வமாக்கியதுடன் ஒரு கூட்டத்தினரைச் சும்மா இருந்து கொண்டே வாழ்க்கையை அநுபவிக்கும் நிலைக்குத் தள்ளிற்று. காலவோட்டத்தில் இவர்கள் நிலப் பிரபுக்களாயினர் அரசர்களும் தலைவர்களுமாயினர் சட்டத்தை இயற்றுவோரும் அதனை அமுல் நடத்துவோருமாக இவர்கள் மாறினர். அதிகாரம் என்ற எதிர்பாராத ஓர் ஆயுதம் அவர்களின் கைகளிற் சிக்கியது. இதனால் இவர்களின் சமூக நிலை உயர்ந்தபோதும் சமூகத்திலே இவர்கள் தனிப்படுத்தப்பட்டனர். இவர்களுக்குப் பாதுகாப்பும் மனித உதவியும் அதிகம் தேவைப்பட்டன. இவர்களைச் சுற்றிக் காவலர், ஏவலாளர், முகமன் கூறுவோர், சந்துஷ்டி செய்வோர், இரசனையிலாழ்த்துவோர், இன்பத்தை ஊக்குவோர் என்று பலதரப்பட்ட பணியாளர்கள் பெருகலாயினர். இவர்களும் ஈற்றிற்பிறருழைப்பில் உண்ணும் ஒரு பரதேசிக் கூட்டமாக மாறினர்.

கமக்காரனோ நிலச்சுவாந்தாரருக்காகவும் அவரைச் சுற்றியிருந்த இந்தப் பரிவாரங்களுக்காகவும் உழைத்தான்.

இதில் நிலச்சுவாந்தார் குடும்பம், அவரைச் சேர்ந்த பரிவாரங்களின் குடும்பம் ஆகிய இரண்டிலும் பெண்கள் வீட்டுப் பொருளாக மாறினார். இவர்கள் உழைப்பதில்லை; உழைக்கவும் தேவையில்லை. ஆணின் தேவையைப் பூர்த்தி செய்யும் உயிருள்ள அலங்காரப் பொருளாகப் பெண்கள் மாறினார். இந்த அலங்காரப் பொருள் போகச் சின்னமும் அடிமைச் சின்னமுமாக மாறியது. ஆனால் இந்த மாற்றம் கமக்காரன் குடும்பத்தில் ஏற்படவில்லை. அவனும் அவளும் உழைப்பிலும் மற்றும் தேவைகளிலும் சமநிலையிலேயே நின்றனர். அவன் விதைக்க அவள் அறுவடை செய்தாள். குடும்பத்தை நடத்துவதில் அவர்கள் இருவருக்குமிடையே சம அந்தஸ்து நிலவியது.

ஆரம்பத்தில் உழைப்புச்சக்தியின் தேவை காரணமாகத் தோன்றிய பலதாரமணம் நிலமும் வருவாயும் குறையக் குறைய ஏகதாரமணத்தில்

வந்து நின்றது. இது நிலச்சுவாந்தார் முறை வளர்வதற்கும் உறுதிபெறுவதற்கும் மிக வாய்ப்பாக இருந்ததால் ஏகதாரமணம் தெய்வீக ரீதியில் மிக உயர்ந்ததாகப் பிரசாரம் பண்ணப்பட்டது. இதை வியந்து கூறும் வேதங்களும் சட்டங்களும் காலப்போக்கில் உதயமாகி ஈற்றில் அது கட்டாயச் சட்டமாகவே மாறிவிட்டது. கமக்காரனோ ஏகதாரமணத்தில் வாழ்ந்தான். ஒரு பக்கம் சுயநயம் இதற்கு அநுசரணையாக இருந்தது. ஒரு காலத்தில் அடிமைகள் விவாகஞ் செய்யக்கூடாது என்ற சட்டம் இங்கிலாந்தில் இருந்திருக்கிறது. வருவாய் கருதி நிலப்பிரபுத்துவ ஆட்சி சுயநயத்தின் பேரிலேயே இச்சட்டத்தை ஆக்கியிருக்கிறது.

இது ஒரு பக்கம் இருக்க, போகச் சின்னமாக மாறிய பெண்ணினம் நிலச்சுவாந்தாரின் கீழ் வீட்டுப் பொருளாக மாறியது. பலதாரமணம் இங்கே விரிந்தது. குடும்பப் பெண், வைப்பாட்டி, இடக்கைத் தாரம், வலக்கைத் தாரம் என்றெல்லாம் ஆண்களின் சுகபோகக் கருவியாகப் பெண்கள் மாறினர். எந்த உரிமையும் இவர்களுக்கில்லை. அந்தப்புர வாழ்க்கையும், அவர்களைப் பாதுகாக்க அலிகள் வேறும் இருந்தனர். இந்தச் சிறையிலே பெண்கள் ஆனந்த ரம்பையர்களாக வாழ்ந்தனர். நிலச் சுவாந்தார்களின் பரிவாரங்களும் இதே நிலையிற்தான் காணப்பட்டனர். கணிகையர் கோயிற் பூசாரிகளின் கைப்பொம்மைகளாகினர். பரத்தை சட்டபூர்வமாக்கப் பட்டாள். இவற்றையெல்லாம் நிலச் சுவாந்தார்களும் அவர்களின் பரிவாரங்களும் அணைத்தும் ஆதரித்தும் வந்தனர். ஓர் உயர்சாதிப் பிராமணன் எத்தனை பெண்களையும் வைத்திருக்கலாம் என்ற அளவுக்குக் கீழ்நாட்டிற் பலதாரமணம் அங்கீகரிக்கப்பட்டிருந்து. இவ்விதம் இவர்களின் கீழ் பெண்ணினம் எந்தச் சுய உணர்வுமற்று அடிமையாகவே கிடந்தது.

### செமிற்றிக் சமூகத்திற் பெண்கள்

மந்தை மேய்த்துக்கொண்டு நாடோடிகளாக வாழ்ந்த செமிற்றிக் மக்களிடமும் பலதாரமணம் பரவியிருந்துள்ளது. இவர்களிடத்திலும் பெண் ஒரு போகப் பொருளாகவும் வீட்டுப் பொருளாகவுமே காணப்பட்டுள்ளாள். இம்மக்களின் வாழ்க்கை நிரந்தரமானதல்ல.

வனாந்தரங்களையடுத்த சில செழிப்புள்ள புறப்பிரதேசங்களில் ஓரளவு நிரந்தர வாழ்க்கை காணப்பட்டாலும் பெரும்பாலாக அவர்கள் மந்தைகளுடன் இடம்விட்டு இடம் பெயர்பவர்களாகவே இருந்தனர். இவர்களும் பல குடும்பங்கள் சேர்ந்த வம்சமாகி இடத்துக்கிடம் சிதறி வாழ்ந்தனர். இவர்களிடையே அடிக்கடி வம்சச் சண்டைகள் ஏற்படும். வழிப்பறி, பழிவாங்கல் போன்ற குணங்கள் இவர்களிடையே மிகைத்து நின்றன. வாழ்க்கை நிலை கஷ்டமானதாலும் கால்நடைகளே செல்வமாக இருந்ததாலும் இடம்விட்டிடம் பெயரவேண்டி இருந்ததாலும் இவர்கள் துணிவும் போர்க்குணமும் உள்ளவர்களாகவே இயற்கையில் மாறினர். வம்சம் வம்சமாகத் திரண்டு சிதறி வாழ்ந்ததால் ஒரு தலைவனுக்குக் கீழ் எல்லா வம்சங்களும் கட்டுப்படவேண்டும் என்ற நியதி இருக்கவில்லை. இதனால் வம்சத்துக்கு வம்சம் தலைவன் வேறுபட்டான். வம்சச் சண்டைகள் சாதாரணமாகவே ஏற்பட்டன. சண்டையிற் தோற்ற வம்சம் வென்ற வம்சத்துக்குப் பூரண அடிமையாகியது. ஆண்கள் அடிக்கடி போரில் மாள்வதால் பெண்கள் தொகையிற் கூடினர். தோற்ற குடும்பங்களின் பெண்கள் கொள்ளைப் பொருளாகவே கணிக்கப்பட்டனர். வென்ற வம்சத்திலுள்ளவர்கள் இப்பெண்களை அடிமைகளாகப் பங்குவைத்துக் கொண்டனர். தலைவனோ தனக்கு விரும்பிய பெண்களை முதலில் எடுத்துக் கொள்வான். இப்பெண்களைக் கொன்றுவிடுதல் இவர்களின் வழக்கம். தந்தை இறந்தால் சொத்துக்களுக்குத் தனயனே உரிமையாவான். இந்த உரிமை தாயைக்கூடத் தன் மனைவியாக்கிக் கொள்ளவும் அவனுக்கு இடம் கொடுத்தது. பெண் இவர்களின் கைகளில் ஒரு கடைச் சரக்குபோலும் இருந்திருக்கிறாள். அவளை விலை கொடுத்து வாங்குவதும் விற்பதும் இங்கே சாதாரண வழக்கம்.

வாழ்க்கைக் கஷ்டமும், போர்க் குணமும், அலைச்சலும், வம்சச் சண்டையும், கொலையும் மலிந்த இம்மக்களுக்கிடையில் ஆண்களின் தொகை குறைந்தே காணப்படும். இதனால் ஆண்களுக்கு இன அந்தஸ்து உச்சப்படியில் நின்றது. ஆணே படைப்பில் உயர்வு என்று கருதினர். ஆண் வழியாகவே வம்சம் பரம்பரையைக் கணக்கிட்டது. பெயர்களும் ஆண் வழியாகவே தொடர்ந்தது. குலப் பெருமை வளர்ந்தது. இதுவும் ஆண் வழியாகவே அப்பெருமையை வளர்த்தது. பெண்ணோ கால்நடையோடொரு கால்நடையாகவே கணிக்கப்பட்டாள்.

பெண்ணினம் தேவைக்கதிமாகப் பெருகுவதை அவர்கள் விரும்பவில்லை இதனால் பெண் குழந்தை பிறந்ததும் அதைக் கொன்றுவிடும் வழக்கமும் இவர்களிடம் இருந்தது.

ஓரளவு நிரந்தர வாழ்க்கை நடத்தியவர்களிடம் சில கட்டுப்பாடுகளும் ஒழுங்கு முறைகளும் காணப்பட்டன. ஒரு தலைவனுக்குக் கீழே இவர்கள் கட்டுப்பட்டனர். தலைவன் நில உடமையும் பொருள் உடமையும் உள்ளவனாக விளங்கினான். அவனே அரசனாகவும் சட்டம் இயற்றுபவனாகவும் இருந்திருக்கிறான். நிலச்சுவாந்தார் முறையிற் காணப்பட்ட அத்தனை அம்சங்களும் இவனிடத்திலும் இருந்தன. பல மனைவிகள், பல வைப்பாட்டிகள், பரத்தைகள் என்று பரிவாரங்களாகவே இவனிடத்திற் பெண்கள் இருந்தனர் தனக்குத் தேவைப்படாதபோது சந்தையில் அவர்களை அடிமைகளாகவே விற்றுவிடுவான். காவலும் கட்டும் பெண்களுக்கு அதிகம். விலங்குகளைக்கூடச் சிலநேரம் காவலுக்காகப் போட்டுவைப்பான். ஆண் அடிமைகளை வாங்கி அவர்களை அலிகளாக்கிக் காவல் புரிய விடுவான். விருந்தாளிகளை உபசரித்தலில் பெண்களையும் கொடுத்து உபசரித்தல் சம்பிரதாயம் உணவு, மது, மாது, இவை மூன்றாலும் உபசரித்தல் கீழ் நாடுகளிலும் வழக்கமாக இருந்திருக்கிறது. தலைவனைப் போலவே அவனது பரிவாரங்களும் பெண்களை வைத்திருந்தனர். 'மலரைக் கசக்கி மணந்ததும் வீசி விடுதல்' என்ற போக்கலேயே பெண்ணினம் இவ்வகுப்பினருக்குள் இருந்திருக்கிறது.

மீதியர் பபிலோனியர், அசீரியர், பார்சியர் ஆகிய மக்களிடத்திற் பலதாரமணம் எண்ணிக்கையற்று நின்றது. மூசா நபியின் வருகைக்கு முன் யூதர்களும் இவ்விதமே வாழ்ந்துள்ளனர். ஓர் எபிரேயன் எத்தனை மனைவியரையும் வைத்திருக்கலாம். சீரிய, பொனிஷிய மக்களிடம் எவ்விதக் கட்டுப்பாடுமின்றிச் சர்வமும் விபசார மயமாகவே இருந்திக்கிறது.

அதென்ஸ் மக்களிடம் பெண் கால்நடையாகவே இருந்துள்ளாள். அவளை விற்கலாம், வாங்கலாம், வேண்டாவிட்டால் மற்றவருக்குக் கொடுத்திடலாம். சந்தானவிருத்திக்கு இவள் தேவையே தவிர

மற்றப்படி இவள் ஒரு தீமையின் சின்னம் என்ற கொள்கை அவர்களிடம் இருந்திருக்கிறது. சீனரோ காலில் இரும்புச் சப்பாத்து அணிந்து பெண்களின் பாதங்களைச் சிறிதாக வளரவிட்டனர். இதனால் பெண்கள் வேகமாய் ஓடவோ நடக்கவோ முடியாது. பர்மியர் பெண்களின் கழுத்தில் வளையங்கள் போட்டு நீட்டினர். மலாயர் அவளை அரையுடையில் நடமாடவிட்டனர். இந்துக்களுக்குள் பலதாரமணம் எல்லை கடந்திருந்தது. இது பற்றிப் புராணங்கள் விரிவாய்க் கூறும் இவ்விதம் நாம் நோக்கும்போது ஓரளவு நாகரீகம் பெற்ற மேல் நாட்டிலும் கீழ் நாட்டிலும் பெண்ணினம் போகத்தின் சின்னமாகவே கணிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

## பூர்வீக ஆபிரிக்காவிற் பெண்கள்

ஆபிரிக்காவில் உள்ள நீக்ரோ மக்களிடம் பெண்ணினம் எவ்விதம் இருந்த தென்பதைப்பற்றித் திட்டமான பூர்வ சரித்திரமில்லை. மேல் நாட்டவரும் அராபியரும் எழுதிவைத்திருக்கும் சரித்திர ஏடுகளைக்கொண்டு சில உண்மைகளை நாம் அறியலாம். ஆபிரிக்காக் கண்டம் இருண்ட கண்டமாகப் பல காலம் இருந்திருக்கிறது. ஆடையின்றி முழு நிர்வாணமாகவே இம்மக்கள் வாழ்ந்துள்ளனர். நிர்வாணமாகவே இம்மக்கள் வாழ்ந்துள்ளனர் நரமாமிசபட்சினிகளாகவும் இவர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்களை வேட்டையாடிப் பிடித்து அடிமைகளாக அமெரிக்காவுக்கு ஆங்கிலேயர் ஏற்றுமதி செய்தபோதிலும் அவர்களைப்பற்றிய பூர்வீக வரலாற்றை யாரும் எழுதிவைக்கவில்லை. காட்டுமிராண்டிகள் என்ற தோரணையில் அவர்களை ஒழித்துக்கட்டி அவர்கள் வாழ்ந்த இடங்களை மேல் நாட்டார் சுவீகரித்ததுதான் இன்று சரித்திரமாக இருக்கிறது. வட ஆபிரிக்கா ஏலவே நாகரீகம் பெற்றிருந்திருக்கிறது அபிசீனியாவைப்பற்றியும் பூர்வ சரித்திரம் உண்டு. மத்திய, தென் ஆபிரிக்காவைப்பற்றி யாரும் பூர்வ வரலாறு எழுதவில்லை. சகாரா வனாந்தரம் வடக்கே வாழ்ந்த நாகரீக மக்களைத் தெற்கே வர்விடவில்லை. மத்திய ஆபிரிக்கா சோலைக் காடும் சகதியும் கொடிய விலங்குகள் வாழும் இடமுமாக இருந்தது. சவன்னாப் பிரதேசத்தில் சிங்கம், காண்டாமிருகம், குரங்கு வகை, பாம்பு, யானை முதலிய பல பயங்கர மிருகங்களும், ஊர்வனவும், வண்டுகளும்

வாழ்ந்தன. சவன்னாப் புல் ஓர் ஆளின் உயரத்துக்கு மேலாகவே வளர்ந்திருந்தது. தென்னாபிரிக்கா தென் சமுத்திரத்தைத் தொட்டுக்கொண்டிருந்தது. அராபியர் கப்பலோட்டினாலும் இந்த எல்லைவரை அவர்கள் போகவில்லை. மேற்கே பொற்கரைப் பிரதேசம் கிழக்கே சன்ஜிபார் வரையுமே அவர்களின் கப்பல் நங்கூரம்பாய்ச்சியது. வஸ்கொடகாமா தென்னாபிரிக்க முனையைச் சுற்றும்வரை நமக்கு இப்பிரதேசம் இருட்டாகவே இருந்திருக்கிறது. அபிசீனியா அராபியாவோடு இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பதாகவே தொடர்பு பூண்டுள்ளது. கிறிஸ்தவ மன்னன் அதை ஆண்டுகொண்டிருந்ததாக நாம் அறிகிறோம்.

நீக்ரோ மக்கள் பல வம்சங்களாகச் சிதறி வாழ்ந்திருக்கின்றனர். இதனால் பல பாஷைகள், பல கொள்கைகள் தொடர்பற்ற முறையிற் தோன்றியிருக்கின்றன. 200க்கு மேற்பட்ட பாஷைகள் அவர்களிடையே வளர்ந்துள்ளன. இயற்கை வணக்கம், பேய் வணக்கம் பலிகள் முதலியன பரவியிருந்திருக்கின்றன. எல்லாம் பயங்கரத் தோற்றமே. எலும்பு முள், இலை, பூ, தோல், கொம்பு, இறகு போன்றவற்றை ஆபரணங்களாக அணிந்துள்ளனர். அரை நிர்வாணமும் முழு நிர்வாணமும் எங்கும் பரவியிருந்தன. சரீரத்தை அலங்கோலப் படுத்தல் அழகாக இருந்திருக்கிறது. பெண்களை அழகு படுத்துவதில் அவர்கள் கொண்ட முறை அவர்களுக்கே சொந்தமானது. காது, உதடு, மார்பு, முதலிய உறுப்புகளைத்துளை போடல், புள்ளியிடுதல், பச்சை குத்தல் போன்ற மாதிரியில் நிரந்தர மாற்றஞ் செய்து அழகு படுத்தல் அவர்களின் மரபு. நாம் சொல்வதானால் அதைக் காட்டுமிராண்டிச் சின்னமென்றுதான் சொல்வோம். இம்மக்கள் மிக அநாகரீக வாழ்க்கையில் பூர்வீகத்தில் இருந்திருக்கிறபடியால் இவர்களின் வாழ்க்கைமுறை, பெண்களின் அந்தஸ்து ஆகியன பற்றி நாம் எதுவும் ஓர் எடுத்துக்காட்டாகக் கூறமுடியாமலிருக்கிறது. வம்சத் தலைவன் தனக்கு விரும்பிய எத்தனை பெண்களையும் மனைவிகளாக வைத்திருக்கலாம் என்ற பூர்வீக வழக்கம் இன்னும் அவர்களைவிட்டு மறையவில்லை.

சில பூர்வீக மக்களிடம் பெண்களே குடும்பத்தில் தலைமைப் பீடத்தைத் தாங்கியிருக்கின்றனர். பிள்ளைப் பெறுதல் பெண்ணாயிருந்தாலும் ஆணே அதை வளர்க்கும் பொறுப்பை

ஏற்றிருக்கிறான். பெண்ணே தனக்கு விரும்பிய ஆணை விவாகஞ் செய்தாள். இவர்களிடம் ஒரு பெண் பல ஆண்களை விவாகஞ் செய்யும் வழக்கமும் இருந்திருக்கிறது. திபெத்தில் வாழும் மக்களைத் தவிர வேறு யாரிடத்திலும் இவ்வழக்கம் இன்றில்லை.

வேட்டையாடும் பருவத்தில் ஆண் பெண்ணுக்கிடையில் சமநிலை காணப்பட்டிருக்கிறதென்று கண்டோம். இச்சமநிலை உழைப்புச்சக்தியின் தேவை நோக்கியே ஏற்பட்டிருக்கிறது. மனிதன் கமம் செய்து வாழத்திரும்பியதும் இதே உழைப்புச்சக்தி மேலும் தேவைப்பட்டது. இதில் பெண்ணின் உழைப்புச்சக்தி அதிகம் தேவைப்பட்டதால் சம அந்தஸ்து நிலவினாலும் பலதாரமணம் உருவாகியிருக்கிறது. ஆனால் நில உடமை, பொருளுடமை ஏற்பட்டு ஒரு கூட்டம் உழைப்பின்றிச் சும்மா இருந்துகொண்டு அதிகார தோரணையில் வாழத்தொடங்கியதும் பெண்ணின் உழைப்புச்சக்தி தேவைப்படாமல்விட்டது. இதனால் அவள் போகப் பொருளாகமட்டும் மாற எல்லா உரிமையுமிழந்து. அடிமையானாள். பலதாரமணம் போகத்தின் அடிப்படையில் வளர்ந்தது, இது கட்டுக்கடங்காமற்போய் வைப்பாட்டி இடக்கைத்தாரம், வலக்கைத்தாரம், பரத்தை என்ற பலவித ரூபத்தில் பெண்ணினத்தைக் கீழே தள்ளிவிட்டது. இதிலிருந்து பெண்ணினம் இன்னும் விடுதலை பெறவில்லை. இந்தச் சின்னங்கள் இன்னும் பல இனமக்களிடம் இருந்துகொண்டுதானிருக்கிறது.

**கிறிஸ்தவமும் பெண்களும்**

கிறிஸ்தவமதம் ஆரம்பத்தில் பெண்ணினத்தை ஓர் உயர்ந்த அந்தஸ்தில் வைத்திருந்ததாகத் தெரியவில்லை. “ஏதன் தோட்டத்திலிருந்து ஆதாமை தடுக்கப்பட்ட கனியைச் சாப்பிடச் செய்தவள் ஏவாள். இதனால் தேவனின் கட்டளையை மீறும்படியாக ஆதாமைத் திருப்பி விட்டாள். ஆதாம் இதனால் பாபம் செய்தான் அந்தப் பாபம் மனிதகுலத்தின் பிறப்புப் பாபமாய் விட்டது.” என்ற கொள்கையில் பெண்ணை ஒரு தீமையாகவே அவர்கள் கருதினர். “பெண்ணை ஒரு தேவையான தீமை, உணர்ச்சியின் தோற்றம், விரும்பும் அபாயம், வீட்டு நாகம், மரணக்கவர்ச்சி, வாதைதரும்

நோய்'' என்றெல்லாம் அவர்கள் கூறினர். தேத்துலியன் தனது நூலில் பெண்ணை ''சாத்தானின் நுழைவாசல்'' என்று வருணிக்கிறார். இதன் காரணமாக விவாகஞ் செய்வதைப் பாபமென்றனர். இந்த அதீத மனப்போக்கு கிறிஸ்தவ நாடுகளில் வியபிசாரத்தைத் தூண்டிவிட்டது புதுமையல்ல. விவாகமென்பது ஆணினுடைய அபிலாஷையை நிறைவேற்றுதற்குரிய ஒரு தொடர்பாக நின்றது. விவாகஞ் செய்யாது தனிமையில் இருந்தால்தான் ஞானம் பிறக்கும் என்ற கொள்கை பெண்ணினத்தை ஒதுக்கி விடுவதற்கும் அதைக் கீழ்நிலையில் நோக்குவதற்கும் இடங்கொடுத்துவிட்டது. இந்தக் கீழ்நிலையிலிருந்து பெண்ணினம் இன்னும் விடுதலையாகவில்லை.

### கீழ்நாடுகளிற் பெண்கள்

கீழ்நாடுகளில் பலதாரமணம் இருபாலாருக்குமிடையில் பரவலாக இருந்திருக்கிறது. ஆரியரிடையே பலதாரமணம் பரவியிருந்ததைப் புராணங்களும் வேதங்களும் கூறுகின்றன. பெண் ஒரு போகப்பொருளாகவே இருந்திருக்கிறாள். பிராமணரும் சத்திரியரும் பலதார மணத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். சிறுபிள்ளை விவாகம், விதவையின் தலைமுடி களைதல், அவளை ஒதுக்கிவைத்தல், மறுவிவாகம் மறுத்தல், பீடையென்று விதவையை வைபவங்களிலிருந்து நீக்கிவைத்தல், கணவனை வணங்குமாறு பணித்தல், சொத்துரிமை நீக்கல் ஆகிய இத்தகைய சம்பிரதாயங்களால் பெண்ணினம் அடிமையாகவே வாழ்ந்திருக்கிறது. விட்டுப் பிரிதல் என்பது இல்லை. இதனால் 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற நியதியில் அவள் அழுந்திக்கொண்டே இருந்தாள். புருஷன் இறந்தபின் விதவையாகப் பீடைபோன்று வாழ்வதைவிட உடன்கட்டை ஏறல் ஒரு வழிக்கு நல்லதே. உயிரோடு நெருப்பில் விழுந்து துடித்து மடிவதை வேதபாரகரும் மற்றவரும் மனதில் எந்த வகையான குத்துதலுமின்றிப் பார்த்துக்கொண்டு நின்றனர். அறியாப் பிராயத்தில் தாலிகட்டி அறியாப் பிராயத்தில் விதவையாகிச் சௌனம் பண்ணிய தலையுடன் ஒரு மூலையில் பீடையாகப் பெண் தள்ளப்பட்டாள். வேதங்களே இதை ஏவுகிறபோது மற்றவர் யாது பேசலாம்? இந்தத் தளையிலிருந்து பெண்ணினம் இன்னும் பூரணமாய் விடுதலையாகவில்லை.

கற்பு என்பது பெண்ணுக்கே உரியதென முத்திரையிடப்பட்டது. கணவன் பரத்தை வீடு போவதை மனைவி சகித்துக் கொண்டிருப்பதைக் 'கற்பு' என்று தர்மம் வரையறுத்தது. வைப்பாட்டி, இடக்கைத்தாரம், கணிகையர் கூட்டுறவு, இவையெல்லாம் ஆணுக்கு உரிமையான வழக்குகள். குடும்பப் பெண் இவற்றையிட்டு எதுவும் பேசக் கூடாது. அப்படிப் பேசாமல் அந்தக் கணவனை தெய்வமாகக் கொண்டு வாழ்வதுதான் அவளின் கற்புக்கு அறிகுறி எனத் தர்மம் பேசியது. இந்த நிலையில் இருபக்கமும் பெண் ஒரு போகப் பொருளாகவும் அடிமைப் பொருளாகவுமே காணப்படுகிறாள். வேறு ஏதும் உயர்ந்த அந்தஸ்தில் அவள் வைக்கப்படவுமில்லை, நோக்கப்படவுமில்லை. ஒரு பக்கம் ஆணாகிய தெய்வத்தைக் கும்பிடும் கட்டுப்பட்ட அடிமை, மறுபக்கம் ஆணின் திருவிளையாடல்களுக்கெல்லாம் இணங்கிப்போகும் கட்டுப்படாத அடிமை. கட்டுப்படாத அடிமை சுரண்டக்கூடிய அளவு சுரண்டிக் கொள்ளும். இது அங்கீகரிக்கப்பட்ட ஒரு வழக்கமாக இருக்கிறது.

### தேவதாசிகள்

தேவதாசிமுறை எதிர்பாராத ஒரு சீரழிவைப் பெண்ணினத்துக்குக் கொடுத்துவிட்டது. கணிகையர் அங்கீகரிக்கப்பட்ட ஓர் இனமாயினர். அவர்களின் வாழ்க்கைமுறை சட்டத்துக்கு அப்பாற்பட்ட ஒரு கூட்டுறவாக நின்றது. ஆண்களின் போகச் சின்னம் என்ற ஒரு முத்திரையுடன் அவர்கள் தம்மைப் பெருமைப்படுத்திக் கொண்டனர். இவர்கள் முன்னர் கூறியதுபோல் நிலப்பிரபுக்களதும் அவர்களின் பரிவாரங்களதும் திருவிளையாட்டுப் பொம்மைகள். அதனால் இவர்களிடத்தில் பல வகையான நோய்கள் தோன்றுதல் இயல்பு. இந்த நோய்களிற் சிக்கியவர்கள் ஈற்றில் பெண்ணினத்தையே தூஷிக்கத் தொடங்கிவிட்டனர். இவ்விதம் தூஷித்து இலக்கியங்களே தோன்றின.

இந்த வடு மறுபக்கத்தில் சந்நியாசத்துக்கு வழிகோலியிருக்கிறது. பெண்ணினத்தை ஒரு காரணமுமின்றி வெறுக்கும்படியாகவும் இது ஆக்கியிருக்கிறது. அதிகம் தூஷித்து இலக்கியம் இயற்றியவர்கள் பொதுவாகப் பரத்தைகளிடம் சிக்கியவர்களாவே காணப்படுகின்றனர்.

இவர்கள் பெண்ணைப் பேய், மாயை, நரகம், ஊத்தைக் குழி, அஸூயை, வஞ்சகத்தின் இருப்பிடம், பிறவித்துன்பம், காமத்தின் கபாடம் என்றெல்லாம் வர்ணித்திருக்கின்றனர். கணிகையரைச் சட்டபூர்வமாக ஆதரிக்கும் ஓர் இனத்தில் பெண்ணினம் இவ்விதம் வருணிக்கப்படுவது இயற்கையே. ஏனெனில் இந்தக் தீர்ப்பைக் கூறுவது ஆணே. பெண் எக்காலமும் இவ்வாறு கூறமாட்டாள். இந்தத் தீர்ப்பிலிருந்து பெண்ணினம் இன்னும் விடுதலை பெறவில்லை.

உழைப்புச்சக்தியிலிருந்து விடுதலையான மூன்றாந்தரப் பிரிவுதான் இந்தக் கணிகையர் கூட்டம். முதற் கூட்டம் நிலப்பிரபுக்களும் அவர்களின் குடும்பங்களும், இரண்டாவது கூட்டம் அவர்களின் பரிவாரங்களும் அவர்களின் குடும்பங்களும், மூன்றாவது கூட்டமே இந்தக் கணிகையர் தர்க்கரீதியில் நாம் நோக்கும்போது ஒரு கமக்காரனும் அவனது மனைவியும் இந்தக் கணிகையருக்காகவும் உழைக்கவேண்டியிருந்தனர்.

### இஸ்லாமும் பெண்களும்

கட்டுக்கடங்காது பெண்ணைப் போகப் பொருளாகவும் சந்தைச் சரக்காகவும் பாவித்துவந்த நாடோடி மக்கள் மத்தியில் இஸ்லாம் தோன்றியது. ஆரம்ப காலத்தில் இம்மதம் இந்தக் கட்டுப்பாடற்ற மக்களைத் திருத்துவதில் பல கஷ்டங்களை அனுபவித்தது. தெருவிலே ஆண்களின் சேஷ்டைப் பொருளாகக் காணப்பட்ட பெண்ணை அது வரம்பிட்டுத் தடுத்தது. முகமூடி (பர்தா) அணிந்தே பெண்கள் வெளிக்கிடவேண்டுமென்று அது சட்டம் செய்தது. பெண்கள் ஆண்களோடு பகிரங்கமாய்க் கலந்துறவாடக் கூடாதென்று தடை போட்டது. பெண்கள் வீட்டிலேயே அதிகம் தரிக்க வேண்டுமென்று சொன்னது. கண்டபடி பெண்களை மனைவியராக்குவதும், விடுவதும், விற்பதும், கொல்லுவதுமாயிருந்த மக்களிடம் முடியுமாயின் நான்கு மனைவியரை மட்டும் வைத்திருக்கலாமென்றும், அதுவும் சட்டபூர்வமாய் வைத்திருக்க வேண்டுமென்றும், அவர்களை ஓரபட்சமில்லாமல் பராமரிக்க வேண்டுமென்றும், விலக்கிறபோது நட்டஈடு கட்ட வேண்டுமென்றும் வரையறுத்தது. சட்டபூர்வமான விவாகபந்தமின்றி யாரையும் வைத்திருக்க அம்மதம்

அனுமதிக்கவில்லை. விபசாரம் கடும் தண்டனைக்குள்ளாக்கப்பட்டது. நான்கு பெண்களை முடிக்கலாமென அனுமதி கொடுத்தபின் விபசாரத்தையும் அனுமதிப்பதாயிருந்தால் இந்தக் கட்டுப்பாட்டில் எந்தக்கருத்துமில்லை. ஆணுக்குள்ள அதே உரிமை பெண்ணுக்கும் விவாகபந்தத்தில் உண்டு. விவாகம் ஒரு 'சிவில்' ஒப்பந்தம் மத ஒப்பந்தமல்ல. விட்டுப் பிரிதல் இருவருக்கும் பொது. பெண்ணுக்குச் சமகல்வி கொடுக்க வேண்டுமென்று அது வற்புறுத்தியது. சொத்துரிமையும் வழங்கப்பட்டது. சொத்தைத் தனது விருப்பப்படி வைத்திருக்கவோ விற்கவோ பெண் உரிமை பெற்றாள். விவாகஞ் செய்தாலும் தனது சொந்தப் பெயரிலேயே அவள் வாழ உரிமை பெற்றாள்.

ஆரம்பத்தில் கட்டுப்பாடற்ற நிலையில் அம்மக்கள் வாழ்ந்தபடியால்தான் பெண்ணைத் தனிமைப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்காகவே பர்தா அணிதல் கண்டிப்பாக்கப்பட்டது. கல்வியறிவு குன்றிய போர்க்குண மக்களைத் திடீரெனத் திருப்புதல் முடியாது. நான்கு மனைவியரை வைத்திருக்கலாமென்பது ஒரு கட்டாயச் சட்டமல்ல. அந்தக் காலத்தையும் இடத்தையும் நோக்கியே இந்தச் சலுகையும் பர்தாவும் நடைமுறைக்கு வந்தன. ஆனால் அதுவே கட்டாயச் சட்டமென்று இறுகப் பிடிக்கத் தொடங்கவும் அதன் தார்மீகப் பண்பு மாறி இன்று அது பெண்ணினத்தையே அடிமையாக்கும் விலங்காகிவிட்டது. கல்வியைவிடப் பர்தா முக்கியம். வெளியே செல்வதைவிட வீட்டிலிருந்து சாவது மேல்; உழைப்பதைவிட வீட்டுக்குள் உணவின்றி இருப்பது நல்லது. மற்ற ஆண்களோடு பேசிப்பழகிச் சுதந்திரமாயிருப்பதைவிட ஒருவரோடும் பேசாமல் அடிமையாயிருத்தல் நல்லது. தெருவில் போய் அந்நிய ஆண்களைப் பார்ப்பதைவிட வீட்டிலிருந்துகொண்டு சொந்தக் கணவனை மட்டும் பார்ப்பது மேல். இவ்விதம் பெண்ணினம் அடிமையாக்கப்பட்டது. எந்த நோக்கில் இஸ்லாம் பெண்ணை உயர்த்திச் சமநிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்று நினைத்ததோ அந்த நோக்கம் மாறிப் பெண் போகப் பொருளாகவும் அடிமைச் சின்னமாகவும் மாற்றப்பட்டாள். 'ஹரம்' (அந்தப்புரம்) அரண்மனையின் அங்கமாகியது. நாலு மனைவியர் நாற்பதாகினர், நாற்பது நூறாயிற்று. சுல்தான் பெண்கள்மேல் ஏகபோக உரிமை கொண்டாடினான். கல்வி

மறுக்கப்பட்டது. ஹரம் பெண்களின் பட்டாளமாக மாற அலிகள் அதனைக் காவல் செய்தனர். வெறும் கேளிக்கைக்காகவும் போகத்துக்காகவும் பெண்ணினம் மறுபடியும் தள்ளப்பட்டது.

பர்தா முகத்தை மூடியது; சுவர் ஆளை மறைத்தது; மடமை அறிவை மறைத்தது. பெண் போகத்தின் அடிமைச் சின்னமாகினாள். ஆணின் தயவிலே, உழைப்பிலே வாழ்ந்துகொண்டு பிள்ளைப்பெறும் இயந்திரமாக அவள் மாறினாள். உலகத்தில் பெண்ணாய்ப் பிறந்தது ஆணுக்குச் சிசுருட்சை செய்யவும் இன்பங் கொடுக்கவுமே என்பதைத் தவிர வேறு எந்த இலக்கும் அவளுக்கில்லை. இந்த நிலையிலிருந்து பெண்ணினம் இன்னும் விடுதலையாகவில்லை.

அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சில வீரப்பெண்கள், கல்வி கற்ற பெண்கள், ஞானியாகத் திகழ்ந்த பெண்கள் உலகம் முழுதும் காணப்பட்டாலும் பெண் கல்வி பொதுவாக மறுக்கப்பட்டே வந்திருக்கிறது. ''பெண்ணுக்குக் கல்வி அவசியமில்லை, அவள் கல்வி கற்பதால் எந்த நன்மையுமில்லை இளமையில் தந்தையின் கீழும் விவாகத்தின் பின் கணவனின் சொற்படியும் நடந்துகொண்டு குடும்பத்தோடு அடக்கமாயிப்பதே இறைவன் கட்டளை'' என்று சொல்லப்பட்டது. எந்த அறிவும் செவிப்புலன் மூலம் பெற்றாளேயொழிய எழுத்து வாசனை அவளுக்கு மறுக்கப்பட்டது. ஞாபகசக்தி மட்டுமே பிரயோசனப்படுத்தப்பட்டது. மதங்களோ ஆசாரங்களைப் படிப்பித்தன. ஆசாரங்களைப் பேணுவதே மதம் என்றுமட்டும் அவள் கண்டாள். இதனால் ஆசாரங்களின் இருப்பிடமாகப் பெண்ணினம் மாறியது. மதக்கல்வி என்று ஒன்று அவளுக்குப் போதிக்கப்படவில்லை. அது ஆண்களின் சொந்தக் கல்வியாக இருந்தது. பெண்கள் அக்கிரகாரத்துக்குள் நுழைவது தடுக்கப்பட்டது. அவள் வேதங்களைப் படிப்பதிலிருந்தும் தடுக்கப்பட்டாள். ''ஆணின் அபிலாஷையை நிறைவேற்றவே பெண் படைக்கப்பட்டுள்ளாள்'' என்று முல்லாக்கள் கூறினர். பூசாரியும் அதையே கூறினான். ஆனால் கிறிஸ்தவ பாதிரிமார் இவ்விதம் கூறிவில்லை. மதத்தைப் போதித்துச் சமூக சேவையில் பெண்களை ஈடுபடுத்தினர். தற்காலச் சரித்திரம் தரும் உண்மை இதுதான். இன்று பெண்ணினம் உரிமைக் குரல் எழுப்புவதற்கு வழிதிறந்தது கிறஸ்தவ மதம் காலப்போக்கோடு

தன்னை மாற்றிக்கொண்டதே. அதன் ஆரம்ப அடக்குமுறை உடைத்தெறியப்பட்டது. அறிவுப் புரட்சி தோன்றியது. மனுநீதி கண்ட ஞானிகள் பலர் தோன்றினர். மத அடிப்படையில்லாமல் நியாயம், தர்க்கம், தார்மீக விசாரணையில் சமூகத்திலுள்ள குறைபாடுகளை எடுத்து விளக்கினர். பொதுக்கல்வி உதயமானதும் இக்காலத்திலேதான். கல்வியில் சர்ச்சின் ஆதிக்கம் எதிர்க்கப்பட்டது. காலப்போக்கில் சர்ச் தன்போக்கை மாற்றவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டது. சொத்துரிமை, விவாகபந்தம் நீக்கல், இவற்றில் பெண் உரிமையற்றவளாகக் கிறிஸ்தவ சமயம் சட்டம் செய்தாலும் பொதுக்கல்வி விஷயத்தில் பெண்ணினத்துக்கு முதல் கபாடத்தைத் திறந்துவிட்டது கிறிஸ்தவ பாதிரிமாரேயாகும்.

பெண்ணினம் தன்னைப்பற்றி உணர வாய்ப்பற்றவளாகவே உலகம் முழுதும் வாழ்ந்திருக்கிறாள். மதக்கல்வி, பொதுக்கல்வி எல்லாமே மறுக்கப்பட்டன. திராவிடர் ஆரம்பகாலத்தில் பெண்கல்விக்கு இடமளித்துள்ளனர். ஆனால் ஆரியரின் வருகைக்குக் கீழ்ப்பட்டு அதுவும் மூடிமறைக்கப்பட்டது. தேவதாசிமுறை பெண்ணினத்தைக் கீழ்நோக்கித் தள்ளிவிட பெண் போகப்பொருளாக மாறினாள். சீனர் பெண்கல்வியைப்பற்றி அக்கறை காட்டவில்லை. ஐரோப்பிய நாகரீகமே பெண்கல்வியையிட்டுக் கீழ்நாடுகளில் ஒரு புரட்சியை எழுப்பிவிட்டதென்றால் அது மிகையாகாது. இன்று பெண்கள் உலகம் முழுதும் இந்தப் புரட்சியை நடத்துவதற்கு மேல்நாட்டு எழுச்சியே காலாகும். விஞ்ஞானம் இதற்குத் தூண்டுகோலாக நிற்கிறது. மகாபீற்றர், கமால் அத்தாதுர்க் போன்ற சமூக மறுமலர்ச்சிவாதிகளின் சேவையைப் பெண்ணினம் மறக்க முடியாது. இவ்விதம் கல்வியிலும் ஆட்சியிலும் மற்றும் சமூக சேவையிலும் பெண்ணினம் உரிமைக்காகப் போர் தொடுக்கவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டதென்பதைப்பற்றிச் சற்று விரிவாய் நோக்குவோம்.

நிலமானிய ஆட்சியின்கீழ் பெண்ணினம் உரிமை இழந்தே நின்றது. பிரபுக்களும் அவர்களது பரிவாரங்களும் பெண்களைப் போகப்பொருளாகவும் காட்சிப் பொருளாகவுமே வைத்திருந்தனர். காதலைப்பற்றியும், அழகைப்பற்றியுமே கவிஞன்

பாடிக்கொண்டிருந்தான். நாட்டியம், நாடகம், சங்கீதம் ஆகியன சிற்றின்ப ரசனையிலேயே ஓடிக்கொண்டிருந்தன. பெண்ணினம் கல்வி பெற்றுச் சேவையில் முன்னுக்கு வரவேண்டுமென்ற தோரணையில் யாரும் இலக்கியம் இயற்றவில்லை. நிலப்பிரபுக்களை மையமாகக்கொண்டே எல்லாம் வளர்ந்ததால் பெண்ணினமும் அந்தச் சூழலோடே சுழன்றுகொண்டிருந்தது. கமக்காரன் தன் மனைவியுடன் வயலே தஞ்சமென்று நின்றான். அவனின் வறுமை, கஷ்டம், அறியாமை ஆகியன பற்றி எந்தக் கவிஞனும் ஒரு கவிகூடப் பாடவில்லை அவனைப்பற்றிச் சைத்திரிகன் ஓர் அழகு சித்திரம்கூடத் தீட்டவில்லை. இருவகைக் கலைஞர்களும் மாளிகைக்குள்ளேயே அழகைத் தேடியலைந்தனர். இவர்களெல்லாம் பிரபுக்களின் பரிவாரங்களில் ஒரு பகுதியினராக மாறினர். கலாசாரம், சட்டம், ஆகியன இவ்வாட்சியின்கீழ் வளர்ந்தாலும் அவையெல்லாம் பிரபுக்களின் சார்பு நோக்கியே இயங்கின, வளர்ந்தன, உறுதியும் பெற்றன. பெண்ணினம் சம உரிமையுடன் நிலமானிய ஆட்சியின்கீழ் எங்குமே வாழவில்லை.

பெண்ணினத்தை அந்தஸ்தில் உயர்த்திவிட்டது இஸ்லாமேயாகும். அதன் ஆரம்ப காலத்தில் பெண்ணினம் கல்வியிலும் மற்றும் சமூகசேவையிலும் முன்னின்று வாழ்ந்துள்ளனர் என்று வரலாறு கூறுகிறது. ஆனால் பிற்காலத்தில் வந்த வைதீகக் கூட்டம் பெண்ணினத்தைச் சிறைக்குள் தள்ளிவிட்டது. இந்தச் சிறையிலிருந்து விடுதலைபெற முதலில் முயன்றது துருக்கியே. இன்று முஸ்லிம் நாடுகள் எல்லாவற்றிலும் இந்த எழுச்சி குமுறிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

கிறிஸ்தவமதம் ஆரம்ப காலத்தில் பெண்ணினத்தை ஒதுக்கியே விட்டது. அதன் தத்துவங்கள் பெண்களைக் கீழாகவே நோக்கின. பிரம்மசாரியாக இருப்பதே மோட்சத்துக்கு வழியென்று அது போதித்தது. பிற்காலத்தில் அதன் போக்கே மாறிவிட்டது. பெண்கல்வியைப் பரப்புவதில் இன்று பாதிரிமார் முதலிடத்தில் நிற்கின்றனர். இந்து மதத்தின் ஒதுக்குதலிலிருந்து சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்துதான் பெண்ணினம் விடுதலையாகிக் கொண்டிருக்கிறது.

இவ்விதம் பெண்ணினம் உரிமைக்காகப் போராடத் தொடங்கியதற்கு மூல காரணம் எது? பெண்களுக்குக் கல்வி மிக அவசியம் என்று யார் இந்தப் புரட்சியைத் துவக்கினார் என்பது போன்ற வினாக்களுக்கு விடைகாண மேலும் சரித்திரத்தைச் சற்றுப் பின் நோக்கி ஆராய்வோம்.

## கைக்தொழிற் புரட்சியின் தாக்கங்கள்

இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சி ஐரோப்பாவையே விழிக்கவைத்தது. வியாபாரமும் நாடு பிடிக்கும் ஆசையும் தலைதூக்கின. தொழிற்சாலைகள் மூலம் பொருள்களை உற்பத்தி செய்தல் ஆரம்பமாகிற்று. வர்த்தகம் ஏராளமான செல்வங்களை ஐரோப்பாவுக்குக் கொண்டுசென்றது. இந்தப் போராட்டத்தில் இங்கிலாந்து தலைமைப்பீடத்தைச் சுவீகரித்து நின்றது. தொழிற்சாலைகள் பெருகின. மேய்ச்சற் தரைகள் தொழிற்சாலைகளாக மாறின. நிலப் பிரபுத்துவத்தை எதிர்க்கும் ஒரு சக்தி பணத்தை ஆயுதமாகக் கொண்டு கிளம்பியது. முந்தியது உள்நாட்டிதான் தனது ஆதிக்கத்தை இதுவரையும் வைத்திருந்தது. ஆனால் பிந்தியதோ வெளிநாட்டுச் செல்வங்களையும் கொண்டுவந்ததுமல்லாமல் இங்கிலாந்துக்கு உலகம் முழுவதும் பல குடியேற்ற நாடுகளையும் உடமையாக்கியது. எதிர்பாராத செல்வம் இவ்விதம் பெருக மற்ற ஐரோப்பிய நாடுகளும் இப்போட்டியில் இறங்கின.

பாராளுமன்றம் பணப்பிரபுக்களின் கைக்குள் வீழ்ந்தது. தனியார் முயற்சியும் தனியார் மூலதனமும் ஊக்குவிக்கப்பட்டன. அதம் சுமித், ஜோன் ஸ்ருவாட் மில், டேவிட் றிக்காடோ போன்ற பொருளியல் விற்பன்னர். இவ்வெழுச்சிக்கு அனுசரணையாகப் பல பொருளியற் தத்துவங்களைக் கண்டுபிடித்தனர். இதனால் தனியார் முயற்சி பெருகிய அதே வேளையில் சமூக, சமுதாய உணர்ச்சி குறைந்துகொண்டே வந்தது. தொழிற்சாலைகள் இராப்பகலாக ஓயாது இயங்கிக்கொண்டிருந்தன. ஆண்களும் பெண்களும், சிறுவரும் சிறுமியரும் வேலை கொள்ளப்பட்டனர். அவர்களின் நிலை கேட்பாரற்ற அடிமை நிலையாகவே காணப்பட்டது. இந்தத் தொழிலாளர் படை கல்வியறிவற்ற அடிமைப்பட்டாளமாகவே தனது சொந்த நாட்டில் இருந்திருக்கிறது. சுகாதாரம், சுகம், பெண்களின் ஒழுக்கம் எல்லாமே கெட்டிருந்தன.

பணப்பிரபுத்துவமும் நிலப்பிரபுத்துவம் போலவே பெண்களை வைத்திருந்தது. அவர்கள் போகப் பொருளாகவும் காட்சிப் பொருளாகவுமே காணப்பட்டனர். எந்த ஒரு மாற்றமும் ஆரம்பத்திற் காணப்படவில்லை. ஆனால் தொழிலாளரைப் பொறுத்தவரை கமக்காரனுக்கு இருந்த உரிமைகூட இல்லாமலாய் விட்டது. வயலில் கணவனும் மனைவியும் சம உணர்ச்சியுடன் வேலை செய்தனர். ஆனால் தொழிற்சாலையிலோ எந்த உணர்ச்சியுமற்று யாருக்கோ அடிமைபோல் வேலை செய்தனர்.

நிலமானியப் பிரபுத்துவத்திற்போலவே இதிலும் ஒரு கூட்டம் உழைப்புச்சக்தியிலிருந்து விடுதலை பெற்றது. இக்கூட்டமும் முந்தியதுபோலவே பரிவாரங்களுடன் காணப்பட்டது. பெண் போகச்சின்னமாகவே தொடர்ந்து சென்றாள். நிர்வாகத்திலும் ஆட்சியிலும் பெண் முன்னுக்கு வரும்வரை அவள் ஒரு வீட்டுப்பொருளாகவே இருந்திருக்கிறாள். மத அனுஷ்டானங்களைப் பேணுவதிலும், சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பதிலுமே அவளின் காலம் சென்றுகொண்டிருந்தது. இதனால் மூடக்கொள்கைகள் பிறப்பதற்கும் அவளே மூலஸ்தானமாகிவிட்டாள். உலகம் முழுவதும் இந்த நிலையிலேதான் பெண்ணினம் மூழ்கிக் கிடந்தது. உலகத்தில் எத்தனைவகையான மூடக்கொள்கைகள் உண்டோ அத்தனையும் பெண்ணினத்தையே பிறப்பிடமாகக்கொண்டு தோன்றியிருக்கின்றன. இன்றும் அவர்களே அவற்றின் அடைக்கலஸ்தானமாகக் காணப்படுகின்றனர். இந்த மூடக் கொள்கைகளின் பிடியிலிருந்து பெண்ணினம் இன்னும் விடுதலையாகவில்லை. சில தேசங்களில் பெண்கள் இன்னும் அந்த ஆதிகால ஆரம்பப்படியிலேயே இருக்கின்றனர். வீட்டுப் பொருள்களோடு தாமும் ஒன்றாக இருந்துகொண்டு எந்தவகையான கல்வியறிவுமற்று மூடக்கொள்கைகளின் பிடிக்குள் தத்தளித்து மாண்டு மடிந்துபோகும் பெண்களைச் சில இனமக்களில் இன்றும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

மாந்திரீக வித்தையிலும் மூடக்கொள்கையிலும் ஐரோப்பா முழுதுமே மத்திய காலத்திலிருந்து சிக்கிக் கிடந்தது. பெண்கள் பயத்தின் சின்னங்களாகினர். மாந்திரீகக் கிழவிகளின் ஆதிக்கம்

தலைவிரித்தாடியது. மாந்திரீகக் கிழவிகளை இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் பகிரங்கமாய்ச் சுட்டெரிக்கும் பரியந்தம் ஐரோப்பியப் பெண்கள் விழித்தெழவில்லை. இன்று இது கீழ்நாடுகளிலும் முழு ஆபிரிக்காவிலும் இடைக்கிடை பரந்து காணப்படுகிறது. விஞ்ஞானத்தின் மோதுதல் எட்டாத எல்லா இடங்களிலும் பெண்ணினம் இன்று அச்சத்தின் இருப்பிடமாகவே காணப்படுகிறது.

## எதிலிருந்து விடுதலை?

பெண்ணினம் விடுதலை பெறவேண்டிய பல சம்பவங்களுண்டு. கல்வி கற்காவிட்டால் எந்த விடுதலையையும் பெற முடியாது. இந்த மூடக்கொள்கைகளிலிருந்து முதலில் விடுதலையாக வேண்டும். பெண் அச்சம் கொண்டவளென்று சொல்லப்படுகிறது. இந்த அச்சம் சம்பிரதாயங்களால் ஆக்கப்பட்டதே தவிர இயற்கையில் அவள் அப்படியிருக்கவில்லை. ஆணின் அதீத அடக்குமுறையால் அவள் அச்சத்தின் இருப்பிடமாக ஆகிவிட்டாள். இந்த அச்சம் அவளை என்றுமே அடிமைபோல் ஆக்கிவிட்டது. அதற்கு அனுசரணையாக மூடக்கொள்ளைகள் உருவாகின. இவை அவளை என்றுமே எழும்ப முடியாதபடி அப்படியே ஆழ்த்திவிட்டன. உயிர்த்துவ இயலின்படி தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் ஒரு துணிவு அவளுக்கு இருந்தேயாகவேண்டும். அந்தத் துணிவு எங்கே? இல்லையேல் இந்த இனம் என்றோ அழிந்திருக்கும். தற்காப்புத் துணிவு என்பது எல்லா ஜீவராசிகளுக்கும் உண்டு. இது பெண்ணினத்துக்கு மட்டும் இல்லாமற் போய்விட்டதா? இல்லை, இது ஆணின் இன ஆதிக்கத்தினாலும் மூடக்கொள்கைளினாலும் சம்பிரதாயங்களினாலும் மூடிமறைக்கப்பட்டுவிட்டது. இவ்விலங்குகள் நீங்கி மனம் மாறுகிறபோது இத்துணிவு தானே வந்துவிடும்.

‘ஆண்களின் போகச்சின்னம்’ என்ற ஆண்களின் மனப்பான்மையை மாற்றவேண்டும். இந்த விஷயத்தில் ஆணுக்குப் பெண் எப்படியோ அப்படியே பெண்ணுக்கு ஆண் இருக்கிறான். இந்தப் பிணைப்பில் இரண்டும் சமநிலையில் நிற்கின்றன. பிள்ளையைத் தாயே பாலூட்டி வளர்ப்பதால் குடும்பப் பொறுப்பு தாய்க்குக் கூடுதலாக இருப்பது இயற்கையில் ஒன்று. இதற்காக அவள் அடிமையல்ல. இதைச் சிறையாக மாற்றி விட்டது யார்?

இந்தப் போராட்டத்தில் பெண்ணினத்தின் கடமை, மிக அபாரம், விபசாரத்தைப் பெண்ணினம் வெறுக்காதவரை பெண் சமநிலையில் என்றுமே கருதப்படமாட்டாள். ஆணின் போகப்பொருள் என்பதற்கு விபசாரமே உதாரணமாகிறது. பரத்தை போகத்தை மட்டுமே கொடுக்கிறாள். வேறு எந்தத் தொடர்புமில்லை. சரித்திர காலந்தொட்டே இந்த இழிநிலை இருந்துவந்தாலும் இது மாறாத ஒரு நியதியில்லை. பெண்ணினம் முதலில் இந்த அசூயையிலிருந்து விடுதலை பெறவேண்டும். இதற்காகப் பெண்ணினமே போராட வேண்டும். சில தேசங்களில் விபசாரம் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. சில இனம் விபசாரத்தைத் தொழிலாகக் கொண்ட மக்களை ஆதரிக்கிறது. பலபல பெயர்களோடு விபசாரம் தேசவழமையாக்கப்பட்டிருக்கிறது. இவற்றை உடைத்தெறிவதில் பெண்ணினமே போரட வேண்டியிருக்கிறது. போகத்தின் சின்னமாகக் கருதும் எல்லாத் தோற்றங்களையும் பெண்ணினம் ஒதுக்கித் தள்ள வேண்டும்.

"ஆணுக்கு இன்பத்தைக் கொடுக்கும் ஒரு போகப் பொருளுக்கு வேறு என்ன அந்தஸ்து வேண்டும்? அது உயிரோடு சுகமாயிருக்க உதவி வேண்டியதைத் தவிரவேறென்ன மிச்சமாகத் தேவை? அழகைக் கூட்டுவதற்கு அலங்காரம் தேவை. கல்வியால் அழகு கூடுமா? விவேகம் வளர்வதால் போகத்தில் இன்பம் கூடுமா?" என்ற இந்த மனப்பான்மையில் ஆண் இருக்குமட்டும் பெண்ணினம் இந்த மாயத்திலிருந்து விடுதலை பெற முடியாது. சிற்றின்பத்தை உரைகல்லாகக் கொண்டு ஒரு பக்கம் ரம்பையென்றும் மறு பக்கம் பேயென்றும் ஆண் கூறித்திரிவது பெண்ணினத்தின் உணர்வற்ற தன்மையாலேயாகும்.

கல்வியை இழந்தால் பெண் உண்மையிலேயே ஒரு பகடையாகவே மாறிவிடுகிறாள். ஏகதாரமணத்தை விரும்பும் பெண்ணினம் விபசாரத்தையும் நடத்துகிறது. கட்டுப்பாடற்ற இந்த விபசாரத்ததைவிடக் கட்டுப்பாடுள்ள பலதாரமணம் நல்லதல்லவா? ஆகவே பெண்ணினம் முதலில் தன் இனத்தில் காணப்படும் இந்த ஊழல்களைத் தீர்த்துக்கட்டவேண்டும். கல்வி பெற்றுச் சமூக சேவையில் இறங்காதவரை இந்த ஊழல்களை எக்காலமும் தீர்த்துக்கட்ட முடியாது.

### பெண்களின் விழிப்பு

கைத்தொழிற் புரட்சியும் வியாபார விருத்தியும் குடியேற்ற நாடுகளின் பெருக்கமும் செல்வத்தை மேல்நாடுகளுக்குக் கொண்டுவந்து குவித்தன. இந்த நேரத்தில் நாடுகளுக்கிடையில் போட்டியும் பொறாமையும் ஏற்பட்டன. இந்தப்போட்டி விஞ்ஞானத்துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும், கல்வித் துறையிலும், பல்வகைப்பட்ட வேறு ஆராய்ச்சிகளிலும் இங்கிலாந்து. பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளை ஊக்கிவிட்டது. சர்ச்சினுடைய ஆதிக்கத்திலிருந்து அறிவுத்துறை விடுதலைபெற்றுக் கணிதம், தர்க்கவியல், விஞ்ஞானம், பொறியியல், நியாயவியல், ஆகிய பல்வகைப்பட்ட கலைகளில் சுயாதீனமாக ஓடத் தொடங்கியது. இந்த ஓட்டத்தில் பழைய பூர்வீகக் கோட்டைகள் பல உடைந்து விழுந்தன. சிந்தனையில் ஒரு புதிய சுதந்திரப் பாதையே திறந்து விடப்பட்டது. இந்தச் சுதந்திரப் பாதை ஈற்றில் 'தேசிய இனம்' என்ற ஒரு புதிய உணர்வினைத் தேசங்களுக்கிடையில் தூண்டிவிட்டது. இந்தத் தேசிய உணர்ச்சியில் ஒவ்வொரு நாடும் சுயமுன்னேற்றம், சுயஆட்சி, சுயகீர்த்தி என்று முன்னேறத் தொடங்கியது. இதனால் நாட்டின் தேவைகள் அதிகம் பெருகின. பொறுப்புகள் கூடின. உழைப்புச் சக்தி அதிகம் தேவைப்பட்டது. இதனால் பெண்ணினத்தையும் தட்டியெழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. இதுவரையும் சிதறி அங்கொன்றும் இங்கொன்றுமாய் விழித்துக்கொண்டிருந்த பெண்ணினம் ஸ்தாபன ரீதியில் விழித்தெழவேண்டிய நிலைக்குள்ளானது.

1888 இல் அன்னிபெஸன்ட் அம்மையாரின் தலைமையின்கீழ் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருந்த பெண்கள் வேலைநிறுத்தத்தை முதன்முதலாக இங்கிலாந்தில் தொடங்கினர். இதிலிருந்துதான் பெண்களின் அரசியல் ஈடுபாடு ஆரம்பமாகிற்று. 1808இல் ஆண், பெண் இருபாலாருக்கும் கல்விவசதி இங்கிலாந்தில் அனுமதிக்கப்பட்டாலும் இடைநிலைக் கல்வி 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலேதான் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டது. பிரான்சில் இக்கல்வி 1870இல் ஆரம்பமாகியது. இன்று பெண்கல்வி எல்லாத் தேசங்களிலும் சர்வசாதாரணமாகி விட்டதென்று சொல்ல முடியாது. ஆபிரிக்காவில் இப்போதுதான்

பெண்கள் கல்வியில் முன்னேறத் தொடங்கியிருக்கின்றனர். ஆசியாவில் சில இனங்கள் இன்னும் பெண் கல்விக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கின்றன. பெண்களை வீட்டுப் பொருள்களாகவே அவை இன்னும் கருதுகின்றன.

வாக்குரிமைகூடப் பெண்களுக்கு மறுக்கப்படும் நாடுகள் இன்னுமுண்டு. அரசியலில் அவர்கள் எந்தப்பங்கும் எடுப்பதில்லை. பல அரபு நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை கிடையாது. எகிப்தில் நாசரின் ஆட்சியின்கீழ் பெண்கள் மிகத்தூரம் முன்னேறியுள்ளனர். நாட்டின் நிர்வாகத்தில் அவர்களின் பங்கு கணிசமான அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இராணுவத்திலும் இன்று அவர்கள் சேவை செய்கின்றனர். துருக்கியிலும் இதே நிலைதான். ஆனால் மற்றைய அரபு நாடுகளில் பெண்கள் இன்னும் விழித்தெழவில்லை. ருஷ்யாவில் பெண்கள் சமஉரிமையுடன் வாழ்கின்றனர். கல்விக்கூடங்களிலும் தொழிற்சாலைகளிலும் அவர்கள் ஆண்களைப்போல் சமநிலையிலேயே நிற்கின்றனர். விஞ்ஞானத்துறையில் இன்று அவர்கள் மற்ற நாட்டுப் பெண்களைவிட முன்னேறியுள்ளனர்.

**எழுச்சிக் கவிஞர்கள்**

ஐரோப்பாவில் எழுந்த விழிப்புணர்ச்சியே கீழ்நாடுகளில் பெண்கல்வியைத் தூண்டிவிட்டது. பெண்ணினம் கல்வியறிவற்று அடிமைத்தளையிற் கிடப்பது கீழ்நாடுகளின் சுதந்திரத்துக்கு மிக ஆபத்தென்பதைப் பலரும் உணரத்தலைப்பட்டனர். நாட்டின் விடுதலையில் அவர்கள் பங்கு அவசியம் தேவைப்பட்டது. நாட்டின் புனருத்தாரண வேலையில் அவர்களின் சேவை இன்றியமையாததாகிவிட்டது. அவர்களை எப்போதும் செலவுக்கணக்கில் எழுதிக்கொண்டிருக்க முடியாது. செலவு மட்டுமல்ல; ஆணின் முன்னேற்றத்துக்கு ஒரு தடையாகவும் இவ்வினம் இருப்பதைச் சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு நாடு நெடுகிலும் பொறுக்கமுடியாது. நாட்டின் முன்னேற்றப் பாதையில் ஓடும் ஒரு நாடு மனித சக்தியிற் பாதி இவ்விதம் தூங்கிக் கொண்டிருப்பதை எவ்விதம் சகித்துக் கொண்டிருக்க முடியும்? பெரிய அளவில் இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது இவ்வினத்தின்

உதவி அவசியம் என்பதைப் பலரும் உணர்ந்தனர். ''சமகல்வி அளிக்கப்படவேண்டும்; அவர்களை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் மூடக்கொள்கைகளைத் தகர்த்தெறிய வேணடும்; ஆணும் பெண்ணும் வாழ்வில் சமமே; இந்தச் சமத்துவத்தை மறுப்பது மடமை, துரோகம்'' என்றெல்லாம் கீழ்நாடுகளில் சிந்தனை அலைகள் வீசத் தொடங்கின. தமிழ் நாட்டில் பாரதியாரின் வீர முழக்கத்தை முதலிற் கேட்கிறோம்.

> ''மாதர்தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொழுத்துவோம்,
> வையவாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குளே
> தாதரென்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும்
> சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்தநாட்டிலே''

என்று விடுதலை முரசு கொட்டும் ஒரு கவியை பாரதிக்கு முன் யாரும் இவ்வளவு உத்வேகத்துடன் தமிழ் நாட்டில் பாடவில்லை.
பெண்ணுக்குக் கல்வியூட்டாது குருடராய் வைத்திருக்கும் சமூகத்தையிட்டு

> பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
> பேணி வளர்த்திடும் ஈசன்
> மண்ணுக் குள்ளேசில மூடர் - நல்ல
> மாத ரறிவைக் கெடுத்தார்
> கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
> காட்சி செய்திடலாமோ?
> பெண்க ளறிவை வளர்த்தால் - வையம்
> பேதமை யற்றிடுங் காணீர்

என்று உணர்ச்சியுடன் அவர் கூறுவதை யாரும் மறுக்க முடியாது. பெண்ணினத்தின் விடுதலைக்காகப் பாரதி முழுமூச்சாகவே பாடுகிறார். அவரின் கவிதைகள் பெண் குலத்தையே ஓர் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து விடுகின்றன.

‘‘அறிவுகொண்ட மனித உயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்’’
‘‘ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்’’
‘‘நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீரசுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்’’
‘‘நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்குமிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்’’
என்று புதுமைப் பெண்ணின் நிலை பற்றிக் கூறுகிறார்.
‘‘விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்’’
‘‘மூத்த பொம்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பாரம்’’
‘‘நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி
ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்
மாட்டையடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினில் எம்மிடம் காட்டவந்தாரதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி
நல்லவிலை கொண்டு நாயைவிற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
சொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத்தார் பழிகூட்டி விட்டார்
கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்,
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!
வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோமென்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்
காத லொருவனைக் கைப்பிடித்தே, அவன்
காரியம் யாவிலும் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வோமடி''
''அறவிழுந்தது பண்டை வழக்கம்
ஆணுக்குப் பெண் விலங்கெனும் அஃதே
விடியும் நல்லொளி காணுதி நின்றே
மேவுநாகரி கம்புதி தொன்றே
கொடியர் நம்மை அடிமைகளென்றே
கொண்டு, தம்முதல் என்றனரன்றே
அடியோடந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர், நற்தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர். துணிவுற்றே''
''பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர்நீதி
பிறப்பித்தேன் அதற்குரிய பெற்றிகேளீர்
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால்,
மனையாளும் தெய்வமன்றோ? மதிகெட்டீரே!
விண்ணுக்குப் பறப்பதுபோல் கதைகள் சொல்வீர்
விடுதலை யென்பீர் கருணை வெள்ள மென்பீர்
பெண்ணுக்கு விடுதலை நீரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை.''

என்று பாரதியார் பெண்ணினத்தின் இனவிடுதலைக்காகப் போராடுகிறார். இதுவரையும் அழகுச் சின்னமாகவும் போகச் சின்னமாகவும் அடிமை சின்னமாகவும் வைக்கப்பட்டிருந்த இவ்வினம்

கல்வியிழந்து குருடாகவே இருந்து வந்துள்ளதை இக்கவிதைகள் நமக்கு மறுபக்கம் நிரூபிக்கின்றன. ஔவை போன்ற ஒரு சிலர் வாழ்ந்திருக்கலாம். ஆனால் பெண்கள் நிலை பொதுவில் அடிமையாகவே இருந்திருக்கிறது. இந்த அடிமை நிலை இடைக்காலத்திலிருந்தே தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. பெண்ணினத்தைத் தூஷித்துப் பாடிய ஞானிகளும் சித்தர்களுமே இந்த அடிமைத் தளையைப் பெண்ணினத்துக்குப் பூட்டிவிட்டனர். பெண்டாட்டியை அடிமைப்படுத்தி விட்டது. பெண்டாட்டி ஏன் அடிமையாக வேண்டும்? இதைச் செய்தவர் யார்? இவையெல்லாம் பாரதியார் காண்பதுபோல் ஒரு சிலரின் சூழ்ச்சியாகும்.

தத்துவக் கவிஞர் இக்பால் பெண்ணினத்தின் உயர்வு கருதி வேறொரு நோக்கில் நம்மைத் திருப்புகிறார்.

''தாய்மை என்ற சொர்க்கத்தில் ஜனனம் என்ற பூ மலரும்
சமூகச் செல்வம் வெள்ளியும் பொன்னுமல்ல
பக்குவமுற்ற மக்களே அச்செல்வம்
குர் ஆனையும் சமுதாயத்தையும் இணைக்கும் தூண் பெண்''
''பெண்ணின் கரந் தீண்டில் ஆண்மை இசைபாடும்
ஆண் இப்பரிசத்தால் ஏறாக மாறுவான்
ஆணின் மானத்தைக் காக்கும் ஆடை பெண்''
''அடிமையென்று அவளைக் கூறுவோரைவிட்டும் குர்ஆன்
விலகிவிடும்''
''நபித்துவத்துக்கு அடுத்தது தாய்மை''
''சுவர்க்கம் அவள் பாதத்தடியில் இருக்கிறது''
''சமூகத்ததை ஆக்கும் சிற்பி பெண்''
''பெண்ணைக் குருடாக வைப்பது பேதமை''

என்றவாறு பெண்ணினத்தின் உயர்ச்சி நோக்கிச் சமூகத்துக்கு அறிவுறுத்துகிறார். இஸ்லாம் பெண்ணுக்குப் பூரண விடுதலை கொடுத்துள்ளதென்பதை ஏலவே கண்டோம். கணவனுக்கு மனைவி எவ்வகையிலும் அடிமையில்லையென்பதை இஸ்லாம் சட்டபூர்வமாகவே நிலைநாட்டியிருக்கிறது.

ஈராக்கின் புகழ்பெற்ற கவிஞனான ஜஹாவியின் எழுச்சிமிக்க கவிதைகள் பெண்ணினத்தை ஊக்கும் திறனிலே அமைந்துள்ளன.

''ஓ ஈராக்கின் புதல்விகள்!
உங்கள் முகமூடியைத் துண்டு துண்டாய்க்
கிழித்தெறியுங்கள்.
திறந்த முகத்துடன் வெளியே வாருங்கள்
வாழ்க்கையென்பது புரட்சியேயாகும்.
ஆதலால்,
உங்கள் திரையை உடனே கிழித்துப் பொசுக்குங்கள்
இது உண்மையிலேயே ஒரு பொய்யான பாதுகாவலாம்''

மேலும், ''இன்றிலிருந்து ஆயிரம் வருடங்களுக்குள்'' என்ற நூலில், ''நீங்கள் ஒருநாள் இப்பெண்களைக் காண்பீர்களானால் உணர்ச்சியற்றவர்களாய் அதிசயத்தால் மூழ்கடிக்கப்பட்டு விடுவீர்கள். ஏன்? ஆண்களைப் போல் அப்பெண்களும் கடுமையான உழைப்பில் நின்றுகொண்டிருப்பார்கள் தங்கள் வேலையில் திறமையும் சுறுசுறுப்பும் காட்டுவார்கள். நீதிஸ்தலங்களில் ஆண்களுக்குப் பக்கத்திலே அவர்கள் உட்கார்ந்திருப்பார்கள். நாட்டின் முன்னேற்றத்தில் அவர்களின் எண்ணங்களும் திட்டங்களும் உறுதியானவை யாயிருக்கும். அவர்களுக்கிடையில் தேசாதிபதிகளும் பட்டாளத் தலைவர்களுமிருப்பார்கள். வீரமணிகளும் தொழிலாளிகளும் இருப்பார்கள். அன்புள்ளவரை விவாகபந்தம் வளரும். அது ஒரு அடிமைத் தளையல்ல. பிள்ளைகளைப் படிப்பிப்பதும் நன்கு வளர்ப்பதும் நாட்டின் கடமை நாடுதான் எல்லாருக்கும் தாய்'' என்று கூறுகிறார்.

அதே ஈராக்கைச் சேர்ந்த ஜவாஹிரி என்னும் கவிஞன் பெண்களின் உணர்ச்சியற்ற நிலையையிட்டுப் பின்வருமாறு கூறுகிறார்.

''நாங்கள் பிள்ளைகள் பெறும் சரக்குகளை வைத்திருக்கிறோம்.

பணப்பெருக்கத்தின் உயர்வு தாழ்வுக்கேற்ப அதன் பெறுமானத்தை நாங்கள் கூட்டுவோம் அல்லது குறைப்போம்.

மற்ற இனத்தில் அவள் நாட்டின் பெருமைக்குரிய சின்னமாயிருக்கிறாள்.

வீட்டையும், சந்தையையும், சர்ச்சையும் அவள் பிரகாசிக்கச் செய்கிறாள்.

இவர்களெல்லாம் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களாவர். இவர்களின் கவி ஈராக்கின் பெண்ணினத்தையே விழிப்புறச் செய்தது. இன்று அவர்களின் மனங்கள் முன்னேற்றங் கருதிக் குமுறிக் கொண்டிருக்கின்றன. கமால் அத்தாதுர்க் துருக்கியில் இருவகைப் புரட்சிகளை ஒருங்கே நடத்தியுள்ளார். ஒன்று அரசியற் புரட்சி, மற்றது சமூகப் புரட்சி சமூகப் புரட்சியிற்தான் அவர் அதிகம் மாற்றங்களைச் செய்தார். அவர் செய்த மாற்றங்கள் பல அதீதப் போக்கிலே உள்ளன. மேல் நாட்டு நாகரீகத்தில் அவர் கொண்ட பற்று சில இடங்களில் அவரைக் குருடாக்கிவிட்டது. என்றாலும் அடிமையாய்க் கிடந்த பெண்ணினத்தை அவர் விடுதலையாக்கி விட்டது ஒரு மதிப்புக்குரிய செயலேயாகும். இவ்வித எழுச்சிக்குச் சில கவிஞர்களும் காலாயிருந்தனர். கவிதைகள் மூலம் பெண்ணினத்தின் விடுதலைக்காக அவர்கள் சமூகத்தை வேண்டியிருக்கின்றனர். கவிஞர் ஜியா பெண்ணினத்தின் சம அந்தஸ்தை வலியுறுத்திப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

என் தாய், என் சகோதரி, என் மகள்
இவர்கள் பெண்கள்.
என் வாழ்வின் ஆழத்திலிருந்து
துல்லிய உணர்ச்சியைத் தூண்டிவிடும் ஆத்மாக்கள்
அதோ சூரியன், சந்திரன், தாரகைகள்
என் கவிதா உணர்ச்சியைத் தூண்டிவிடும் கருவிகள்
இறைவனின் பரிசுத்த இயற்கைச் சட்டம்
இந்த அழகு சிருட்டிகளை
எவ்விதம் கீழானவையாக மதிக்கும்?
குர்ஆனின் வியாக்கியானிகள் செய்த தவறே இது.
தேசத்தின் அத்திவாரம் குடும்பம்.
பெண்ணினத்தின் பெறுமதி கவனிக்கப்படாதவரை
தேசிய வாழ்வென்பது அபூரணமே.

குடும்ப வளர்ச்சி கட்டாயம் நீதியோடு பொருந்த வேண்டும்
ஆகவே, சம அந்தஸ்து ஆணுக்குப் போல் அவளுக்கும் வேண்டும்
சொத்துரிமையில் அவள் ஆணின் பாதியா?
விவாகபந்தத்தில் அவள் ஆணின் நாலிலொன்றா?
இந்த நிலையில் குடும்பமோ தேசமோ முன்னேற முடியாது.
ஏன் பெண்ணினத்தை இருட்டில் அலைய விடவேண்டும்?
நாட்டுக்கு அவள் உழைக்கமாட்டாளா?
அல்லது
புரட்சி மூலம்
அவள் உரிமைகளை எங்களின் கைகளிலிருந்து பெறுவதற்கு
தன்கையிலிருக்கும் பின்னல் ஊசியைத்
துப்பாக்கிச் சன்னமாக மாற்றமாட்டாளா?

**பிற்கூற்று**

செயலில் இறங்குபவன் அதிகம் பேசிக் கொண்டிருக்கமாட்டான். பேச்சு மனிதனை மனிதன் தொடர்புபடுத்தும் ஆயுதம். அதேபோல் சண்டையையும் உண்டாக்கி அதை விரித்தும் விடக்கூடியது. சும்மா சாதாரண விஷயங்களையெல்லாம் பெரிதாய்ப் பேசுவதன் மூலம் ஒருவன் ஒரு செயலும் செய்யாமல் ஒரு நாளின் முழுப்பொழுதையும் கழித்துவிடலாம். மனிதனுக்குக் கற்பனை, சிந்தனை முதலிய பண்புகளைப் பேச்சே வெளியிற் கொண்டு வருகிறது. ஆனால் பேச்சு இலக்கற்றுப்போகுபோது பொழுதுபோக்கும் ஒரு கருவியாகவே அது மாறிவிடும். இப்படிப் பேசிக்கொண்டிருப்பதனால் ஒருவன் திருப்தி காண்பானாயின் அவன் செயலில் இறங்குவது மிகக் கஷ்டமாகிவிடும். செயல் வீரனோ மிக அடக்கமானவன். அதிகம் பேசிக் கொண்டிருக்க மாட்டான். சும்மா பேசிக் கொண்டிருப்பதால் செயலும் சிந்தனையும் ஒருங்கே தடைப்படும். ஞானிகள் தத்துவங்களை அறிவதும், கரும வீரன் ஊண், உறக்கமற்று ஆய்வில் மூழ்குவதும், புதுமையைக் காண்பதும் பேச்சைச் சுருக்குவதாலேயாகும். சிந்தனை செயல்மூலம் வெளிப்பட வேண்டுமாயின் பேச்சுச் சுருங்க வேண்டும். மேலும், சிந்தனைத் தெளிவு, விவேகப் பயிற்சி ஆகியன அமைதியான சூழ்நிலையிற்தான் வெளிப்படும். பெண்ணினத்தை உழைப்புச் சக்தியிலிருந்து விடுதலையாக்கிச் சும்மா இருக்கவிட்டால் அதன் உள்ளுணர்ச்சி முழுதும் பேச்சின் மூலமே சாந்தியடையும். பேச்சு மறுபக்கம்

சண்டையை உண்டாக்கும் தன்மையுள்ளது. இதனாலேதான், பேசுதல், வம்பளத்தல், சண்டை பிடித்தல் ஆகியன பெண்ணினத்துக்கே சொந்தமாகி விட்டன. விவேகம் மட்டந்தட்டப்பட்டு, செயலும் இல்லாமலாகிச் சமூக சேவையுமற்ற ஒரு பெண் தன் சக்தி முழுவதையும் பேசியே செலவழிப்பாள்.

பெண்ணுக்குக் கல்வியையும் மறுத்து, விவேகத்தையும் மட்டந்தட்டி, முயற்சியையும் குறைத்து வெளியே சென்று சூழலோடு மோதுவதால் ஏற்படும் அனுபவ அறிவையும் பெற முடியாதவாறு சந்தர்ப்பத்தையும் தடுத்து வெறும் போகச் சின்னமாகவும் வீட்டுப் பொருளாகவும் வைத்துக்கொண்டு அவளை 'மடமையின் இருப்பிடம்' என்றும் 'பெண்புத்தி பின்புத்தி' என்றும் 'வம்பளக்கும் கருவி' என்றும் 'சண்டைசெய்யும் இனம்' என்றும் கூறிப் பழிச்சொல் முடிப்பதால் பயனில்லை. இவ்விதம் கூறுதல் இன்று மரபாகக் காணப்படுகிறது. ஆனால் இந்த மரபு ஓரபட்சமாக வளர்ந்து வந்திருக்கிறது என்பது தெளிவு.

இரசஞானக் கலைகளிலும் சமூக சேவையிலும் பெண்களைத் திருப்பிவிடலாம். பெண்ணினம் விவேகமும் ஆக்கும் சக்தியுமற்ற ஒரு வெறும் பிண்டமல்ல. நிலப்பிரபுத்துவமும் பணப்பிரபுத்துவமும் தம் சுகபோகத்துக்காக ஆக்கிவிட்டதே இந்த விதி. அது பெண்ணினத்தின் தலையில் விழுந்துள்ளது. இதை உடைத்தெறிதல் கஷ்டமாயினும் காலப்போக்கில் பெண்ணினம் கல்வியில் முன்னேறுவதால் இந்த அவதூறிலிருந்து நீங்கிவிடலாம்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய குணங்கள் பெண்ணுக்கு ஆணைவிட முனைப்பாக இருக்கலாம். ஆனால் இவை விலங்காக மாறக்கூடாது. இந்த விலங்குகளுக்குக் கீழ் பெண் ஒரு கைப்பொம்மையாக மாறிவிடுவாள். கைப்பொம்மைக்கு ஆட்டுபவனின் இலக்கைத்தவிர வேறோர் இலக்கும் தனிப்படக் கிடையாது. வெறும் அலங்காரப் பிண்டமாக மாறமாற பெண் ஆணின் பொம்மையாகவே சதா ஆகிவிடுவாள்.

ஆண், பெண் உடலுறவு இயற்கையிலொன்று. இது இருபாலாருக்கும் பொது. இதில் ஆண் கர்த்தாவாகவும் பெண் கருவியாகவும் மாறக் காரணமில்லை. இருவருமே கர்த்தாவும் கருவியுமாவர். பெண் தன்னைக் கருவியாக மட்டும் நினைக்குமாறு ஆக்கப்பட்டுவிட்டாள். பல தத்துவக் கோட்பாடுகளும் இதை ஆதரித்துக்

கிளம்பின. விபச்சாரம் செய்யும் கருவியாகப் பெண்ணினம் மாறியதும் இவ்வடிப்படையிலேயாகும். பெண்களை மந்தைகளாக விடுதிகளில் அடைத்து ஆண்களுக்குக் கூலிக்குவிடும் வழக்கம் இந்த அடிப்படையிலேயே தோன்றியிருக்கிறது. பெண்ணினம் இதை உடைத்தெறிய வேண்டும். இது அவர்களின் சொந்தப் போராட்டமாகும்.

பின்னல் வேலை, தையல் வேலை, குடிசைக் கைத்தொழில், காய்கறித் தோட்டம், அலங்கார வேலைகள், தாதிப் பயிற்சி, வைத்தியம், ஆசிரியத் தொழில், வளர்ந்தோர் கல்வியூட்டல், இரசாஞானக் கலை வளர்த்தல், சமூக சேவை, குடும்பப் பரிபாலனம், மனையியல் ஆகிய துறைகளில் பெண் பூரணமாய் ஈடுபட வேண்டும். பல நுண்கலைகளில் பெண்கள் பயிற்சி பெற்று நாட்டின் நிர்வாகத்திலும் முன்னேற்றத்திலும் நாலிலொரு பகுதியையாவது அவர்கள் கையேற்று விட்டால் ஆண்கள் கடும் உழைப்புச் சக்தியை வேண்டும் மற்றத் தொழில்களில் ஈடுபடலாம். இந்த விஞ்ஞான யுகத்தில் பெண்ணினம் தானும் முன்னேறாமல் முன்னேற்றத்துக்குத் தடையாகவும் இருந்தால் ஒரு நாடு சுபீட்சமுடன் வாழ முடியாது. ஆணை மயக்குகின்ற மனப்பான்மை மாறி ஆணை நெறி நிலையில் நடக்கப் பழக்க வேண்டும். பழைய சம்பிரதாயங்களைக் கையிற் பிடித்துக்கொண்டு தோகையாகவும், ரம்பையாகவும் மட்டும் ஆடுவதையே இலக்காகக் கொண்டால் ஆணின் ஒரு பிடிச் சோற்றிலேதான் பெண் வாழவேண்டி வரும். இந்தச் சோற்றில் இன உரிமை என்பது வெறும் கற்பனையே. குடும்பத்தில் சமநிலை காணவேண்டும். குடும்பச் செலவில் ஒரு பகுதி பெண்ணுடைய ஆக்கத்தால் நிறைவேறவேண்டும். இது பணமாய் இருக்கலாம்; அல்லது உழைப்புச் சக்தியாக இருக்கலாம். அறிவும் உழைப்பும் பெண்ணினத்துக்குச் சொந்தமாகும்போது ஆண் அவளை ஒரு போகச் சின்னமாகக் கருதுவதை விட்டுவிடுவான். சம அந்தஸ்துடன் இணையும் ஒரு இயற்கைக் கூட்டுறவாகவே விவாகம் அமையும். பெண்ணைப் போகச் சின்னமாகக் கருதும் ஓர் இனத்தில் அவள் ஒளித்து வைக்கப்படவேண்டிய ஒரு சொத்து. ஏனெனில் கட்டுப்பாடற்றால் அச்சொத்தை யாரும் திருடிவிடலாம். திருடுகிறவனும் ஒரே நோக்கில்தான் திருடுகிறான். அறிவிலும், உழைப்பிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமநிலை ஏற்படும்போது திருடல் என்பது வராது. இந்த இடத்தில் காதலும் திருடுதல், ஒளித்தோடுதல் என்ற போக்கில் வளர முடியாது.

# சமூகவியல் கோட்பாடுகளும் அவை பற்றிய சில வாதங்களும்

**செல்வி திருச்சந்திரன்**

***உலகின் இயற்காட்சி எல்லாம் முழுமையற்ற, நிரந்தரமற்ற, விசாரணை இலட்சிய வடிவங்களின் குறைப்பாடுடைய பிரதிபலிப்புக்கள்.***

*கிரேக்க அறிஞர் – பிளேட்டோ (428 – 347 கி.மு)*

சமூகவியற் கோட்பாடுகள் என்று நான் இங்கு கருதுவது Social Science theories என்ற வரையறையில் மட்டுமல்ல இலக்கியங்கள் தந்துதவிய கோட்பாடுகள் இலக்கணங்கள் வகுத்த விதிகள் (தொல்காப்பியம், நன்னூல்) பழமொழிகள் தத்துவ விசாரணைகள் போன்ற பல விடயங்களும் இதில் அடங்கும் என்பது எனது அபிப்பிராயமாகும். சமய, மதப்போதனைகள் என்ற பன்முனைப்பட்ட, உலகத்தை உய்விக்க வந்தோரும், உலக வழக்கங்களையும், பழக்கங்களையும் தோற்றுவித்தோர் யாவரும் ஏதோ ஒரு வகையில் வாழ்வியலை உணர்த்துபவர்களாகவும், ஏதோ ஒரு வகையில் உலகைப் புரிந்து கொள்வோராகவும் தான் இருந்திருக்கிறார்கள். நாட்டார் பாடல்களில் தொனிக்கும் ஞானம், பெருங் கோட்பாடுகளை ஒத்தனவாக இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

சமூகவியற் கோட்பாடுகள் என நாம் மேலைத்தேச பாணியில் விளங்கிக் கொள்வது அரசியல், சமூகவியல், பொருளாதாரம், தத்துவவிசாரணை என்ற பிரிவுகளை ஏற்றுக்கொள்வதாக முடியும். ஆனால் கீழைத்தேசத்தில் அவ்விதமில்லை. வட இந்திய வரலாற்றுக்காலத்தில் தோன்றிய சிந்தனைகளை இலக்கியம் எனவும்,

மதம் எனவும் ஒரு நிலையில் வைத்துப் பார்த்தனர். சமஸ்கிருத இலக்கிய வரலாறு என நாம் கூறும் போது அவை இருக்கு, யசுர், சாமம், அதர்வம் எனத் தொடங்கி பின் பிரமாணங்கள், உபநிடதங்கள் என விரிந்து, புராணங்கள், இதிகாசங்கள் என வளர்ந்து இவையாவும் இலக்கியம், மதம், தத்துவம் (உபநிடதங்கள்) என ஒரே பார்வையில் பார்க்கப்பட்டன.

இதே போன்று தமிழிலும் தேவார, திருவாசகங்கள் சைவ நூல்களாகவும் திருப்பாசுரங்கள் வைஷ்ணவ நூல்களாகவும் மொத்தமாக அவை இலக்கியங்களாக ஒரே சமயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் - State Craft என்று கூறப்படும் அரசியல் நிர்வாகத் திறமையை விளக்குவதாக மட்டுமே இருக்கின்றது. இதே போன்று காம சாஸ்திரம், உடல் இன்பத்தின் கூறுகளை இன்பியல் நோக்கில் கூறுகின்றது. இவை இரண்டும் கூட சமூகவியல் மானிடத்தைப் பற்றிக் கூறுபவையே. திருக்குறள் இலக்கியமா அல்லது சமய நூலா எனப் பட்டி மன்றம் போட்டு அதை நிரூபிப்பது கீழைத்தேச மரபிற்கு முரணானது. புராணக்கதைகளும், ஜாதகக் கதைகளும் இவ்வாறே வாழ்வியலை முழுமையான ஒரு தத்துவமாக, ஒரு பூரண நிகழ்வாக விளங்கிக் கொள்ளும் ஒரு முயற்சியாக நமக்குத் தோற்றமளிக்கின்றது. இந்தப் பூரணத்துவத்தை கூறுபோட்டுப் பிரிந்து, ஒன்றுக்கொன்று தொடர்பற்றன போன்று சமூகவிஞ்ஞானம் பிரித்துக் கொண்டது.

இந்தப் பிரிவினையின் பலாபலன்கள் யாவை? சமூகவியல் - Sociology, மானுடவியல் Anthropology, அரசியல் விஞ்ஞானம் - Political Science உளவியல் - Psychology, என்றும் இப்போது அபிவிருத்திக் கற்கை Development Studies, பெண் நிலைக் கற்கை நெறி Women's Studies என்றும் பல கூறுகள் தோன்றியுள்ளன. பெண் நிலைக் கற்கை நெறியைத் தவிர்த்து ஏனைய நெறிகள் ஒன்றுடன் ஒன்று மோதுவதாகவும், பிரிவினை பேசுவதாகவும் இருப்பது விசனத்துக்குரியது. இம்மோதல்களும், பிரிவினைகளும் மானிடத்தை ஒரு முழுமையான, பூரண அனுபவமாக உணர்ந்து கொள்வதனைத்

தவிர்க்கின்றதா? தற்போதைய அவலங்களுக்கும் வக்கிரங்களுக்கும் இந்தச் சிந்தனைமயப்பிரிவினை ஒரு காரணமாக இருக்குமா?

இலக்கியம் படிப்போர் இலக்கிய நயத்தில் திளைக்க, புவியியல் படிப்போர் பூகோள மண்டலத்தையே வலம்வர, வரலாறு படிப்போர் அரசனையும், அரசியையும் படிக்க, ஆய்வறிவுச் சக்திகளும் பிளவுண்டு போய்விட்டதா? ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பு தென்படாமல் போய்விட, சமூகப்பிரஜை ஒன்று தோன்றாமலே போய்விட்டதா? வைத்தியர்கள், கணக்காளர்கள், சட்டத்தரணிகள் தமது பணித்துறை நிபுணத்துவத்தைப் பணம் திரட்ட மட்டுமே உபயோகிக்கும் ஒரு நிலை உள்ளது. இந்த நிலைப்பாடு ஏனையோரையும் வைத்தியர்களாக, கணக்காளர்களாக, சட்டத்தரணிகளாக வரமுயற்சிக்க வைக்கிறது. இவர்களில் ஒரு சிலரே மாக்சிச வாதிகளாகயிருப்பதனால், இலக்கியத்தை ரசிப்போராயும் சாதி வர்க்க ஏற்றத்தாழ்வுகளைப் புரிந்தோராயும், அவற்றில் சமூகப்பிரக்ஞை கொண்டோராயும் இருக்கின்றனர். இவர்களில் எத்தனை பேருக்கு அம்பேத்கார், பெரியார், லோகாயுதம் எழுதிய தேவி பிரசாத் சட்டோ பாத்தியாய பற்றிய அறிவுண்டு?

சமூகவியல் மரபுகளை வெளிக் கொணரும், சமூகவியல் கோட்பாட்டுப் பிளவு, சிந்தனை மையங்களையும் பிளவுபடுத்தி விட்டது. இவற்றை நான் முன்னுரையாகவே கூறுகின்றேன். எனது உரையின் தலைப்பில் நான் இன்று எழுப்பிய கேள்விக்கு இது வரையில் நான் கூறியது முன்னுரையே. ஒரு சமூகத்தின் வாழ்வியலைத் தோற்றுவிப்பதற்கு, நிர்ணயிப்பதற்கு, வரையறைப்படுத்துவதற்கு, தொடரச் செய்வதற்குப் பல காரணிகள் உண்டு. அந்தச் சமூகம் ஊன்றி நிற்கும் நிலம், சுவாத்தியம், சூழல், முன்னிருந்தோரை வந்தண்டிய புலம் பெயர்ந்தோர் போன்ற பல காரணங்கள் ஒரு சமூகத்தின் வாழ்வியலுக்குக் காரணிகளாகின்றன. ஆண்மக்கள் குறைந்த சமூகம் பல பெண்களை ஒரு ஆணுக்குச் சேர்த்து வைக்கிறது. பொருள், பணம், முதல் சிதறாமலிருக்க சகோதரர்கள் சிலரை ஒரு பெண்ணுக்கு கொடுக்கும் வழக்கம் இருக்கிறது.

மணவினை இன்றி ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்க்கையும் இருந்தது. இவை ஒரு சமூகத்தில் விழுமியங்களாகத் தோன்றும் போதே, ஒருவனுக்கு ஒருத்தி என்ற இன்னொரு

விழுமியத்தையும் தோற்றுவிக்கும். இன்னோரு சமூகம் முன்னையதைக் கீழானது என்றும், ஒழுக்கம் தவறிய பாங்கு என்றும் எள்ளி நகையாடுகின்றது கீழ் நிலையில் நோக்குகின்றது. இந்த நிலையில் சமூகவியற்கோட்பாடுகள் இவற்றை விளக்குகின்றன. அவ்விதம் விளக்கும் பொழுது அவற்றிற்கு ஒரு மதிப்பீடு வழங்கவும் செய்கின்றன. மக்கள் நோக்கில், மக்கள் அனுபவத்தில், மக்கள் தன்னிலை நோக்கில் இவை பார்க்கப்படுகின்றன. தென்னாசியாவில் மாத்திரம் ஏன் சாதிப்பிரிவினை தோன்றியது? வேலைப்பிரிவில் தோன்றிய சாதிப்பிரிவினை, ஏன் வேறு நாடுகளிலும் அதே வேலைப்பிரிவினை இருந்தும், சாதி நிலை, சாதி வெறி தோன்றவில்லை. சத்திரிய ராஜபரம்பரை ஏன் சாதிப்பிரிவுக்குள் அடக்கப்பட்டது. இதனால் வர்ணாசிரம தர்மம் இந்தியாவின் விழுமியமாக, நாகரீகமாக, கலாச்சாரப் பண்பாக தோன்றியது என நாம் கொள்ளலாம். வர்ணக் கொள்ளைகளை விளக்க, புரிந்து கொள்ள, வர்ணாசிரமதர்மம் சாதியிலிருந்து பிரிந்து, அவற்றிற்குச் சமயநிலை ஏற்றப்பட்டு ‘மனுதர்ம சாஸ்திரம்’ சாஸ்திர ரீதியாக அதை அங்கீகரிக்க, இந்து சமயத்தின் இணைப்பிரியா அலகாக சாதிப்பாகுபாடு வரிக்கப்பட்டு விட்டது. வர்ண முறையிலிருந்து, சாதிப்பிரிவுகள் என்று எண்ணிலடங்கா சாதிகள் பின் தோன்றத் தொடங்கின. இதை விளக்க முற்பட்ட மேலைத்தேச ஆய்வறிவாளர்கள், பிற்போக்கான ஒரு கூட்டத்தினர் இந்த தெற்காசிய நாட்டவர் என்று ஒரு முத்திரை குத்தமுற்பட்டபோது, இரண்டு விடயங்கள் இதனால் பெறப்படுகின்றன. ஒன்று சாதியும், வர்ணாசிரமதர்மமும் தான் தெற்காசிய மக்களுக்கு இருக்கும் ஒரேவிழுமியம் என்றும், ஏனைய பல வர்ணாசிரமதர்மத்தைப் போன்றோ அல்லது அதைவிடக் கீழான பண்பாட்டு அம்சங்கள் ஏதும் அவர்களுக்கு இல்லை என்றும் மோசமான வாழ்வியல் அனுபவங்கள் அம்மேலைத்தேச மக்களுக்கும் இருந்தன என்பதும் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இவ் அடிப்படையில் Racial Theories ஆரிய மேலாதிக்கம் லட்சக்கணக்கான யூதர்களைக் கொண்டொழித்தும் வர்க்க ரீதியில் மேலைத்தேச மக்கள் ஒடுக்கப்பட்டதும், அங்கு தோன்றிய புரட்சிகள் அவற்றுக்குச் சான்றாக இருந்தாலும், காட்டு மிராண்டிகளாக

வரலாற்றில் காட்டப்பட்டோர் ஆசியர்களாகவும், ஆபிரிக்கர்களாகவுமே இருந்தனர். ஆசிய பெண்ணடிமைத்தனத்தைப் பேசியோர் Chastity Belt பற்றிக் கூறத்தயங்குகிறார்கள். காலனிய ஆதிக்கத்தால் ஏனைய பல நாடுகளின் செல்வங்களை அபகரித்தும், அடாவடித்தனம் செய்தும், கலாசார சின்னங்களை அழித்தும், மக்களைக் கொன்றும், சீர்குலைத்த மேலாதிக்க நாடுகள் நாகரிக (Civilized) நாடுகளாக இன்றும் பேசப்படுகின்றன. சமூகவியற் கோட்பாடுகள் அந்தந்த நாட்டு நிலைமைகளுக்கு விளக்கம் கொடுக்கின்றன. யாருக்கு விளக்கம் கொடுக்கும் அதிகாரம் உண்டு? இதனால் றொடியர்களைச் சிங்களவர்கள் நடத்திய விதமும், பஞ்சமர்களை தமிழர்கள் நடத்திய விதமும் அங்கீகாரம் பெறுகின்றது என்பது அல்ல, இதன் அர்த்தம் சமூகவியற்கோட்பாடுகள் அதிகாரம் ஆதிக்கம் உள்ளவர்களால் பாரபட்சமாகக் கையாளப்படலாமா என்பதே கேள்வி.

யார் கூறுவது சரி, எவ்விடத்தில் இருந்து அது கூறப்படுகிறது என்பது முக்கியமாகிறது. பெண்நிலை வாதிகள், காலா காலாமாகத் தோற்றுவிக்கப்பட்ட கோட்பாடுகள் சிலவற்றை கேள்விக் குறியாக்கிவிட்டார்கள். ஆதிகாலத்தில் வேட்டையாடித்திரிந்து உணவு சேகரித்த ஆணைச் சமூகத்தில் முதன்மைப்படுத்தப்பட்ட போது விவசாயத்திலும் மாடு மந்தை வளர்ப்பதிலும், உலக மானிட உற்பத்தியைத் தொடரச் செய்வதற்கும், தாயாக உரமும், வளமும் சேர்த்த பெண் இரண்டாம் பட்சப் பிரஜையாக்கப்பட்டு விட்டாள். இந்தத்தவறான கணிப்பு ஒரு கருத்தியலுக்கு வழிவகுத்து தொடரப்பட்டு, இன்னும் "மனைவியாகவும்" "இல்லாளாகவும்" வீட்டுக்குள் இருப்பவளாகப் பெண் கொள்ளப்பட்டு விட்டாள். அவளது ஆக்கபூர்வமான வேலைகள், வேலைகளாகப் பார்க்கப்படாமல், கடமையாகவும், சேவையாகவும் பார்க்க மக்கள் பழக்கப்பட்டு விட்டார்கள்.

மனோதத்துவரீதியில் மானிட வாழ்வியலில் சில கூறுகளைப் புரிய வைக்க முயன்றவர்களில் Sigmund Freud (1856-1939) முதன்மை பெறுகின்றார். இவரது சில விளக்கங்கள் பெரிதும் சர்ச்சைக்கு உள்ளாகி பின்பு அவராலேயே மறுபரிசீலனை செய்யப்பட்டது. பெண்ணைப் பற்றிய அவரது கணிப்பும், கண்டு பிடிப்பும்

பெண்நிலைவாத சமூகவியற் கோட்பாட்டாளராலும், மனோதத்துவ அறிஞர்களாலும் நிராகரிக்கப்பட்டு விட்டன. Penis Envy என்ற 'ஆண்குறிப் பொறாமை' என்ற அவரது கருத்தும் Castration Complex 'அகற்றப்பட்ட பீஜீம்' சம்பந்தமான மனப்பாங்கும் என்ற அவரது கண்டுபிடிப்புக்கள் மிகவும் சர்ச்சைக்குள்ளானது மட்டுமல்ல, ஆண்நிலை நோக்கில் கூறப்பட்டது என்றும் நிராகரிக்கப்பட்டு விட்டன. பெண் குழந்தைகளுக்கு தமது தம்பிக்கோ அல்லது அண்ணனுக்கு இருப்பது போன்ற ஆண்குறி இல்லையே என்ற ஏக்கம், ஒரு குறைவுடைய மனோபாவத்தை ஏற்படுத்துகின்றது என்பது அவரது வாதம். அதே போல தனக்கு பீஜங்கள் அகற்றப்பட்டு விட்டதனால் அவளுக்கு அந்தக் குறைபாடு ஒரு மனச்சிக்கலைத் தோற்றுவித்து விட்டது என்பது அவரது கருத்தாக முன்வைக்கப்பட்டது.

இது மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் போடும் ஒரு முடிச்சாக இருக்கும் போல எனக்குத் தோன்றுகின்றது. இதனால் பெறப்படுவது யாதெனில் இந்த அறிவாளிகள் கூட எப்படிப் பொது அறிவற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது தான். வலிந்து மனம் போன போக்கில் சில நிரூபிக்க முடியாத வாதங்களை முன்வைப்பது என்பது மடமை என தற்போது வேறு சிலர் எடுத்துக் காட்டியுள்ளனர். ஆனால் இதன் அடிப்படைக் குறைபாடு என்னவென்றால், இவை யாவும் ஆண் நிலை நோக்கில், ஆண் அதிகார மட்டத்தால் பார்க்கப்படும் ஒரு கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கிறது என்பதுதான்.

பெண்கள் எப்படி எதற்காக, எப்பொழுது ஆண்களுக்கு அடங்கி நடக்க வேண்டி வந்தது, என்பது ஒரு முக்கியமான கேள்வியாக பல சமயங்களில் கேட்கப்பட்டது. பலர் விடை காணமுயன்றார்கள். ஆனால் எதுவும் சரியான விடையாக முற்றுமுழுதாக அங்கீகரிக்கப்படவில்லை. அமெரிக்காவின் மானிடவியலாளர் (Henry Lewis Morgan) ஹென்றி லுவிஸ் மோர்கன் (1818 - 1881) கூறியதை ஒட்டி (Engels Friedrick) எங்கில்ஸ் ப்ரட்றிக் (1820 - 1995) என்ற மாக்ஸிச கோட்பாட்டாளர் பெண்களின் வீழ்ச்சிக்கு தனிச்சொத்துடமையும், குடும்பங்களின் தோற்றமுமே காரணம் என்று கூறியுள்ளார். பெண்களுடைய வரலாற்று வீழ்ச்சி (The world historical defeat) ஒரு காலகட்டத்திலேயே தோன்றியது என்று அவர் வலியுறுத்திக்கூறியுள்ளார்.

ஒரு காலக்கட்டத்தில் ஆண்களும், பெண்களும் கூட்டு வாழ்வு வாழ்ந்தனர். இதில் ஆண்களும், பெண்களும் எல்லா வேலைகளையும் பகிர்ந்து செய்தார்கள். யாருடைய பிள்ளைகள் என்ற கேள்வி எழாமல் எல்லோரதும் பிள்ளைகளும், குழந்தைகளும் அவர்களால் வளர்க்கப்பட்டார்கள். சொத்தும், சுகமும் சமமாகப்பிரிக்கப்பட அங்கு சமத்துவமும் நிலவியது. ஆனால் எப்பொழுது ஒரு வலிமை மிக்க பெண், எனது மகன் / மகள், எனது சொத்து, அவர்களுக்கு செல்ல வேண்டும். என் பிள்ளைகளை நான் அறிய வேண்டும். அவனுக்கும், அவளுக்கும் ஏகபோகமாய் என்சொத்தைக் கொடுக்கவேண்டும். இதனால் எனது பெண்ணை மனைவியாகக் கட்டுப்படுத்த வேண்டும், என்று நினைக்க தொடங்கி அதன் முதல்கட்டமாகக் கூட்டுவாழ்வு உடையத் தொடங்க, தனிக்குடும்பம் என்ற நிறுவனம் தொடங்கியது என்பது எங்கல்ஸின் வாதம்.

இந்தக் காலகட்டத்தில் பெண் அடங்கிநடக்கத் தொடங்கினாள். கணவன் என்ற நாயகனுக்குக் கீழ்ப்படிந்து மறு உற்பத்தி செய்யும் சாதனமாக மாற்றப்பட்டாள். அவளது சமத்துவம் அகற்றப்பட்டு உரிமைகள் அகற்றப்பட்டு வீழ்ச்சிகாணத் தொடங்கியது. வெளி உற்பத்தி வேலைகள் மறுக்கப்பட்டு குழந்தை வளர்ப்பு அவளுக்கு மட்டுமே என்றாகிப்போனது. மேற்கண்ட விபரங்கள் கோட்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மானிடவியலாளர்களுக்கும், சமூகவியலாளர் களுக்கும் போதிக்கப்பட்டுவந்தது. பெண்நிலைவாதிகள் இந்தக் கோட்பாட்டில் பல அர்த்தம் பொதிந்த கேள்விகளை எழுப்பினர். தனிச்சொத்து இல்லாதவர்களும், குடும்பமாக வாழாதவர்களும் கூட பெண்ணில் ஆதிக்கம் செலுத்தினார்கள். கணவன் அல்லாத மகன், தகப்பன், அண்ணன், தம்பி, தாய்மாமன் போன்ற ஆண்களும் பெண்களை கட்டுப்பாட்டில் தானே வைத்திருந்தார்கள் பெண் இப்போது உற்பத்தியிலும் ஈடுபட்டு மறு உற்பத்தியும் செய்கிறாளே. அவளுக்கும் தனிச்சொத்திருக்கும் போதும் அவள் ஆளப்படுகிறாளே ஏன்? ஆகவே தனிச்சொத்துக்கும், பெண்ணடிமைக்கும் காரணகாரியாகத் தொடர்பு இருப்பது போலத் தெரியவில்லையே என்பது இவர்கள் வாதம்.

வர்க்கப்பார்வையில் எல்லாப் பிரச்சினைகளையும் பார்ப்பது மாக்ஸிச வாதிகளுக்கு வழக்கமாகிவிட்டது. வர்க்கமற்ற ஒரு சமதர்ம சமுதாயத்தில் பெண்ணடிமை அழிந்து விடும் என்பது அவர்களின்

பெயர் போன வாதம். இது நடக்கவில்லை என்பது பெண்ணிய வாதிகளின் வாதம்.

போராட்டத்தில் வர்க்கத்தை முதன்மைப்படுத்திய மாக்ஸிச வாதிகள், பெண் நிலையின் அடிமைத்தனத்தைக் காணத்தவறிவிட்டதினால், பெண்நிலை வாதிகளும் மாக்ஸிச வாதிகள் சிலரும் முரண்பட வேண்டி வந்துவிட்டது ஆகவே காலத்துக்கேற்ப புதிய கோட்பாடுகளின் தேவையை நாம் உணர வேண்டும்.

**உசாத்துணை நூல்கள் :**


Engels, Ferderick 1972. The Origin of the Family, Property and State. Pathfinder, New York

Freud, Sigmund 1977. On Sexuality. Penguin, Harmondsworth

# தொழிலில் பெண்களின் நிலை – ஏறாவூர் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**எம். எஸ். நூர்ஜஹான்**

**ஆய்வுச்சுருக்கம்**

உலக வரலாற்றில் அனைத்துக் காலகட்டங்களிலும் தொழில் ரீதியாகப் பெண்கள் பாரபட்சமாகவே நடத்தப்பட்டு வந்துள்ளனர். இதற்கு அடிப்படைக் காரணம் பால்நிலைக் கருத்தாக்கத்திற்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுத்தமையாகும். இதனால் பெண்கள் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட மரபு ரீதியான தொழில்களிலே ஈடுபட நேர்ந்தது. இத்தகைய நிலையையே இன்று இலங்கையிலும் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக பெண்கள் இரண்டாம் நிலைச் சம்பாதிப்பாளராகவும், மலிவான, எளிதில் வசைக்கக்கூடிய, இலகுவில் நீக்கக் கூடிய தொழிலாளர்களாகவும் நோக்கப்படுவதனால், அரைத் தேர்ச்சியும், தொழிலாளர் செறிவும் தேவைப்படுகின்ற தொழில்களிலே கூடுதலாக ஈடுபடுத்தப்படுகின்றனர்.

பெண்களது சமூகத்தகுநிலையை உயர்த்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் இக்காலகட்டத்தில் இத்தகைய சமூகப்பிரச்சினையை கருப்பொருளாகக் கொண்டு இவ்வாய்வு இடம்பெற்றுள்ளமை முக்கியமானதொன்றாகும். குறிப்பாக பெண்களின் தொழில் தன்மை கீழ்நிலைக்குட்பட்டமைக்கான காரணங்கள், அவர்கள் செய்யும் தொழில்களில் எதிர் நோக்கும் பிரச்சினைகள், இதனைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகள் என்பவற்றை நோக்காகக் கொண்டு,

ஏறாவூர் பிரதேசத்தை மையமாக வைத்து இவ்வாய்வு அமைந்துள்ளது. இவ் ஆய்வுக்காக வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், எழுமாற்று ரீதியான மாதிரியும் கையாளப்பட்டுள்ளது.

தொழில் ரீதியாக பெண்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகின்றமை பாரிய சமூகப் பிரச்சினையாகும். இதனைத் தவிர்ப்பதற்கு பெண்களின் வாழ்நிலைச் சூழல் மாற்றியமைக்கப்படுவதுடன், பெண்களுக்கே தங்களது தொழில் நிலை குறித்த விழிப்புணர்வும் அவசியமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக மனித அபிவிருத்தி பின்னணியில் பெண்களது உள்ளாற்றலை விருத்தி செய்யவும் பொருளாதார வளர்ச்சியில் சம பங்காளராகச் செயற்படுவதற்குமான செயன்முறைகளை குடும்பமும், சமூகமும், அரசும் வகுப்பதோடு அவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்குரிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமே இந்நிலையைத் தடுக்க முடியும்

இன்றைய காலகட்டத்தில் அனைத்துலக மக்களாலும் பேசப்படுகின்ற ஒரு முக்கிய விடயமாக தொழிலில் பால்நிலை (Labour in Gender) என்பது காணப்படுகிறது. இவ்வெண்ணக்கரு மனித மனங்களிலே விதைக்கப்பட்டு வேரூன்றி நிற்கின்றமையால், அதனுள் பெண்களைப் புதைத்து ஆராய்ச்சி நடத்த வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. ஆண் - பெண் என்பது இயற்கையினால் உயிரியல் ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு விடயம். இதற்கு அளவுக்கதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்து மென்மேலும் ஸ்திரப்படுத்தி விட்டதனால் தான் ஆண், பெண் தொழில்களிடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. எனவேதான் இதனை ஒரு சமூகப்பிரச்சினையாகக் கருதி இத்தகைய ஒரு தலைப்பில் ஆராய வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளோம்.

பொதுவாக "இயற்கை சார்ந்து மனிதக்கரங்களினால் பிரயோகிக்கப்படும் அனைத்துத் தொழிற்பாடுகளும் தொழில்" என்று சமூகவியலாளர் ஹனா ஹரண்ட் (Hanna Harrand) கூறுகின்றார். (பெண் படைப்பாளிகளின் தொகுப்பு, 2002:128). இங்கு பெண்களின் தொழில் உருவாக்கம் எனும் விடயமானது கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்தே

உருவானது. இக்காலப்பகுதியில் மலிவான கூலியுடன் வேலை செய்யக்கூடிய ஆளணியினராகப் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன், பாரம்பரிய மரபுத்தொழில்களையே வீட்டிற்கு வெளியேயும் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதன் விளைவாக இன்றும் கூட பெண்களுக்குப் பொருத்தமானவை எனச் சமூக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில தொழில்கள், பால்ரீதியாகப் பெண்களுக்குரியவையாக ஒதுக்கிவைக்கப்பட்டு, அவற்றில் பெண்கள் கும்பலாகக் காணப்படுவதை இலங்கையிலும் காணக்கூடியதாக உள்ளது. பெண்கள் கூடுதலாக ஓரங்கட்டிய தொழில்களிலேயே ஈடுபடுவதால், பெரும் சந்தைப் பொருளாதாரத்தின் எல்லைக்கு வெளியே உற்பத்தியாளர் என்று முத்திரை குத்தப்படாத வகுப்பினராக காணப்படுகின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

இலங்கைப் பொருளாதாரத்தை தாங்கும் தூண்களாகப் பெண்கள் போற்றப்பட்டாலும் அவர்களின் தொழில் தன்மையில் பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. இன்றும் பெண்கள் தங்கள் வீடுகளில் அல்லது வீடுகளுக்கண்மையில் குறைந்த வருமானம் ஈட்டும் தொழில்களையே செய்து வருவதுடன், அதில் பல்தரப்பட்ட பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர். இவ்வாய்வானது ஏறாவூர் பிரதேசத்தை ஆய்வின் தளமாகக் கொண்டு தொழில் ரீதியாக பெண்கள் இரண்டாம் பட்சமாக்கப்பட்டமைக்கான காரணங்கள், அதனால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இதனை எவ்வாறு தீர்க்கலாம் என்பது பற்றிய விடயங்களை உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றது.

ஆய்வு முறையைப் பொறுத்தவரை, இவ்வாய்வானது விபரணமுறை ஆய்வாக (Descriptive analysis) அமைந்துள்ளது. இங்கு தரரீதியான ஆய்வுமுறையும் (Qualitative method) எண்ரீதியான முறையும் (Quantitative method) பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முதல்நிலைத்தரவுகளை சேகரிப்பதற்காக பங்குபற்றல் அவதானம் (Participatory observation), கட்டமைக்கப்படாத நேர்காணல் திறந்த வினாக்கொத்து முறை ஆகிய முறைகள் கையாளப்பட்டுள்ளன. இம்முறைகள் இவ்வாய்வு நோக்கத்தின் நிறைவுபடுத்தலுக்கான மக்களது உளப்பாங்குகள், கருத்துக்கள் என்பனவற்றை சுதந்திரமாகப் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமாக அமையும் என்று கருதப்பட்டதால்

தெரிவுசெய்யப்பட்டன. ஆய்வுப்பிரதேசத்தின் சமூகக்கட்டமைப்பின் பரந்துபட்ட தன்மை காரணமாக, தரவுசேகரிக்கும் பொருட்டு மாதிரி எடுப்பு கையாளப்பட்டுள்ளது.

**இவ்வாய்வின் நோக்கம் மூன்று வகைகளாகும் அவையாவன**

- ☞ பெண்கள் குறைத்தேர்ச்சியுடைய தொழில்களைச் செய்வதற்கான காரணிகளை அடையாளம் காணல்.
- ☞ பெண்கள் செய்யும் தொழில்கள், அதில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனம் காணல்.
- ☞ பெண்களின் தொழில் தன்மையை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகளை முன்மொழிதல்.

இவ் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஏறாவூர் பிரதேசமானது இலங்கையின் கிழக்குத்திசையில் அமைந்துள்ள மட்டக்களப்பின் சுமார் 12 கிலோ மீற்றர்களுக்கப்பால் அமைந்துள்ளது. ஏறாவூர் நகர் பிரதேசமானது வடக்கே வங்கக் கடலையும், கிழக்கே ஆறுமுகத்தான் குடியிருப்பையும் தெற்கே மட்டக்களப்பு கடலேரியையும், மேற்கே செங்கலடி பிரதேசத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. (ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம், 2005:02). 2006 ஆம் ஆண்டின் கணிப்பீட்டின் படி, ஏறாவூர் நகர் பிரதேசத்தின் மொத்த சனத்தொகை 35356 ஆகும். இதில் ஆண்கள் 17451 பேரும், பெண்கள் 17905 பேருமாக காணப்படுகின்றனர். (ஏறாவூர் பிரதேச வளமூல ஏடு - 2006). இவ் ஆய்வுப்பிரதேசமானது 17 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் முஸ்லிம் சமூகத்தினரே கூடுதலாக வாழ்கின்றனர். இவ்வாய்வானது தொழில் புரியும் பல பெண்களிடம் நேர்முகம் கண்ட தரவுகளின் அடிப்படையிலேயே இடம்பெறுகிறது.

இவ் ஆய்வுப்பிரதேசம் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசமாக இருப்பதால் இங்குள்ள பெண்களில் குறிப்பிட்ட சிலர் அரச சேவைகளில் ஈடுபடும் அதே வேளையில், கூடுதலான பெண்கள் தங்கள் வீடுகளில்

இருந்தவாறே சிறுகைத்தொழில்கள், சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக உள்ளது. சில பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடிச் செல்வோராகவும் உள்ளனர். எனவே இவ்வாறு வருமானம் குறைந்த தொழில்களை இப்பெண்கள் செய்வதற்கான காரணங்களை கண்டறியும் பொருட்டு ஆண்கள், பெண்கள் உள்ளிட்ட இருபாலாரிடமும் நேர்முகம் கண்ட தரவுகளின் அடிப்படையில் பின்வரும் காரணங்களை அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளன.

**இக்காரணிகளை இரு பிரிவாக பிரித்து நோக்கலாம்**

- ஒன்று உயிரியல் காரணிகள்
- மற்றையது சமூகக்காரணிகள்

இயற்கையாக பெண்ணின் உடல் தன்மை ஆணிலிருந்து வேறுபட்டது. குறிப்பாக கருவுறுதல், தாய்மை அடைதல் போன்ற காரணங்களினால் பெண் பலவீனமானவள் என்று சமூகத்தால் பார்க்கப்படுகின்றாள். இதனால் உடற்திறமையை வைத்துக் கொண்டு ஆணுக்கு உயர்வான தொழிலையும் பெண்ணுக்கு உடலியலாமை காரணமாக பாரம்பரியத் தொழில்களையும் செய்வதற்குப் பணிக்கப்படுகின்றாள். இத்தகைய உயிரியல் தன்மையே பின்னர் பல்தரப்பட்ட சமூகக்காரணிகளுக்கு பெண்களை உட்படுத்துகிறது. இங்கு நேர்முகம் கண்டதில் பலரது கருத்து இதுவாகவே காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதில் உள்ளடங்கும் காரணிகளை பின்வருமாறு அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளது.

சமூகமானது பெண்களை பெரும்பாலும் வீட்டோடு இருத்திவைப்பதையே விரும்புகிறது. இதனால் சில பெண்கள் வெளியுலகம் தெரியாமலே வளர்கின்றனர். பெண்களும் தாங்களே தங்கள் நடமாட்டத்தை குறைத்துக் கொள்ளும் வகையில் வெளியில் அதிகம் போகத் தேவையில்லாத, வீட்டிலிருந்து பிள்ளைகளையும் கணவனையும் கவனித்துக்கொண்டு செய்யக் கூடிய வேலைகளையே

தேர்ந்தெடுக்கின்றனர். இதனையே பெண்கள் பெரிதும் விரும்புவதையும் இங்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஒரு பெண்ணின் சமூக அந்தஸ்தானது தாய், மனைவி என்ற நிலையில் வைத்து நோக்கப்படுகிறது. இதனால் அவர்களது செயற்பாடு பிள்ளைபராமரிப்பு, வீட்டு வேலை என்ற அடிப்படையில் தொழிற் சந்தைக்கு வெளியே வைத்து நோக்கப்படுகிறதே தவிர, உற்பத்தி சார்ந்ததாக இல்லை. இதுவும் பெண்கள் உயர் தொழில்களை பெரிதும் விரும்பாமைக்கான காரணமாக இங்கு அவதானிக்க முடிந்தது.

குடும்பங்களில் பெண்கள் இரண்டாவது வருமானம் சம்பாதிப்பவராக (Secondary breadwinners) பார்க்கப்படும் நிலையே காணப்படுகின்றது. ஏனெனில் பெண்களால் மேற்கொள்ளப்படும் தொழில்கள் மிகக் குறுகிய வட்டத்தினுள்ளேயே இருப்பதால் வருமானத்தின் அளவும் குடும்பத்தில் இரண்டாம் பட்சத் தேவையாகவே கொள்ளப்படுகிறது. இப்பெண்களின் மனப்பாங்கும் இதுவே சரியானது என்ற நிலையில் சிந்திப்பதனால், ஆண்களை விட வருமானம் குறைவான தொழிலைச் செய்வதற்கு பெண்கள் முன்வருகின்றனர்.

பெண் தாய், மனைவி என்ற வகிபங்கால் (Role) கணவனுக்கு கட்டுண்டே காணப்படுகிறாள். இதனால் குடும்பத்தில் மனைவி தனது கணவனின் செயற்பாடுகளை பின்தொடர்ந்து செல்வதையே பெரிதும் விரும்புகிறாள். இதற்குக்காரணம் "உத்தியோகம் புருஷலட்சணம்" என்பதற்கிணங்க ஆண்கள்தான் உழைக்க வேண்டும் என்ற பெண்களின் மனப்பாங்கும், கணவன் மனைவியை விடக்கூடிய வருமானம் பெறுபவனாக இருக்க வேண்டுமென்று சமூகம் எதிர்பார்ப்பதுமே ஆகும். இத்தகைய மனப்பாங்கும் இப்பிரதேசத்தில் பெண்களின் குறைத்தேர்ச்சியுடைய தொழில் தன்மைக்கு வழியமைத்துள்ளது எனலாம்.

சமூகத்தில் வழமையாக ஒரு பெண்ணுக்கு குடும்ப வேலைகள் அதிகமாகவே காணப்படுகின்றன. இந்நிலையில் வேலைசெய்யும் பெண் முச்சுமைக்கு உள்ளாக்கப்படுகின்றாள். இதன் விளைவாக பெண்கள் உயர் தொழில்களில் திறம்பட வினைத்திறனுடன் செயற்படமாட்டார்கள் என்ற வகையில், தொழில் வழங்குபவர்கள் உயர் சம்பளம், உயர்

தொழில் வாய்ப்புக்கள், தொழிற்திறனை வளர்த்துக் தெள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்க முன்வருவதில்லை. இந்நிலை பெண்களை தொழில் ரீதியாக இரண்டாம் பட்சநிலைக்கு தள்ளிவிட்டது.

பெண்ணின் வேலைவாய்ப்புடன் கூடுதலான சட்டமும் விதிகளும் சேர்த்து அணிவிக்கப்படுகிறது. உதாரணமாக லீவு வசதிகள், பெண் கருவுறும் காலம், குழந்தைப் பிறப்பு, நீண்ட நேர வேலைப்பழுவை ஏற்க முடியாமை போன்ற காரணங்களினால் மேல்மட்டத்தொழில்களில் (அதிாரம், நிதி, நிர்வாகம்) பொறுப்புள்ள பதவிகளை வகிப்பதிலிருந்து பெண்கள் விலக்கப்பட்டுள்ளனர். இதனையும் ஒரு காரணமாக அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

இவ் ஆய்வுப்பிரதேசத்தைப் பொறுத்தவரை, பாடசாலைக் கல்வியினை ஏதோ ஒரு வகையில் முடித்த பெண்கள் அல்லது உயர் கல்வி கற்பதற்கான அனுமதி கிடைக்காத பெண்கள், தங்கள் வீடுகளிலே முடங்கி விடுகின்ற தன்மையே இங்கு காணப்படுகிறது. சிலர் தையல், கைவினைப் பொருட்கள் போன்றவற்றைச் செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனையே பெற்றோரும் பெரிதும் விரும்புபவராகவும் உள்ளனர். சமூகமும் பெண்கள் தொழிற்கல்வி பெறுவதை அவசியமாகக் கொள்வதில்லை. இதனால் படித்த பெண் யுவதிகளும் தங்களது குடும்பத்தோடு இணைந்து மரபுரீதியாகச் செய்து வந்த சுயதொழில்களையே செய்வதற்கு முயற்சிக்கின்றமையையும் அவதானிக்க முடிந்தது.

**பெண்களுக்கு போதிய தொழில் நுட்ப அறிவும் சந்தைப்படுத்தல் வசிதிகளும் இல்லாதிருத்தல்**

பெண்களின் தொழில் நிலை கீழ்நிலையில் உள்ளமைக்கான காரணங்களுள் ஒன்றாக இதனையும் அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளது. இந்நிலையே மிகை உற்பத்தியிலிருந்து கூடுதலான வருமானம் பெறும் தொழில்களைப் பெண்கள் செய்ய முன்வராமைக்கான காரணமாகவம் கொள்ளப்படுகிறது.

இதே போன்று பெண்களின் தொழில் நிலை கீழ்நிலையிலும் வருமானம் குறைந்ததாயும் காணப்படுவதற்கு அமெரிக்க

சமூகவியலாளர் "தியோடர் கெப்லோ" (Theodore Caplow) பின்வரும் 5 காரணங்களைக் குறிப்பிடுகின்றார். (Heralambos & Heald, 1980:383). அவை யாதெனில்,

- பெண்ணின் தாய், மனைவி என்ற வகிபாகம்
- பெண் இரண்டாம் தர சம்பாதிப்பாளராக சமூகத்தால் பார்க்கப்படல்
- பெண்கள் கணவனது செயற்பாடுகளை பின் தொடர்ந்து செல்வதற்கே பெரிதும் விரும்புதல்
- பெண்ணின் வேலைப்பழு
- பெண்ணின் வேலையுடன் தொடர்புடைய சட்ட விதிகள்

இவ்வாறு பலவேறுபட்ட உயிரியல், சமூகக் காரணங்களினால் பெண்களின் தொழில்நிலை கீழ்நிலைக்கு உட்பட்டிருக் கின்றமையானது பெண்களின் பிரச்சினைகளாக இருந்தாலும், அதனை நாம் சமுதாயப் பிரச்சினையாகவே பார்க்க வேண்டும். குறிப்பாக பெண்களை பாரம்பரிய தொழிலிருந்து முற்று முழுதாக எம்மால் விடுதலையடையச் செய்ய முடியாது. இருப்பினும்

இத்தொழில்களை அவர்களுக்கு போதுமான வருமானம் தரக்கூடிய தொழிலாகவேனும் உருவாக்க வேண்டியது இன்றைய காலகட்டத்தின் தேவையாக உள்ளது.

## பெண்களால் மேற்கொள்ளப்படும் தொழில்வகைகளும் அத்தொழில்களில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

ஏறாவூர் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்கள் வியாபாரம், சிறுகைத்தொழில், மீன்பிடி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, அரச உத்தியோகம் போன்ற துறைகளில் ஈடுபடுவோராகக் காணப்படுகின்றனர். அந்தவகையில் 2006 ஆம் ஆண்டு கணிப்பின்படி இவ்வாய்வுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் தொழில் தன்மைகளையும், அதில் ஈடுபட்டுள்ள ஆண்கள், பெண்களின் எண்ணிக்கையையும் பின்வரும் அட்டவணையின் மூலம் அவதானிக்கலாம்.

| தொழில் துறைப் பகுதி | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| சேவைத்துறை | 536 | 203 | 739 |
| அரசசார்பற்ற நிறுவனங்கள் | 36 | 33 | 69 |
| வங்கி / கூட்டுத்தாபனம் | 14 | 12 | 26 |
| வியாபாரம் | 979 | 108 | 1087 |
| விவசாயம் | 377 | 23 | 400 |
| மீன்பிடி | 142 | - | 142 |
| சிறுகைத்தொழில் | 301 | 820 | 1121 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு | 403 | 500 | 903 |
| ஓய்வூதியம் | 53 | 32 | 85 |
| ஏனைய பகுதிகள் | 3843 | 491 | 4334 |
| **மொத்தம்** | **6684** | **2222** | **8906** |

*தொழில் பகுதியில் வேலைசெய்வோர் விபரம் (2006) (அட்டவணை - 1)*
*மூலம் : (ஏறாவூர் பிரதேச செயலக வளமூல ஏடு - 2006).*

இவ்வாய்வுப்பிரதேசத்தில் பெண்களில் குறிப்பிட்ட தொகுதியினர் அரச சேவைகளில் ஈடுபடுவதுடன், சிலர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக செல்வோராகவும் காணப்படுகின்றனர். பெரும் பகுதியினர் தங்கள் வீடுகளில் இருந்தவாறே சுய தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவோராகவும் உள்ளனர் (ஏறாவூர் பிரதேச செயலக வளமூல ஏடு, 2006:09). இவ்வாய்வுக்காக அரச சேவை, சுயதொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள பல பெண்களிடம் நேர்முகம் கண்ட தரவுகளின் அடிப்படையில், அவர்களின் தொழில் தன்மை, எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்த பின்வரும் அம்சங்களை அவதானிக்க முடிந்தது.

இப்பிரதேசத்தில் 2006 ஆம் ஆண்டு கணிப்பின்படி அரச சேவையில் ஈடுபடும் 739 பேரில் 203 பேர் பெண்களாவர். இவ் எண்ணிக்கை ஆண்களோடு ஒப்பிடுமிடத்து மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இங்குள்ள பெண்கள் கூடுதலாக ஆசிரியத்தொழில் மற்றும்

அலுவலகங்களில் வேலைசெய்வோராகவே காணப்படுகின்றனர். உயர் கல்வி கற்ற பெண்கள் பெரும்பாலும் ஆசிரியத்தொழிலையே விரும்புகின்றனர். ஏனெனில் குடும்பத்தைப் பராமரித்துக்கொண்டு செய்வதற்கு இலகுவானதொரு தொழிலாக இதனை கருதுகின்றமையாகும். மேலும் இங்கு சேவையாற்றும் பெண்கள் ஆண்களோடு போட்டியிட்டு முன்னிலை வகிப்பதற்கான மனப்பாங்கு அற்றவர்களாகவும், மென்மேலும் கற்கை நெறிகளைத் தொடர்ந்து தங்கள் திறமையையும், தகுதியையும் உயர்த்திக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ளத் தெரியாதவர்களாகவுமே காணப்படுகின்றனர்.

வேலை செய்யும் பெண்கள் பல்வேறு சுமைகளுக்குள்ளா கின்றமையும் பிரச்சினைக்குரிய விடயமாகும். சில குடும்பங்களில் பெண்கள் தன்னந்தனியே வேலைப் பளுவைச் சுமக்கும் நிலை காணப்படுகின்றது. இதனால் அவர்கள் உள, உடலியல் ரீதியாக பல்தரப்பட்ட உபாதைகளுக்கு உள்ளாகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதைவிட அலுவலகங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு அவர்களது தகுதிக்கேற்ற பொறுப்பான இடங்களை வழங்காமல் ஓரங்கட்டுதல், முன்னேற முயற்சிக்கும் பெண்களின் ஆற்றலும், ஆவலும் குடும்பத்தினாலும், அலுவலக மேலதிகாரிகளாலும் அமுக்கப்பட்டு பெண்களின் ஆளுமை நசுக்கப்படுதல் இவ்வேலை செய்யும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக அடையாளங்காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாய்வுப்பிரதேசத்தின் தொழில் தன்மைகளில் மிகவும் முக்கியமானதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பும் காணப்படுகிறது. இப்பிரதேசத்தில் ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களே கூடுதலாக வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடிச்செல்வோராகக் காணப்படுகின்றனர். இதனை பின்வரும் அட்டவணையின் மூலம் விளங்கிக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

*வெளிநாடு சென்றவர்கள் விபரம் (2002 - 2006) (அட்டவணை - 2)*

| | 2002 | | 2003 | | 2004 | | 2005 | | 2006 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Countries | M | F | M | F | M | F | M | F | M | F |
| Middle East | 296 | 509 | 299 | 531 | 329 | 574 | 309 | 544 | 383 | 494 |
| Europe | 12 | 04 | 07 | 02 | 20 | 06 | 14 | 05 | 20 | 06 |
| Total | 308 | 513 | 306 | 533 | 349 | 580 | 323 | 549 | 403 | 500 |

*மூலம் : (ஏறாவூர் நகர் பிரதேச செயலக வளமூல ஏடு - 2006).*

இப்பிரதேசத்தில் வெளிநாடு செல்லும் பெண்களில் அனேகமானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப்பெண்களாகச் செல்வோராகக் காணப்படுகின்றனர். இவர்கள் வறுமை, விலைவாசியுயர்வினால் தங்களது குடும்ப வளங்களை உயர்த்தும் வகையிலே வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்கின்றனர்.

எனினும் இவ்வாய்வுப்புலத்தில் தற்காலத்தில் வெளிநாடு செல்லும் பெண்களின் எண்ணிக்கையானது குறைவடைந்து கொண்டு வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. இங்குள்ள பெற்றோர் வீடொன்றினைக் கட்டியே தங்களது பெண்பிள்ளைகளுக்குத் திருமணம் முடிக்க விரும்புவதால், அதற்கு வசதியற்ற வறிய பெற்றோர் திருமணமாகாத பெண்பிள்ளைகளை வெளிநாடு அனுப்ப முன்வருகின்றனர். இவர்கள் வீடொன்றினை நிர்மாணிப்பதனை நோக்காகக் கொண்டே வெளிநாடு செல்வதனையும் இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பாடசாலைக்கல்வியை இடைநடுவில் விட்ட திருமணமாகாத வறிய பெண்களும், கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட பெண்களும், திருமணமாகி குழந்தைகளையுடைய வறிய குடும்பப் பெண்களும் கூடுதலாக இங்கு வெளிநாடு செல்வோராகக் காணப்படுகின்றனர். சிலர் நுகர்வுப் பொருட்கள், வசதி வாய்ப்புக்கள், ஆடம்பரம் போன்றவற்றால் கவரப்பட்டுச் செல்வோராகவும் காணப்படுகின்றனர்.

இவ்வாறு சென்றுவந்துள்ள பெண்களில், சிலரின் குடும்ப வளங்கள், வீட்டு வசதி, வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதை காணக்கூடியதாக இருப்பதுடன், சிலர் வெளி உலகம், வங்கித்தொடர்புகள், தொலைத்தொடர்புகள் குறித்த அறிவையும் பெற்றுள்ளனர். இதனால் தன்னம்பிக்கை, தீர்மானம் எடுத்தல் குறித்த மனப்பாங்கிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் இவர்களிடம் ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது. ஆயினும் பலர் பணிபுரியும் இடங்களிலும், சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குவதை நேர்முகம்கண்டதிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக பலர் வெளிநாடுகளில் இருக்கும் பொழுது வீட்டு வன்முறை, பால்ரீதியான துஷ்பிரயோகம், வேதனம் வழங்கப்படாமை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளதுடன் மீண்டும் வரும்பொழுதும் சமூகத்தினராலும், குடும்பத்தினராலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இவர்களால் கஷ்டப்பட்டு உழைத்து அனுப்பப்பட்ட பணம் கணவன் அல்லது தந்தையினால் வீண்விரயம் செய்யப்படுவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதைவிட இவர்களது பணம் நுகர்வுத்தேவைக்காக ஏற்கனவே பெற்ற கடனை அடைப்பதற்கே சரியாக இருப்பதனால் இவர்கள் இரண்டு அல்லது மூன்று தடவைகள் சென்று வர வேண்டியவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு இப்பெண்களின் குடும்பச் சூழல் அமைவதால், பெண்களின் தன்மையில் அவர்கள் பெறும் வருமானத்தினால் எத்தகைய நன்மையையும் அவர்களால் அடைய முடியாத நிலையையே காணக்கூடியதாக உள்ளது.

வெளிநாடு சென்று வருகின்ற பெண்கள் சமூக ரீதியாகவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக திருமணமாகாத பெண்கள் வெளிநாடு சென்று வரும்போது அவர்களைத் திருமணம் முடிப்பதற்கு ஆண்கள் எவரும் முன்வராத நிலையே இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. குறிப்பாக இவ்வாறு சென்று வருபவர்களை ''கற்பிழந்தவர்கள்'' என்ற நிலையில் வைத்தே பலர் நோக்குகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வேறுபாட்டினை இப்பிரதேச ஆண்களுக்கு திருமணத் துணையை தேடும்போது வெளிநாடு செல்லாத பெண்களுக்கே முன்னுரிமை வழங்குவதிலிருந்து அவதானிக்க முடிந்தது. அவ்வாறில்லையேல் வெளிநாடு சென்று வந்த பெண்களை முடிக்க முன்வருபவர்கள் சீதனம் கேட்பதையும் காணக்கூடியதாக உள்ளது. இதனால் சிலர் சீதனத்தொகையை உழைப்பதற்காகவும் மீண்டும் ஒருமுறை பணிப்பெண்களாகச் சென்று வருகின்றனர். இதனால் திருமணமாகாத பெண்கள் வெளிநாடு செல்லும் வீதமானது குறைவடைந்து ஆண்களது வீதம் அதிகரித்துள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆனால் வெளிநாடு சென்று வரும் ஆண்களை இச் சமூகம் கீழ்நிலையில் வைத்துப்பார்ப்பதில்லை. பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தங்களது பிள்ளைகள், குடும்பத்தை பிரிந்து அந்நிய நாட்டில் வேலை செய்து தனது உழைப்பால் தனது குடும்பத்தை, அதனால் சமூகத்தை, நாட்டை முன்னேற்ற எத்தனிக்கும் இப்பெண்களின் நிலையினை பால்நிலைக் கருத்தியலை வைத்து பாகுபடுத்தப்படுகின்றமை பெண்களுக்கு இழைக்கப்படும் மிகப்பெரிய அநீதியாகவே கொள்ளப்பட வேண்டும்.

### சுயதொழில்

விலைவாசியுயர்வினால் ஆணும், பெண்ணும் உழைத்தாக வேண்டிய கட்டாய சூழ்நிலையில், இன்று வீடுகளில் தங்கியுள்ள கூடுதலான பெண்கள் சுயதொழில் வாய்ப்பில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் பெண்களுக்கு வருமானம் ஈட்டும் சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் திட்டங்கள் அனைவரினாலும் விரும்பப்படுவதுடன், பணத்தேவையின் காரணமாக எந்தத்தொழிலையும் பெண்கள் செய்யத் தயாராக இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை தட்டு, பாய் இழைத்தல், மர முந்திரிகைக்கொட்டை பதனிடல் (தட்டுதல், சுரண்டுதல்), ஆடு, கோழி வளர்ப்பு, அரிசிமா இடித்தல், பற்பொடி தயாரிப்பு, அப்பம், இடியப்பம் அவித்தல், தையல், சிறு வியாபாரம் போன்றவை பொதுவாகப் பெண்கள் ஈடுபடும் தொழில்களாகக் காணப்படுகின்றன.

பெண்களின் வாழ்வில் வீட்டுப்பொறுப்பு பாரிய பங்கினை வகிப்பதுடன் சமையல், வீட்டு வேலைகள், பிள்ளைகளைப் பராமரித்தல் ஆகியவற்றைத் தனியே சுமக்கின்ற சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் இப்பிரதேசத்திலுள்ள பெண்களும் வெளியில் அதிகம் போகத்தேவையில்லாது வீட்டிலிருந்து பிள்ளைகளையும் கவனித்துக் கொண்டு செய்யக்கூடிய சுயதொழில்களையே பெரிதும் விரும்புவதைக் காணக்கூடியதாக உள்ளது. குடும்பப் பொருளாதாரச் சுமையினைத் தாங்கும் பெண்களுக்கு இச்சுயதொழில் பயனுள்ளதாயினும், இதன் மூலம் போதியளவான வருமானத்தை இப்பெண்கள் பெறுகின்றார்களா? என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

இப்பிரதேசத்தில் கூடுதலாகக் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், கணவனை இழந்தவர்கள், வறிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், பாடசாலைக் கல்வியை இடைநடுவில் விட்டவர்கள், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் போன்ற தரப்பினராலேயே சுயதொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக இவ்வாய்வுப் புலத்தில் பெண்களில் சிலர் ஒரு நாளில் பல குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபடுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.(ஏறாவூர் வரலாறு, 2005:183). உதாரணத்திற்கு கணவனை இழந்த ஒரு பெண் அக்குடும்பத்தைத் தாங்கும் பொறுப்புக்குரியவளாதலால், குடும்ப வருமானத்தைப் பெறும் பொருட்டு இரவில் இடியப்பம் அவிப்பதுடன், காலையில் அப்பம் சுடுதல், பகற்காலங்களில் முந்திரிக் கொட்டை சுரண்டுதல் (முந்திரிப்பருப்பின் மேற்தோலினைச் சுரண்டி அகற்றல்) போன்ற தொழில்களில் ஈடுபடுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆனால் இத்தொழில்கள் குறைந்த வருமானம் ஈட்டும் தொழில்களாகக் காணப்படுவதனால் குறைவான ஊதியத்தையே பெற்றுக்கொள்கின்றனர்.

இப்பிரதேசம் மர முந்திரிகைச் செய்கைக்கு உகந்த பகுதியாக இருப்பதால் அது சார்ந்த சுயதொழில்களும் பரவலாக இடம்பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. (ஏறாவூர் வரலாறு, 2005:176). குறிப்பாக முந்திரிக்கொட்டை சுட்டுத்தட்டுதல், முந்திரிக்கொட்டை சுரண்டுதல் போன்ற தொழில்களில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஒரு குடும்பத்தில் குழந்தைகளை உடைய

ஒரு தாய் ஒரு நாளைக்கு 5kg முந்திரிக்கொட்டையினை சுரண்டுகிறாள், இதற்காக கிட்டத்தட்ட எட்டு மணித்தியாலங்களுக்கு கூடுதலாக செலவிடுகின்றாள். இவர்கள் அன்றாட வீட்டு வேலைகள், சமையல், பிள்ளைகளை பராமரித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டவாறே இத்தொழிலும் ஈடுபடுகின்றனர். ஆனால் 1kg முந்திரிக்கொட்டையின் தோலினை சுரண்டி, அதை பல்வேறு தினுசுகளாகத் தெரிந்து கொடுப்பதற்கு கூலியாக ரூ.10 (2009ஆம் ஆண்டு கணிப்பீடு) வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் பல்வேறு வேலைப்பளுவிற்கு மத்தியில் இத்தொழிலை செய்யும் ஒரு பெண் எட்டு மணித்தியாலங்களை 5 கிலோ கிராம் சுரண்டுவதற்கு செலவிட்டுப் பெறும் கூலியானது ரூ.50 ஆகும். உண்மையில் இவர்களது உழைப்பிற்கு இவ்வூதியம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இதனை இங்குள்ளவர்கள் உணர்ந்திருப்பினும், பலர் “சும்மா வீட்டிலிருக்கும் எங்களுக்கு முதலின்றி ஒரு நாளைக்கு ரூ.50 கிடைக்கின்றதே” என்று ஆறுதலைடைவோராகவே காணப்படுகின்றனர். இதனால் இப்பெண்களுக்கு இச்சுயதொழில் முயற்சிகள் பழக்கப்பட்டதொன்றாகவும், வீட்டிலிருந்து செய்ய வசதியாகவுமுள்ளதால் வருமானத்தைப் பற்றியோ, தங்களது உழைப்பைப் பற்றியோ, செலவழியும் நேரத்தைப் பற்றியோ சிந்திக்கும் திறன் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதேவேளை பாடசாலைக்கல்வியை இடைநடுவில் விட்ட, கல்வியைப்படித்து முடித்த இளம் யுவதிகள் கூடுதலாக தையல் பயிற்சி பெற்று தங்கள் வீடுகளிலே இருந்து தைக்கின்ற நிலையையும் இங்கு காணக்கூடியதாக உள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒருவரேனும் தைக்கத்தெரிந்தவர்களாக உள்ளனர். இங்கு ஏனையோரை நாடாமல் ஆடைகளைத் தாங்களே தைத்துக்கொள்ளும் நிலையினால் இத்தையல் பயிற்சியால் இப்பெண்களுக்கு தொழில் ரீதியாக எந்த வருமானமும் இல்லை என்றே கூறலாம். பண்டிகைக் காலங்களில் மட்டும் சிலர் பல குடும்பங்களுக்கு தைத்துக்கொடுப்பதால் சிறு வருமானத்தைப் பெறக்கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே இத்துறையில் தொழில் நுட்பத்தேர்ச்சியினை

அடைந்தும் அதைக்கொண்டு தனியார் துறைகளிலோ அல்லது தொழில் நுட்பத்தரம் கூடிய சுயதொழில் முயற்சிகளிலோ ஈடுபட்டு உயர் வருமானங்களைப் பெறும் வாய்ப்புக்கள் இங்கு கலாசாரக் காரணிகளால் மழுங்கடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதைவிட குறிப்பாக பாய், தட்டு இழைத்தல் போன்றவற்றில் ஈடுபடும் பெண்கள் இதற்குரிய மூலப்பொருட்களை கூடுதல் விலைகொடுத்து வாங்க நேரிடுவதனாலும் இப்பொருட்களுக்கான கேள்வி சமூகத்தில் குறைந்து கொண்டு வருகின்ற படியினாலும் இவர்களில் பலர் தற்காலத்தில் இத்தொழிலை செய்யமுடியாதவர்களாக உள்ளனர். மேலும் இங்கு ஒருவர் ஒரு தொழிலைச் செய்ய முற்படும் போது அதைக்கண்டு ஏனையவர்களும் அதே தொழிலையே செய்ய முற்படுகின்றனர். இதனால் ஒருவருக்கு கிடைக்க வேண்டிய வருமானமானது பலருக்கு பங்கிடப்படும் நிலை காணப்படுகிறது. இந்நிலையானது போதியளவான வருமானத்தை எவரும் பெற்றுக்கொள்ள முடியாத தன்மையை இங்கு தோற்றுவித்துள்ளது. இது ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகும்.

எவ்வாறாயினும் பெண்களது சுயதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதற்காக சமுர்த்தி வங்கிகள் இப்பிரதேச பெண்களுக்கு கடனுதவிகளை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இதனை அவர்கள் தங்களது குடும்பத்தேவைகளுக்காகப் பயன்படுத்தும் நிலையையே காணக்கூடியதாக உள்ளது. இதைவிட இச்சுயதொழில் செய்யும் பெண்கள் பெறும் வருமானத்தை தங்களது கணவனிடம் கொடுத்து வீட்டுத்தேவைகளுக்குப் பயன்படுத்துவதால் ஆண்கள் கொண்டிருக்கும் பொறுப்புக்கள் குடும்பத்தில் குறைவடைந்து செல்லும் நிலையையும் இங்கு அவதானிக்க முடிந்தது.

சுயதொழில் செய்யும் பெண்கள் வீட்டு வேலை, உழைப்பு என்கின்ற இரட்டைச் சுமைக்கு உள்ளாகின்றனர். அதாவது இங்கு ஒரு பெண் தான் உழைத்து வருமானம் ஈட்டுகின்றாள் என்பதற்காக தனது வீட்டுப்பொறுப்புக்களை விடமுடியாத நிலையே காணப்படுகிறது. இவ்வாறாக பல்வேறு பிரச்சினைகளையும், தடைகளையும் சுயதொழில் செய்யும் பெண்கள் எதிர் நோக்குகின்றமையையும் இங்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தொழில் ரீதியாக பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுவது ஒரு தனி நபர் சம்பந்தப்பட்ட பிரச்சினையன்று. இது ஒரு சமூகப்பிரச்சினை என்ற வகையில் இதனை தவிர்ப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகும். குறிப்பாக பெண்களது தொழில் நிலையை முன்னேற்றவும், வருமானத்தைப் பெருக்கவும் பின்வரும் ஆலோசனைகளைத் தீர்வாக முன்வைக்கலாம்.

☞ பெண்களின் வாழ்நிலைச் சூழல் மாற்றப்பட வேண்டும். பெண்கள் ஆளுமையுள்ளவர்களாகவும் சுதந்திரமாகச் செயற்பாட்டிலும் ஈடுபடுவதற்குத் தேவையான சூழலினை ஏற்படுத்தும் வகையில் வீட்டிலும், சமூகத்திலும், தொழிற் தளத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தல்.

☞ பெண்கள் தமது துறைகளில் பதவியுயர்வுக்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும் பொருட்டு தங்களது தகுதிகளை உயர்த்திக்கொள்ளும் செயற்பாடுகளில் ஈடுபடல்.

☞ பெண்களின் சட்டபூர்வமான உரிமைகள், அவை மீறப்படுமிடத்து பெறக்கூடிய சட்ட உதவிகள் பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்படல் வேண்டும்.

☞ உள ரீதியாகப் பெண்களின் ஆற்றலை அதிகரிக்கும் வகையில் சுய முகாமைத்துவப் பயிற்சி நெறிகளை வழங்குதல்.

☞ தொழில் வழங்குவோர் கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் என்போருக்குச் சுக நலம் பேணலுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

☞ முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட தொழிற் சங்கப் பதவிகளுக்கு பெண்களைத் தெரிவு செய்தல்.

☞ ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு என்பனவற்றில் வெளிப்படைத்தன்மை பேணப்படல் வேண்டும்.

- பெண் அமைப்புக்கள் பெண்களின் தொழில் மேம்பாட்டுக்குத் தடையாகவுள்ள விடயங்களை நீக்கி அவர்களுக்கான அறிவூட்டல் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

- வெளிநாடு செல்லும் பெண்கள் குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பயிற்சிப் பிரிவுக்கு வலுவூட்டல்.

- குடிபெயர்ந்து வேலை செய்யும் நோக்குடையவர்களை முறையாக பதிவு செய்யும் நடைமுறைகளை அரசாங்கம் முன்னெடுத்தல்.

- வெளிநாட்டு வேலையாட்களாக செல்லும் வீட்டுப் பணிப்பெண்களை பாதுகாக்க குறிப்பிட்ட சில தலையீடுகளை அரசாங்கம் செய்தல் வேண்டும்.

- அனுப்பும், ஏற்கும் நாடுகளும் பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளைத் தவிர்த்தல்.

- வெளிநாடு சென்று வரும் பெண்கள் குறித்த சமூகக் கருத்தியலை மாற்றியமைத்தல்.

- பெண்கள் தாங்கள் உழைக்கும் பணத்தை தாங்களே கட்டுப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக்கொள்ளல்.

- பெண்கள் சட்ட ரீதியான முகவர்களின் மூலமாகவும் ஒப்பந்த அடிப்படையிலும் வெளிநாடு செல்வதை உறுதிப்படுத்தல்.

- அரசாங்கமானது பெண்களுக்கு வருமானத்தைத் தோற்றுவிக்கும் வழிவகைகளை உள்;ரில் ஏற்படுத்திக் கொடுத்தல்.

- அரசாங்கம் சந்தை வசதி பயிற்சியினூடாக பெண்கள் தாமே தங்களில் தங்கியிருக்கக் கூடியவாறு உணர்வுகளை கட்டியெழுப்பும் திட்டங்களைச் செயற்படுத்தல்.

- ☞ சுயதொழில் செய்யும் பெண்களுக்கான சந்தை வாய்ப்புக்களை அதிகரிப்பதுடன் சந்தை பற்றிய தகவலை அன்றாடம் பெற்றுக்கொள்ளக் கூடிய கட்டமைப்புக்களை பெண்கள் மத்தியில் ஏற்படுத்தல்.

- ☞ அரசாங்கமானது பெண்களின் ஆற்றலை மேம்படுத்த தொழிலகங்களை திறந்து அங்கு அவர்களை வேலைக்கமர்த்தல் மற்றும் சேவையாற்றக் கூடிய தொழில் நுட்ப நிபுணர்களை எல்லாத்துறைகளிலும் வேலைக்கமர்த்துதல்.

- ☞ வீட்டுப் பொறுப்பினை ஆண் அங்கத்தவர்களும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தினைக் கொண்டு வந்து சமூக உறவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல்.

- ☞ சிறு உற்பத்தியாளர்களுக்கு சாதகமான கொள்கைகளை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும்.

- ☞ வங்கிகளின் மூலமாக பெண்களின் சுயதொழில் முயற்சிகள் மற்றும் பெரிய அளவிலான முதலீடுகளுக்கு கடனுதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

- ☞ தொழிற்கல்வி நிறுவனங்களில் பெண்கள் கற்பதை ஊக்குவிக்க வேண்டும். இங்கு தொழில் நுட்பப் பயிற்சியோடு நிதி முகாமைத்துவம், சந்தை வாய்ப்புக்களைப் பெறும் வகைகள் போன்றவற்றிலும் பெண்களை விருத்தியடையச் செய்தல்.
- ☞ பெண்கள் குடும்பத்திலும் சமூகத்திலும் வெவ்வேறு வகிபங்குகளை வகிக்கலாம் என்பதை கருத்தரங்குகள் மூலம் தெளிவுபடுத்தி சமூகத்தால் அங்கீகரிக்கச் செய்தல்.

- ☞ விழிப்புணர்வு செயற்பாடுகள் மூலம், பெண்களின் பொருளாதார ரீதியான கீழ்நிலையினை அவர்களுக்கு தெளிவுபடுத்தல்.

மேற்படி விடயங்களை குடும்பமும் சமூகமும், அரசாங்கமும், பெண்கள் திட்டங்களை செயலாக்கும் நிறுவனங்களும் முன்னெடுத்துச் செல்லும் பட்சத்தில்தான் தொழில் ரீதியாக பெண்களின் நிலையினை உயர்த்திக் கொள்ள முடியும்.

**முடிவுரை:**

தொழிலில் பெண்களின் நிலை என்னும் தலைப்பிலான இவ்வாய்வானது தொழில் ரீதியாக பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறி அதைத் தவிர்ப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. பெண்களில் பெரும்பாலானவர்கள் பிழைப்பு நிலைப் பொருளாதாரச் செயற்பாடுகளில் சிக்குண்டுள்ளதுடன் சமூக, பொருளாதார ரீதியான தடைகளால் பெண்களுக்கு தொழில் சார் நகர்வும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இத்தகைய நிலையை களைவதற்கு சமூகமும் அரசும் பல்வேறு கொள்கை சார்ந்த திட்டங்களைக் கைக்கொள்வதுடன், பெண்களின் வாழ்நிலைச் சூழல்களும் மாற்றப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

தொழில் ரீதியாக பெண்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகின்றமை தனியாக ஒருவரால் தீர்வுகாணக்கூடிய பிரச்சினையன்று, இது ஒரு சமூகப்பிரச்சினை என்ற வகையில் ஒவ்வொருவர் எண்ணத்திலும் உதித்து செயற்பாட்டியல் ரீதியாக நல்ல மாற்றங்களை வெளிக்கொண்டுவருவதன் மூலமே பெண்கள் தொழிலில் அர்த்தபூர்வமான பயனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## Bibliography

01. Haralambos. M & Heald. R.M. 1980. Sociology Themes and Perspective. Oxford University Press, New Delhi.

02. Selvi Thiruchandren. 1999. The other Victims of War, Emergence of Female Headed Households in Eastern, Srilanka, Volume iii. Women's Education & Research Centre, 58, Dharmarama Rd, Colombo – 6, Srilanka.

03. ஊடறு. 2002. பெண் படைப்பாளிகளின் தொகுப்பு. விடியல் பதிப்பகம், பெரியார் நகர், கோயம்பத்தூர்.

04. ஏறாவூர் வரலாறு. 2005. ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்.

05. சாந்தி சச்சிதானந்தம். 2003. வறுமையின் பிரபுக்கள். மன்று, மட்டக்களப்பு.

06. மாற்றங்களின் முகப்புக்கள் - இலங்கையில் பெண்கள் (1986-1995). 1995. பெண்கள் ஆராய்ச்சி நிலையம்.

**அறிக்கை**

01. ஏறாவூர் பிரதேச செயலக வள மூல ஏடு - 2006.

# பின்னைப் பெண்ணியங்கள் (Post Feminisms) - ஓர் அறிமுகம்

நதீரா .ம

I

மனித வாழ்க்கையை, விழுமியங்களை மேம்படுத்துகின்ற முற்போக்குக் கருத்தியல்களுள் பெண்ணியமும் முக்கியமானதொன்று. இதுகாறும் தமிழ்ச் சூழலில் பெண்ணியக் கருத்தியல், பெண்ணிய அரசியல், பெண்ணிய இலக்கியம், பெண்ணிய விமர்சனம், பெண்களிலக்கியப் பாரம்பரியம் என விரிந்து செல்லும் பல தளங்களில் ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை பெண்ணியம் பற்றி வெளிவந்த நூல்கள் பலவும் பெண்ணியக் கருத்தியலின் ஊற்றுவாயாக, பெண்ணிய அரசியலின் ஆரம்பமாக, மேற்குலகப் பெண்ணியக் கருத்தியல்களையும் வரலாற்றையுமே முன்னிறுத்தின. இவற்றிற்கு நாம் பல உதாரணங்களைக் கூறலாம்.

தமிழ்ச் சூழலில் வரலாற்றுக்காலம் முதல் பெண்களின் நிலை, சமூக, அரசியல், பண்பாட்டு, இலக்கிய இயக்கங்களில் அவர்களது பங்களிப்புப் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதுதான் தமிழில் பெண்ணியச் சிந்தனை மரபொன்றை நாம் கட்டமைக்க முடியும். ஒரு மக்கள் கூட்டத்தின் வரலாறு, மொழி, இலக்கியப் பாரம்பரியம், வழக்காறுகள் என்பவற்றினூடாகவே பெண்ணின் மீதான ஒடுக்குமுறை பற்றியும் அதற்கு எதிரான நடவடிக்கை பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். ஆண்

அதிகாரத்துவம், பெண்மீதான ஒடுக்குமுறை, அவற்றிற்கு எதிரான எதிர்வினைகள், சிந்தனைகள், இயக்கங்கள் என்ற அனைத்துமே குறித்த சமூகத்தின் தனித்துவமான பண்பாட்டுச் சூழலினூடாகவே நிகழ்த்தப்படுகின்றது. புரிந்து கொள்ளப்படுகின்றது.

பண்பாட்டுச் சூழல் என்று மேலே குறித்த தொடர் மிக விரிவான பொருளைத் தரக்கூடியது. ஒரு நிலையில், குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் ஒட்டு மொத்தமான பௌதீக, அபௌதீகக் கூறுகளை உள்ளடக்கிய மொத்த வாழ்வையுமே அது குறிக்கும். அதன் உள்ளீடுகளாக வரலாற்றுத் தொடர்ச்சி, அரசியல், பொருளாதாரம், மதம், மொழி, இலக்கியம், வழக்காறுகள், சடங்குகள், மனித உரிமைகளுக்கான மதிப்பீடு போன்ற இன்னோரன்ன அபௌதீகக் கூறுகளையும் உணவுப்பழக்கவழக்கங்கள், உடை, உறையுள் போக்குவரத்து, தொடர்பூடகங்கள், பொழுதுபோக்குகள் போன்ற பௌதீகக் கூறுகளையும் கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட பண்பாடு பற்றிப் பேசுகிறபோது மேற்கூறிய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்குவதாக அது அமையும்.

இன்றைய உலக அரசியல் ஒழுங்கின் இரு போக்குகளாக நாம் உலகமயமாதலையும் அதற்கு எதிரான பண்பாட்டுப் பன்முகத் தன்மையைப் பேணுகின்ற பல்வேறு இயக்கங்களையும் அடையாளம் காண்கின்றோம். முழு உலகிற்கும் ஏற்புடையதான பொருளாதார முறைமை, அரசியல், பண்பாடு என்பவற்றை ஊடகங்களின் ஊடாகக் கட்டமைக்கின்ற முயற்சியில் உலகமயமாதலை ஆதரிப்பவர்கள் முனைகின்றனர். மேற்கத்தைய பெண்ணியச் சிந்தனை மரபையே லத்தீன் அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாடுகள் முற்றுமுழுதாக ஏற்று அதற்கேற்பத் தமது செயற் திட்டங்களை வகுப்பதும் கூட பெருங்கதையாடலை ஏற்றுக் கொள்கின்ற போக்கே ஆகும். மேற்கூறிய நாடுகளின் பண்பாட்டுத் தனித்துவங்களுக்கு ஊடாகவும் பெண் விடுதலை இயக்கப் பாரம்பரியங்களின் ஊடாகவுமே அந்நாடுகளின் பெண் விடுதலைக் கருத்தியல்கள், இயக்கங்கள், செயற்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

மேற்கூறிய கருத்துக்களின் அடிப்படையில் தமிழ்ச் சூழலில் அதன் பெண்ணிய விடுதலைக் கருத்துக்களின் மரபுகளையும் அப்பண்பாட்டின் தனித்துவமான பிரச்சினைகளையும் மையப்படுத்தியதாகவே

பெண்ணியச் சிந்தனை வளர்ந்தெடுக்கப்பட வேண்டும். தமிழ்ச்சூழலில் பெண்ணியச் சிந்தனை என்ற ஒற்றைக் கதையாடலுக்குள் பல்வேறு தனித்த பிரிவுகளை, கருத்துநிலைகளை நாம் அடையாளம் காண வேண்டும்.

உலகின் உழைக்கும் வர்க்கம், மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார நெருக்கடிகள், அவற்றின் தேசிய, இன, பண்பாட்டுத் தனித்துவங்கள் மற்றும் முரண்பாடுகள், இந்தியா முதலிய நாடுகளில் காணப்படும் சாதீய முறைமை, ஆப்பிரிக்கக் கண்டத்திற்கேயுரிய தனித்துவமான அரசியல், பொருளாதாரம், நிறம், இனம் சார்ந்த பிரச்சனைகள் என்பவற்றையெல்லாம் உள்வாங்கித் தனித்தன்மைகளை அங்கீகரிக்கின்ற பன்முகப்பட்ட பெண்ணியப் பார்வைகள் தோன்றியுள்ளன. இத்தகைய புதிய பெண்ணியப் பார்வைகளான பின்னைப் பெண்ணியங்களைத் (Post Feminisms) தமிழில் அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## II

உலகின் பல்வேறு பாகங்களில் பல்வேறு இனத்துவ, பண்பாட்டுச் சூழல்களில் வெவ்வேறு காலகட்டங்களில் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்துக்களும் செயல்பாடுகளும் தோன்றியும் தொடர்ந்தும் வந்துள்ளன. பெண் விடுதலைக்கான இயக்கங்களும், செயற்பாடுகளும் அவற்றின் வாயிலாகக் கட்டமைக்கப்பட்ட கருத்தியல்களும் காலம், பிரதேசம் (Time and space) பண்பாடு எனத் தொடங்கி வர்க்கம், தேசியம், இனத்துவம், மதம், மொழி, சாதி என விரிந்து செல்கின்ற பல்வேறு தனித்த தளங்களில் இயங்குகின்றன. மேற்கூறிய தனித்த காரணிகளின் குறுக்கும் நெடுக்குமான ஊடாட்டத்தின் முக்கியத்துவத்தையும் அது தோற்றுவிக்கின்ற பன்முகப்பட்ட பெண்ணிய நிலைப்பாடுகளையும் (Feminist Positions) பற்றியதாக இக்கட்டுரை அமைகின்றது.

1960 களில் அமெரிக்கக், கறுப்பின மக்களது குடியுரிமை இயக்கத்தோடு (Civil Rights Movement )இணைந்து அமெரிக்க பெண் விடுதலை இயக்கம் முனைப்புப் பெற்றது. (Betty Friedan –The Feminine mystique -1963, 'Now' – National Women's organization -

1966 என்பது அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்படுகிறது. Juliet Mitchell – Women The Longest Revolution –1966)

ஆரம்பத்தில் வேர்ஜினியா வூல்ப் (Virginia Wolf, A room of ones own -1929) சிமோன் டி புவர் (Simone de Beauvoir ,The second sex-1949) ஆகியோர் பிரெஞ்சு - ஆங்கில சிந்தனை மரபில் பெண்ணியச் சிந்தனையை தேர்ந்த ஒரு கதையாடலாக (discourse) அறிமுகப்படுத்தியிருந்த போதும் பெண்ணியச் சிந்தனையும், செயற்பாடுகளும் சமாந்தரமாக ஒரு இயக்கமாக புத்தெழுச்சி பெற்றது 1960 களிலேயே ஆகும்.

மேற்கூறிய வரலாற்றுப் பின்புலத்தின் காரணமாக முதலாம், இரண்டாம் பெண்ணியக் கால கட்டங்களில் ஆங்கிலேய - அமெரிக்க பெண்களது, குறிப்பாக படித்த, வெள்ளை இன, நடுத்தரவர்க்கப் பெண்களது ஆதிக்கம் காணப்பட்டது. இவர்களது சிந்தனை மரபு தவிர்க்க முடியாதபடி காலனிய, ஏகாதிபத்திய கருத்தைக் குறிப்பிட்ட அளவு உள்வாங்கி இருந்தது.

பெண்களது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்ற பல்வேறு காரணிகளைக் குறிப்பாக நிறம், இனம், வர்க்கம், மொழி, மதம், நாடு, பண்பாடு போன்றவற்றை அவர்கள் அதிகம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. பெண் ஒடுக்குமுறை என்ற யதார்த்தத்தை 'பால்' (Sex) என்ற ஒற்றைப் பரிமாணத்தில் மட்டும் வைத்துப் புரிந்து கொள்ள முடியாது. ஏனெனில் பால் அடையாளம் என்பது மேலே தனித்துவங்கள் என்று நிரல்படுத்தப்பட்ட சமூகக் காரணிகளோடு குறுக்கு நெடுக்கான, சிக்கலான உறவைக் கொண்டதாகும்.

மேற்கத்தைய முதலாம், இரண்டாம் பெண்ணிய இயக்கங்களின் கருத்தியலில் உள்ள போதாமைகள் மாற்றுச் சிந்தனைகளின் தேவையை உணர்த்தின. முதலில் பிரெஞ்சுச் சிந்தனையாளர்களும் தொடர்ந்து கறுப்பின, இந்திய, லத்தீன், அமெரிக்கப் பெண்ணியச் சிந்தனையாளர்களுமாக மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தனர். படித்த, நடுத்தரவர்க்க, வெள்ளை இன, ஆங்கிலேய - அமெரிக்க

பெண்ணியவாதிகளின் ஆதிக்க மனோபாவத்தை எதிர்த்தும் அவர்களது கருத்தியலில் உள்ள போதாமைகளை நிவர்த்தி செய்யும் முகமாகவும் மேற்கூறிய மாற்றுப் பெண்ணியக் கருத்தாடல்கள் தோன்றின.

பெண்ணியச் சிந்தனை என்பது உலகப் பொதுவான பெருங்கதையாடலாகக் கட்டமைக்கப்பட்ட நிலைமாறி, பன்முகத் தன்மையையும் தனித்துவங்களையும் ஏற்றுக் கொண்ட கருத்துநிலைகளின் இணைப்பாகத் தோற்றம் பெறத் தொடங்கியுள்ளது. மூன்றாம் உலக நாடுகளிலிருந்து பன்முகத் தன்மையை வலியுறுத்துகின்ற தனித்துவமான செயற்திட்டங்களை முன்வைக்கின்ற பெண்ணியச் சிந்தனைப்போக்குகள் உருவாகியுள்ளன. இவற்றைப் பின்னைப் பெண்ணியச் சிந்தனைகள் என அழைக்கலாம்.

பெண்ணிய வரலாறு மற்றும் பண்பாட்டு வேறுபாடுகள் என்ற அடிப்படையில் பின்னைப் பெண்ணியத்தின் தோற்றத்தை மேலே பார்த்தோம். ஆனால் கருத்தியல் அடிப்படையில் பார்க்கின்றபோது இதனை ஏற்கனவே இருந்த சிந்தனை மரபுகளின் தொடர்ச்சியாகவும் பார்க்கலாம். உதாரணமாக காலனியம், பின் காலனியக் கோட்பாடுகள் நவீனத்துவம், பின்னை நவீனத்துவக் கோட்பாடுகள், ப்ரொய்ட் - லக்கான் (Sigmund Freud- Lacan) ஆகியோரின் உளவியல் கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் பார்க்கலாம்.

காலனித்துவம், நவீனத்துவம், ப்ரொய்டின் உளவியல் கோட்பாடு ஆகியவற்றிலிருந்து அவற்றை எதிர்த்தும், அவற்றின் போதாமைகளைச் சீர்செய்தும் தோன்றிய பின் காலனித்துவம், பின்னை நவீனத்துவம், லக்கானின் உளவியல் கோட்பாடு ஆகியவற்றின் கருத்தியல் கூறுகளை உள்வாங்கியே பின்னைப் பெண்ணியச் சிந்தனைகள் தோன்றுகின்றன.

### குறிப்புக்கள்

1. Frantz Fanon (Black Skin, white Masks -1952
2. Wretched of the Earth -1961)
3. Edward Said (Orientalism -1978)

4. Gayathiri Spivak (Displacement and the Discourse of Women - 1983 In Other Worlds –Essays in Cultural Politics -1987)
5. Derrida kw;Wk; Foucault (The Archaeology of Knowledge and the Discourse of Language -1972)
6. Lacan, Julia Kristeva (Desire in Language -1980)
7. Helene Cixous (The Laugh of the Medusa -1976)

ஆகியோரது சிந்தனைகள் பின்னைப் பெண்ணியச் சிந்தனைகளில் இழையோடுகின்றன.

முதலாவதாகப் பின்காலனித்துவச் சிந்தனைகளை எடுத்துக் கொள்வோமாயின் மேற்குலக ஏகாதிபத்திய வல்லாதிக்கத்தை எதிர்த்தும் காலனித்துவ அனுபவங்கள் மற்றும் சுதேச பண்பாட்டு மீட்டுருவாக்கம் பற்றியும் பின்காலனித்துவம் பேசுகிறது. பின் காலனித்துவக் கதையாடலில் கண்டங்கள், தேசம், இனம், மதம், மொழி, பண்பாடு பொருளாதாரம் ஆகிய காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதே காரணிகளை பெண்நிலைநின்று நோக்குகின்றபோது பெண்ணியச் சிந்தனையில் புதிய திருப்பங்கள் ஏற்படுகின்றன. ஆங்கில - அமெரிக்க பெண்ணிய சிந்தனை மரபுகளில் மேற்கூறிய காரணிகள் பெருமளவில் புறக்கணிக்கப்பட்டன. மேற்கத்தைய பெண்ணியவாதிகள் மூன்றாம் உலக நாடுகளில் பெண்கள் எதிர்நோக்கும் குறிப்பிட்ட பிரச்சனைகளை அடையாளம் காணாமையினாலும் மேலாதிக்க மனோபாவத்தைக் கைவிடாமையினாலும் மூன்றாம் உலகப் பெண்ணியப் பார்வைகளுக்கான தேவை எழுந்தது.

எனவே ஏகாதிபத்திய மரபு சார்ந்த ஆங்கில - அமெரிக்கப் பெண்ணிய அடிப்படைகளை எதிர்த்து காயத்ரி ஸ்பிவாக் (Gayathri Spivak - Feminism and Critical Theory -1986) போன்ற பெண்ணியவாதிகள் எழுதத் தலைப்பட்டனர். மூன்றாம் உலக நாடுகளில் பெண்கள் எதிர்கொள்ளும் ஏகாபதிபத்தியச் சுரண்டல், பண்பாட்டு ஒடுக்குமுறைகள், மொழி, மதம், இனம் என்ற அடிப்படையில் அவர்கள் எதிர்நோக்கும் குறித்த பிரச்சினைகளை மையப்படுத்தி புதிய பெண்ணியச் சிந்தனைப் போக்குகள் எழுந்தன.

இரண்டவதாகப் பின்னைப் பெண்ணியம், பின்னை நவீனத்துவக் கருத்தியலின் பல்வேறு கூறுகளை எவ்வாறு உள்வாங்கியது என்பதைப் பார்ப்போம்.

நவீனத்துவம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை மேற்குலகில் ஆதிக்கம் பெற்ற கருத்தியலாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவ சமூக அமைப்புச் சிதைந்து தொழிற்துறை சார்ந்த முதலாளித்துவ பொருளாதார முறைமை உருவாகின்றபோது ஏற்பட்ட தத்துவார்த்த நெருக்கடியே நவீனத்துவத்தைத் தோற்றுவித்தது. இக்காலகட்டத்தில் அனைத்து நெருக்கடிகளுக்குமான தீர்வாகப் பல கருத்தியல்கள் தோன்றின. உலகின் சகல பிரச்சினைகளுக்கும் முழுமையான தீர்வை வழங்க முடியும் என்று நம்பப்பட்ட சித்தாந்தங்களான மாக்ஸியம், தாராள வாதம், முதலாளித்துவம் போன்றவற்றை பின்னை நவீனத்துவம் நிராகரிக்கிறது.

எந்தவொரு ஏகாந்தக் கோட்பாட்டையும் பெருங்கதையாடலையும் பின்னை நவீனத்துவம் நிராகரிக்கிறது. பின்னை நவீனத்துவத் தத்துவம் விளிம்புநிலைக் குழுக்களை அடையாளப்படுத்தி அங்கீகரிக்கிறது. வாழ்வின் பன்முகத்தன்மையை இல்லாதொழிக்கின்ற எந்தவொரு கருத்தியலையும் அது நிராகரிக்கின்றது.

இந்த வகையில்தான் ஆங்கிலேய - அமெரிக்க பெண்ணியச் சிந்தனை மரபைப் பின்னை நவீனத்துவம் பெண்ணியக் கருத்தாடலின் பன்முகத் தன்மையை நிராகரிக்கின்ற பெருங்கதையாடலாகப் பார்க்கிறது. இப்பின்புலத்தில் ஃபூக்கோவினுடைய அதிகாரம் (Power), கருத்தாடல் (Discourse) பற்றிய கருத்துக்களும் மற்றும் மொழிக்கும் அதிகாரத்துக்குமான உறவு பற்றிய கருத்தும் முக்கியமானவை. டெரிடா (Derida) வினுடைய மொழிக்கும் அர்த்தப்படுத்தலுக்கும் (signification) இடையிலான நிரந்தரமற்ற உறவு பற்றிய கருத்தும் முக்கியம் பெறுகின்றது. ஆங்கில - அமெரிக்க பெண்ணியச் சிந்தனையாளர்களது முக்கியமான பிரதிகளின் மொழிக் கூறுகளை கருத்தாடல் ஆய்வின் (discourse analysis) அடிப்படையில் அணுகி

அவற்றினுள்ளே பொதிந்துள்ள ஆதிக்க சிந்தனைகளை வெளிப்படுத்தினர். அதேபோல பிரபலமான பல பெண்ணிய இலக்கியப் படைப்புக்களை கட்டவிழ்த்து மறுமதிப்பீடு செய்தனர். ஏற்கனவே எழுதப்பட்ட பிரதிகளை மையமாக வைத்து தமது மாற்றுக் கருத்துக்களுக்கேற்ற வகையில் புதிய ஆக்கங்களைப் படைத்தனர் எடுத்துக்காட்டாக பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த சார்லட் ப்ரோன்ட்டேயின் (Charlotte Bronte) ஜேன் அயரை (Jane Eyre-1847) மீள்கட்டமைத்து "The Wide Sargasso Sea" என்ற நாவல் ஜீன் றைஸால் (Jean Rhys – 1966) படைக்கப்பெற்றது.

பின்னை அமைப்பியல் வழிவந்த டெரிடாவின் (Derrida) கட்டவிழ்ப்பு வாதம் பின்னைப் பெண்ணியச் சிந்தனைகளுக்கு பெரிதும் உதவியது. அதேபோல மொழி என்பது குறியீடுகளின் வேறுபாடுகளினாலும் அவை முன்னிறுத்தும் இரட்டை எதிர்நிலைகளினாலும் தான் அர்த்தம் பெறுகின்றது என்ற அடிப்படைக்கருத்தும் உளப்பகுப்பாய்வுப் பெண்ணியச் சிந்தனையாளர்களுக்கு (Helane Cixous, Kristeva) ஏற்புடையதாக இருந்தது.

இயற்கை ஒரு புறமாகவும் பண்பாடு மறுபுறமாகவும் கட்டமைக்கப்படுகின்ற முறையில் மொழி இயற்கையை இருதுருவ நிலைகளில் மாத்திரம் கட்டமைக்கின்ற போக்கு இருதுருவநிலைப்படுத்தல் எனப்படுகின்றது. இதில் இயற்கை தருகின்ற பன்முகத் தன்மையும் வகைப்பாடுகளும் இடம் பெறுவதில்லை. அவை நீக்கப்பட்டு அதிகாரம் சார்ந்த மற்றும் சாராத விளிம்புநிலை என்ற இருநிலைகளையே மொழி முதன்மைப்படுத்துகின்றது. இப்படிப்பட்ட துருவநிலைப்படுத்தப்பட்ட மொழியே அதிகாரம் முன்னிறுத்துகின்ற பண்பாட்டின் முக்கிய கூறாகும். உதாரணம் கறுப்பு - வெள்ளை, நாகரிகம் - அநாகரிகம், மேல் - கீழ், உயர்ந்தது-தாழ்ந்தது என்ற மொழிப் பயன்பாடுகளாகும்.

ஆங்கில - அமெரிக்க மையப் பெண்ணியவாத கோட்பாட்டுக்கு எதிரான முக்கியமான போக்குகளின் ஒன்று பிரெஞ்சுப் பெண்ணியவதாகக் கோட்பாடாகும்.

பிரெஞ்சுப் பெண்ணியச் சிந்தனையும் உளப்பகுப்பாய்வுப் பெண்ணியமும் (Psychoanalytic Feminism) ஒரே தளத்தில் பயணிக்கின்றன. பெண்ணியக் கருத்தாடலில் உளப்பகுப்பாய்வுப் பெண்ணியம் ஒரு முக்கியமான தனித்த போக்காகத் திகழ்கிறது. மேற்கத்தைய பெண்ணியவாதிகள் பெண்ணின் அடையாளம் பெரிதும் பால் சார்ந்தது என நம்பினர். அதாவது ஒரு பெண்ணின் உடல் வேறுபாடு (sex difference) பால்நிலை (gender) வேறுபாட்டையும் அதன் தொடர்ச்சியாக ஒடுக்கு முறையையும் (oppression) தோற்றுவிப்பதற்குக் காரணமாக அமைந்துவிடுகிறது என்கின்றனர். ஆனால் அவர்களைப் பொறுத்தவரைக்கும் அவ்வுடல் வேறுபாடு ஆணாதிக்கச் சிந்தனை கூறுவது போல எதிர்மறையானது அல்ல மாறாகச் சாதகமான, வலுவின் மூலமான வேறுபாடாகும்.

ஆனால் உளப் பகுப்பாய்வுப் பெண்ணியவாதிகளின் கருத்துப்படி ஆண், பெண் வேறுபாடு என்பது மொழி ஒழுங்கு, (symbolic order) மற்றும் கற்பனைப் புலம் (imaginary) என்ற மனநிலை சார்ந்த விடயமாகும்.

பெண்ணியக் கருத்தாடலில் ஆண், பெண் வேறுபாடு, பாலின அடையாளம் என்பவற்றின் தளம் எது என்பது பற்றி பல முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன. பண்பாட்டுப் பெண்ணியவாதிகள் (cultural feminist) உடல்சார் வேறுபாட்டை ஆண், பெண் வேறுபாடு, அடையாளம் என்பவற்றின் அடிப்படையாகக் கொள்கின்றனர். ஆனால் உளப்பகுப்பாய்வுப் பெண்ணியவாதிகள் ஆண், பெண் வேறுபாடு என்பது உளவியல் தளத்தில் (psychic position) உள்ள விடயமெனக் கருகின்றனர்.

உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு ப்ரொய்டின் ஈடிபஸ் (oedipus) சிக்கலை மையப்படுத்தி 'pre-oedipal', 'post-oedipal' என்ற நிலைகளையும் நனவு, நனவிலி (conscious, unconscious) என்ற நினைவுத் தளங்களையும் அடிப்படையாகக் கொண்டது

லக்கான் (Lacan), /ப்ரொய்டினுடைய 'pre- oedipal', 'post- oedipal' என்பதை மறுவரையறை செய்து 'pre-oedipal' ஐ கற்பனைப்புலம்

(the imaginary) என்றும் 'post-oedipal' ஐ மொழிப்புலம் (the symbolic) என்றும் குறிப்பிடுகின்றார்.

கற்பனைப்புலம் என்பது ஒரு குழந்தை தன்னடையாளம் என்பது இல்லாமல் தாயுடனும் புறவுலகுடனும் எவ்விதமான வேறுபாடுகளையும் அறிந்து கொள்ளாத நிலையைக் குறிக்கும். அது அர்த்தமற்ற பன்முகப்பட்ட கற்பனைகள் நிறைந்த ஒரு மனநிலையாகும். இது சிறியது - பெரியது, நல்லது - தீயது, என்ற மொழி மூலமான துருவநிலைப்படுத்தலும் இரட்டை எதிர்நிலையும் (polarization and binary opposition) இல்லாத ஒரு மனநிலை. சுயம் என்பது இன்னமும் தோன்றாத நிலை.

'post oedipal' நிலை என்பது குழந்தை மொழி ஒழுங்கிற்குள் அறிமுகமாகின்ற போது ஏற்படுகின்ற மாற்றமாகும். குழந்தை மொழி மூலமாக லிங்கமுதன்மை, துருவநிலை, இரட்டைஎதிர்நிலை வேறுபாடுகளினூடாக யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளத் தொடங்குதலாகும். அப்போது, 'தான்' என்ற சுயம் கட்டமைக்கப்பட்டு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு தாயை இன்னொருவராகப் (the other) புரிந்து கொள்கிறது. வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு தன்னைச் சுற்றியுள்ள யதார்த்தத்தையும் தாய், தந்தை ஆகியோரையும் அடையாளப்படுத்துகின்றது. தந்தை உட்பட ஆண்களை உயர்பாலினராகவும் தாய் உட்பட பெண்களை இரண்டாந்தர பாலினராகவும் அடையாளப்படுத்துகின்றது.

லக்கான் இந்நிலையை மொழி ஒருங்கிற்குள்ளான பிரவேசம் (entry into symbolic order) என்கிறார். தாய் மீதான தன் வேட்கையை (desire) குழந்தை மட்டுப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றது. இந்த வேட்கை மட்டுப்படுத்தல் என்பதை லக்கான் 'repression' என்கிறார். தாய்மீதான வேட்கையை கட்டுப்படுத்துகின்றபோது குழந்தையிடம் புதிய ஒரு மனவெளி உருவாகிறது. அது நனவிலி (unconscious) என்கிற ஆழ்மனமாகும். இந்த வேட்கை பெரிதும் கட்டுப்படுத்தப்படுகிற போதிலும் ஆழ்மனத்தில் இருந்தபடியே நேரடியாகவும் மறைமுகமாகவும் மனிதனது செயல்பாடுகளையும் மொழியையும் தீர்மானிக்கிறது.

மொழி மூலமான இவ்வேட்கை வெளிப்பாட்டை 'desire in language' எனவும், 'semiotic' எனவும் ஜுலியா கிறிஸ்தேவா (Julia Kristeva) குறிப்பிடுகிறார்.

மேலும் மனிதன் வளர்ந்த நிலையிலும்கூட கற்பனைப் புலம் அவ்வப்போது தன்னை முன்னிறுத்திக் கொள்கிறது. அதாவது மொழி மூலமாகவோ மொழிசாரா வெளிப்பாடுகளினூடாகவோ கற்பனைப்புலம் வெளிப்படுகின்றது. பிரெஞ்சுப் பெண்ணியவாதிகளான லூஸ் இரிகாரே, ஹெலன் சிஸு, ஜுலியா கிறிஸ்தேவா (Luce Irigaray, Helene Cixous, Julia Kristeva) போன்றவர்கள் கற்பனைப்புலம் என்பது பெண்களின் கலை, இலக்கிய வெளிப்பாடுகளில் அதிகம் காணப்படும் என்கின்றனர். ஆனால் ஆண்களது கலை, இலக்கிய வெளிப்பாட்டிலும் மொழி ஒழுங்கையும் மீறி கற்பனைப் புலம் அவ்வப்போது ஆட்சி செலுத்துகிறது என்கின்றனர். எனவே அவர்களைப் பொறுத்தவரை ஆண் - பெண் வேறுபாடு என்பது ஒரு மனநிலை மட்டிலான (psyche condition) விடயமாகும். அவர்களது பெண்ணியக் கோட்பாடு மொழியியல் கோட்பாட்டையும் லக்கானின் உளவியலையும் அடிப்படையாகக் கொண்டது.

ஒருவரின் பால் வேறுபாட்டைக் கடந்து கற்பனைப்புலம், மொழிஒழுங்கு ஆகிய மனநிலைகளும் அவை சார்ந்த வெளிப்பாடுகளும் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானதாகவே அமைகிறது. பெண்கள் அதிகமாகக் கற்பனைப் புலத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்களாக இருக்கிறார்கள் எனவும் ஆனால் ஆண்களுடைய மொழியிலும் வெளிப்பாட்டிலும் கூட கற்பனைப்புலம் ஆதிக்கம் செலுத்தலாம் எனவும் அவர்கள் கருதுகிறார்கள்.

ஹெலன் சிஸு ஆண்மை, பெண்மை என்ற வார்த்தைகளையே மொழி ஒழுங்கின் துருவநிலையின் வெளிப்பாடுகள் என நிராகரிக்கிறார். அவரைப் பொறுத்தவரை ஆண், பெண் வேறுபாடு என்பது ஒரு மனநிலை வேறுபாடாகும் (difference at the level of psyche). அவர் பெண்ணியம் என்ற பதத்தை நிராகரித்து பெண்கள் இயக்கம் என்ற பதத்தை முன் நிறுத்துகிறார். பெண்ணொடுக்கு முறை என்பது வெறுமனே பால் (sex), பால்நிலை (gender) சார்ந்த விடயமல்ல, மேற்கத்தைய பெண்ணியம் பல்வேறுபட்ட விளிம்புநிலைக்

குழுக்களை அடையாளம் காணத் தவறியுள்ளது என்ற காரணங்களுக்காக அவா் தன்னைப் பெண்ணியவாதி அல்ல என அறிவிக்கின்றாா்.

பிரெஞ்சுப் பெண்ணியம் ஆங்கில - அமெரிக்க பெண்ணியக் கருத்தியலை மறுத்தும் மேம்படுத்தியும் லக்கானிய உளவியலையும் மொழியியலையும் அடிப்படையாகக் கொண்டும் செயற்படுகின்றது.

## III

இதுவரை மேற்கத்தைய பெண்ணியத்தின் முதலாளித்துவ, நிறத்துவ இனத்துவ மையப் போக்கையும் அவற்றை எதிர்கொள்வதற்கு பின்னை நவீனத்துவம், பின்காலனித்துவம் பின் அமைப்பியல்வாதம், உளப்பகுப்பாய்வுக் கோட்பாடுகள் என்பன எவ்வகையில் உதவின என்பது பற்றியும் குறிப்பிடப் பெற்றது.

பெண்ணிய அரசியல் என்பது பல செயல்பாட்டுத் தளங்களைக் கொண்டது. சமூக அசைவியக்கத்தின் பல்வேறு காரணிகளோடு இணைந்து பெண்ணிய அரசியல் தொழிற்படுகின்றபோது பல்வேறுபட்ட பின்னைப் பெண்ணியப் பார்வைகளும் நிலைப்பாடுகளும் உருவாகின்றன. பின்னைப் பெண்ணியங்களை இவையிவை எனப் பட்டியலிடுகின்ற முயற்சி கூட சிக்கலானதாகும். ஆகவே கீழே எடுத்துக்காட்டாகத் தரப்படுபவற்றை மட்டும் பின்னைப் பெண்ணியங்களாகக் கருத முடியாது. வசதி கருதி பின்வரும் பெரும்பிரிவுகளாக இவற்றை வகைப்படுத்தலாம். எ-டு.

01. ஆபிரிக்க - அமெரிக்க பெண்ணியச் சிந்தனைகள்.
02. ஆபிரிக்கப் பெண்ணியச் சிந்தனைகள்.
03. ஆசிய - இந்தியப் பெண்ணியச் சிந்தனைகள்.
04. தலித் பெண்ணியச் சிந்தனைகள்.

### 1. ஆபிரிக்க - அமெரிக்க பெண்ணியச் சிந்தனைகள்.

கடந்த நூற்றாண்டுகளில் ஆபிரிக்காவின் மேற்குக்கரையோரங்களில் இருந்து பலவந்தமாக அடிமைகளாகப் பிடித்துச் செல்லப்பட்டு அமெரிக்க மண்ணை வளப்படுத்தி அமெரிக்கப் பொருளாரத்தின்

மூலமாகிய உழைப்பை வழங்கிய கறுப்பின மக்கள் மனித வரலாற்றில் வேறெங்கும் இல்லாத ஓர் அவல வாழ்வை அனுபவிக்கின்றனர். இவர்கள் தமது தேசம், மொழி, பண்பாடு என்பவற்றை இழந்து இரண்டாந்தரப் பிரஜைகளாக, விலங்கு நிலை வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டனர். ஆபிரிக்க, அமெரிக்கப் பெண்கள் கூலிகளாகவும் மேலும், கூலிகளை உற்பத்தி செய்பவர்களாகவும் பயன்படுத்தப்பட்டனர். கறுப்பின ஆண்கள் மீதான ஒடுக்குமுறையின் பாதிப்புக்களையும் ஆபிரிக்க அமெரிக்கப் பெண்கள் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. கறுப்பின, வெள்ளை இன ஆண்களின் பாலியல் வன்முறைக்கும் வெள்ளை இனப் பொருளாதாரச் சுரண்டலுக்கும் ஓட்டு மொத்தமான பண்பாட்டு அவலத்துக்கும் ஆளாகும் இப்பெண்களது பிரச்சினைகளை அறுபதுகளில் முனைப்புப் பெற்ற ஆங்கிலேய அமெரிக்கப் பெண்ணியவாதிகள் அதிகம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

வெள்ளை இன, நடுத்தரவர்க்கப் பெண்களின் நிறவெறி மனோபாவத்தாலும், மேற்குலக ஊடகங்கள் முதன்மைப்படுத்தும் மாதிரி அழகுக் கோட்பாடுகளாலும் (வெள்ளை நிற, உயரமான, மெல்லிய, நீலக்கண்கள் உடைய தோற்றம்) கறுப்பினப் பெண்கள் பெரிதும் அந்நியப்படுத்தப்படுகின்றனர். இவ் அந்நியப்பாட்டைக் களைந்து அவர்களது நிறத்தையும், உடலையும், உழைப்பையும் இனத்துவத்தையும், பண்பாட்டையும் வலுவின் மூலகங்களாகவும் (source of power) போற்றுதற்குரியனவாகவும் கட்டமைத்து முன்னிறுத்த வேண்டிய அவசியம் உண்டாகிறது. இதன் வழி அவர்களது அடையாளத்தை மீட்டெடுக்க வேண்டிய வரலாற்றுத் தேவை காரணமாக ஆபிரிக்க - அமெரிக்க பெண்ணியச் சிந்தனைகள் தோற்றம் பெறுகின்றன.

அலிஸ் வோக்கர் (Alice Walker) - The Colour purple, In search of our mothers Garden -1983, டொனி மொறிசன் (Toni Morrison)- Playing in the Dark ஆகியோர் ஆபிரிக்க - அமெரிக்க பெண்ணியச் சிந்தனையாளர்களில் முக்கியமானவர்கள்.

## 2. ஆபிரிக்கப் பெண்ணியச் சிந்தனைகள்

இருண்ட கண்டமென்ற குறியீட்டுப்பதத்தால் அழைக்கப்படுகின்ற கண்டத்தில் வாழும் கறுப்பின மக்கள், வெள்ளை இனத்தவரின் ஆதிக்கச் சுரண்டல் ஆக்கிரமிப்புகளுக்கு ஆளாகித் தமது மத, மொழி, பண்பாட்டு அடையாளங்களையும், பொருளாதார வளங்களையும் பெரிதும் இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். மேற்கூறிய சுரண்டல்களுக்கு எதிராகத் தென் ஆபிரிக்கா. நைஜீரியா (Wole Soyinka, Chinua Achebe) கென்யா (Ngugi wa Thiongo) போன்ற நாடுகளிலிருந்து காலனிய எதிர்ப்புச் சிந்தனையாளர்கள் தோன்றினர். இன்றும் கூட ஆபிரிக்காவின் பண்பாட்டுத் தனித்துவங்களும் பொருளாதாரமும் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பின்னணியில் ஆபிரிக்க, பண்பாட்டு, வரலாற்றுச் சூழலில் இருந்து தோற்றம் பெறுகின்ற பெண்ணியச் சிந்தனைகள் முக்கியமானவை.

ஆபிரிக்கப் பெண்ணியச் சிந்தனைகள் ஓரே வரலாற்று இனத்துவ பண்பாட்டுப் பின்புலத்தைக் கொண்டிருந்தாலும் அவை பல்வேறு தனித்துவமான உட்பிரிவுகளைக் கொண்டவை. இவற்றுக்கு அடிப்படையாக மதவேறுபாடுகள் காலனித்துவ அனுபவங்கள், பொருளாதார முறைமைகள் என்பன அமைகின்றன.

## 3. ஆசிய - இந்தியப் பெண்ணியச் சிந்தனைகள்

ஆசியப் பெண்ணியச் சிந்தனைகள் குறித்து காயத்ரி ஸ்பிவாக் (Gayathiri Spivak) வலுவான கருத்தை முன்வைக்கிறார். மேலைத்தேய, பெண்ணியக் கருத்தாடல்கள் ஆசியாவின் பல்வேறு பண்பாட்டு வேறுபாடுகளைப் புறக்கணிப்பதையும் கீழைத்தேயம் என்கிற ஒரே கட்டமைப்புக்குள் வரையறை செய்வதையும் நிராகரிக்கிறார்.

வசதி கருதி ஆசியப் பெண்ணியங்களின் பெரும் பிரிவுகளாக சீன, மத்திய கிழக்கு, இந்தியத் தளங்களைக் கொள்ளலாம். இவற்றுள்ளும் பல உட்பிரிவுகள் காணப்படுகின்றன. உதாரணமாக, இந்தியா என்கின்ற பூகோளப் பரப்பு, தேசம் என்கிற கட்டமைப்பு, இந்தியப் பெரும் முதலாளிகளும், ஊடகங்களும் கட்டமைக்க முயலும் ஒற்றை இந்தியப்

பண்பாடு என்பனபற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவிலுள்ள சாதியப் படிநிலைகள், மத நம்பிக்கைகள், பழங்குடி இன மக்கள், இனம், மொழி சார்ந்த தனித்துவங்கள், மத வர்க்க வேறுபாடுகள் என்பனவற்றை செயல்பாட்டுத் தளங்களாகக் கொண்டு இந்தியப் பெண்ணியச் சிந்தனைகள் உருவாக்கப்பட வேண்டும்.

இந்தியப் பெண்ணியச் சிந்தனைகள் பற்றிப் பார்க்கின்றபோது பெரும்பாலும் இவை மேற்கத்தைய பெண்ணியச் சிந்தனைகளின் வழிவந்தனவாகவே இருந்துள்ளன. பல்கலைக்கழகங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களின் புலமைசார் பெண்ணிய ஆய்வுகளிலும் செயற்திட்டங்களிலும் மேற்கத்தைய பெண்ணியச் சிந்தனைகளின் தாக்கமே பெரிதும் உள்ளது. செயற்பாட்டுத் தளத்தைப் பொறுத்தளவில் தொண்டு நிறுவனங்களும் இடதுசாரிக் கட்சிகள் உட்பட்ட அரசியல் கட்சிகளும் பெண்களது பிரச்சினைகளை பல்வேறுபட்ட சூழமைவுக் காரணிகளோடு (contextual) பார்க்கத் தவறியுள்ளனர். ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் பொதுவான ஒரு பெண்ணியக் கருத்தியலை, செயற்திட்டத்தை முன்வைப்பதென்பது யதார்த்தத்துக்குப் புறம்பானதாகும். எடுத்துக்காட்டாக. மேற்குலகச் சிந்தனை மரபில் காணப்படாத தனித்துவமான பிரச்சினையாகச் சாதீயப் பிரச்சினை இந்தியச் சூழலில் காணப்படுகின்றது. பெரும்பாலான பெண்ணியவாதிகள் இந்திய சாதீய ஒடுக்கு முறைக்கு எதிரான செயற்திட்டத்தை முன்வைக்கவில்லை. இதனால் தலித் பெண்ணியப் பார்வைக்கான தேவை உருவாகின்றது.

**4. தலித் பெண்ணியம்**

உலகில் வேறெங்கும் காணப்படாத வகையில் இந்தியாவில் சாதீயம் (castism) என்கிற தளத்தில் ஒடுக்குமுறை நிகழ்கிறது. சாதீய ஒடுக்குமுறையை வெறுமனே சாதீயப் படிநிலை சம்பந்தப்பட்டதாகப் பார்க்க முடியாது. சாதீயம், சமூக வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது. மதம், சடங்குகள், பொது நிறுவனங்கள், பொருளாதாரம், கல்வி, தொழில், நடமாடும் சுதந்திரம் என அனைத்துத் தளங்களிலும் சாதீயம் தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஒரு தலித் பெண்ணுடைய சுதந்திரமான மனித கௌரவத்தினுடனான வாழ்வு பற்றிச் சிந்திக்கிறபோது மேற்கூறிய தளங்களில் அவள் எதிர் கொள்கிற சாதீய ஒடுக்குமுறைகளை நாம் கருத்தில் கொண்டாக வேண்டும். தலித் ஆண்கள் தம்மீது மேற்கொள்கிற ஒடுக்குமுறைகளை மட்டுமன்றி ஆதிக்க சாதி ஆண், பெண்களது சாதீய ஒடுக்கு முறைக்கும் இவர்கள் ஆளாகிறார்கள். இது இவர்கள் மீது சுமத்தப்படுகிற இரட்டைநிலை ஒடுக்குமுறையாக உள்ளது.

தலித் பெண்ணியச் சிந்தனையாளர்கள் முதலில் அவர்களைப் பற்றிய ஆதிக்க சாதியினரின் கட்டமைப்புக்களைத் தகர்த்து வருகிறார்கள். இரண்டாவதாக அவர்களது நம்பிக்கைகள், சடங்குகள், உணவுப் பழக்கவழக்கங்கள், தொழில் உட்பட பல்வேறு தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளையும் தமது வரலாற்றையும் சாதகமான முறையில் முன்னிறுத்திக் கொண்டாடுகிறார்கள் (பாமா, சுகிர்தராணி).

சாதீய ரீதியாகவும், பால் ரீதியாகவும் பண்பாட்டின் பல்வேறு தளங்களில் அவர்கள் எதிர்கொள்கிற ஒடுக்குமுறைகளுக்கு ஏற்றவாறு தலித் பெண்கள் தங்களது விடுதலைக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க வேண்டியுள்ளது.

## IV

பின்னைப் பெண்ணியச் சிந்தனைகள், பெண்ணியச் சிந்தனை மரபில் எழுந்த சமீபத்தைய போக்காகும். மேற்கத்தைய பெண்ணியச் சிந்தனையின் ஏகாதிபத்திய, வர்க்க, இன, நிற முதன்மைப் போக்குகளின் மீதான விமர்சனங்களாகவும் எதிர்வினைகளாகவும் பின்னைப் பெண்ணியச் சிந்தனைகள் எழுந்தன. பெண்கள் மீதான ஒடுக்குமுறை பல்வேறு தளங்களில் நிகழ்த்தப்படுகிறது. இத்தளங்களின் தனித்தன்மைகளைக் கருத்திற்கொண்டே பெண்கள் மீதான ஒடுக்கு முறைக்கு எதிரான கருத்தியலும் செயல்திட்டமும் வகுக்கப்பட வேண்டும். (contextualizing theory and action)

பின்னைப் பெண்ணியச் செல்நெறியானது பெண்ணியப் பெருங்கதையாடலை பல்வேறு கிளைகளாகப் பகுக்கிறது. இதனைப் பின்னைப் பெண்ணியவாதியான ஆன் புருக்ஸ் (Ann Brooks) 'Fragmenting Feminism' என்று குறிப்பிடுகிறார். பெண்ணியச் சிந்தனை பரந்துபட்டதும்

பன்முகத்தன்மையுடையதும் சூழமைவுக்கு முக்கியம் தருவதுமான பல கிளைப்பட்ட கருத்தாடல்களாக விரிந்து செல்கிறது. பின்னைப் பெண்ணியம் என்பது கோட்பாடுகளின் தொகுப்பாக ஒருமையிலும் அவற்றின் அரசியல் நிலைப்பாடுகளாக (diverse political positions) பின்னைப் பெண்ணியங்கள் எனப் பன்மையிலும் குறிப்பிடப்பெறுகின்றது. இது இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் பெண்ணியச் சிந்தனையில் ஏற்பட்ட மிகப்பெரிய கோட்பாட்டு மாற்றமாகும்

References:


1. Beauvoir, Simone De. 1972; The Second Sex (Trans) H.M.Parshley, London

2. Brooks, Ann. 1997; Postfeminisms; Feminism, Cultural Theory and Cultural Forms, Routledege; London.

3. Kristeva, Julia. 1993; Desire in Language; A Semiotic Approach to Literature and Art, Blackwell; Oxford, UK

4. Moi, Toril, 1985; Sexual Textual Politics; Feminist Literary Theory, Routledege; London.

5. Millett, Kate. 1972; Sexual Politics, Abacus; London

6. Waugh, Patricia.ed.2006; Literary Theory and Criticism, Oxford University Press; London



**நதிரா.ம**

தலைவர்,மொழித்துறை

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

# பெண்கள் மீதான வன்முறை: தந்தையாதிக்கக் கருத்தியலை மறுவிசாரணைக்கு உட்படுத்தல்

**சந்திரசேகரன் சசிதரன்**

பெண்களின் பாலியல்பானது வரலாற்றின் எல்லாக் காலகட்டத்திலும் அச்சுறுத்துவதாகவும் அதேவேளையில் ஆபத்திற்கு உள்ளாகிவருவதாகவும் இந்திய ஆய்வாளரான உமா சக்கரவர்த்தி குறிப்பிடுகின்றார். இந்தவகையில் பெண்களுக்கெதிரான வன்முறை என்பது ஆணாதிக்க சமூகத்தினால் கட்டமைக்கப்பட்ட ஒன்றாகக் காணப்படுவதோடு அது பல்வேறுபட்ட சமூக உளவியல் கூறுகளையும் கொண்டிருக்கின்றது. உண்மையில் பெண்களுக்கெதிரான வன்முறை என்பது ஒற்றைப்பரிணாமம் கொண்டதன்று. மாறாக பல்படித்தான பரிணாமங்களும் அதனுள் உட்பொதிந்துள்ளன. எடுத்துக்காட்டாக பெண்களுக்கெதிரான வன்முறையானது உடலியல்சார்ந்த வன்முறை (Physical violence), பாலியல் வன்முறை (Sexual violence), உளவியல்சார்ந்த வன்முறை (psychological violence), பொருளாதாரம்சார்ந்த வன்முறை (Economical violence), வீட்டு வன்முறை (Domestic violence) என்றவாறாகப் பல்வேறு வகைப்படுத்தல்களில் நோக்கப்படலாம். மரபுவாதிகளின் பார்வையில் பெண்களுக்கெதிரான வன்முறை என்பது தந்தையாதிக்கச் சிந்தனைகளுடன் தொடர்புபட்டனவாக உள்ளன. பெண்கள் எல்லா வகையான வன்முறைக்கும் உள்ளாகத்தக்கோராக இருப்பது ஏன் என்கின்ற கேள்வி உரத்து எழுப்பப்பட வேண்டியதொன்றாக இன்று காணப்படுகின்றது. உடன்வசிக்கின்ற அல்லது அறிமுகமற்ற ஆண்களிடமிருந்து பெண்கள் வன்முறையினை எதிர்கொள்ள

வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. வீட்டிற்குள்ளே, நடை பாதையில், போக்குவரத்துச் சாதனங்களில், அலுவலகங்களில், பாடசாலைகளில், அகதிமுகாம்களில் என்று பல்வேறு இடங்களிலும் பெண் வன்முறைகளை எதிர்கொள்கின்றாள். யுத்த காலங்களில் பெண்களுக்கெதிரான வன்முறை, எதிரிகளை வெற்றிகொள்வதற்கான ஆயுதமாகப் பிரயோகிக்கப்படுகின்றது. இத்தகைய வன்முறைச் சம்பவங்களை ஊடகங்கள் வெளிக்கொணர்கின்ற பாங்கும் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றது. எனவே பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் சமூகவியல் ரீதியில் சுருக்கமாக மறுவிசாரணை செய்வதற்கு இக்கட்டுரை முற்படுகின்றது.

பெண்களுக்கெதிரான வன்முறை மூலம் அவளது நடமாட்ட சுதந்திரம் அச்சுறுத்தப்படுவதனால் அவளின் தன்னாற்றலும் சமூக ரீதியான பங்குபற்றலும் மட்டுப்படுத்தப்படுவதற்கு வழி ஏற்படும் நிலைமையினை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இங்கு ஆணின் நடவடிக்கைச் சுதந்திரம் வரைவற்றதாயும், பெண் எப்போதும் வகுக்கப்பட்ட எல்லைக்குள்ளேயே இயங்க வேண்டியவள் என்பதாயும் பாராபட்சமான எடுகோள் தொனிப்பதை அவதானிக்கலாம். குற்றம் அற்ற பெண்கள் கூட தமது குற்றமின்மையை தமது உடல்காயங்களூடு அத்தாட்சிப்படுத்த வேண்டும். என்கிற கருத்து பெண்ணிலை நின்று சிந்திப்போரை மிகுந்த விசனத்துக்கும், தார்மீகக் கோபத்திற்கும் உள்ளாக்குவதாக அமையும். தற்பொழுது இது சட்டரீதியாக ஒழிக்கப்பட்டுள்ளது எனினும் உடல் காயங்களை உறுதிப்படுத்தலே அழுத்தமான ஆதாரமாக இன்றும் கொள்ளப்படுகின்றது.

குடும்பம் என்பது சர்வதேச மற்றும் தேசியச் சட்டத்தில் இயற்கையானதும் அடிப்படையானதுமான சமூக அலகாக வரையறுக்கப்படுகின்றது. இதன் காரணமாக மனித உரிமை பற்றிய சொல்லாடலானது குடும்பத்தளத்தை விடவும் பொதுத்தளம் சார்ந்த வன்முறைகளின் மீதே தனது அதிகளவான கவனக்குவிப்பை மேற்கொள்கின்றது. அதுமட்டுமன்றி, தென்னாசிய சமூகப் பாரம்பரியத்தில் வீட்டு வன்முறைகளை அறிக்கையிடுதலும், வெளிக்கொணர்தலும் பெண்ணின் தனிப்பட்ட கௌரவத்தையும், அவளின் குடும்ப கௌரவத்தையும் இழுக்குபடுத்தும் ஒன்றாக

நோக்கப்படுகின்றது. இதன்படி தந்தையாதிக்கமானது சமூக விழுமியம் அல்லது நியமம் என்ற பெயரில் நிலவுகின்ற நம்பிக்கைகளைத் தனக்குச் சாதகமாகவே உபயோகித்துக்கொள்கிறது என்றே கூறவேண்டும். உலகம்பூராவும் குடும்பம் பற்றிய கருத்தியலானது பெண்களின் தீர்மானங்களை வரையறுப்பதோடு மனைவிமார்களுக்கு எதிரான கணவன்மார்களின் வன்முறைகள் நான்கு சுவர்களுக்குள் பொறுத்துக்கொள்ளப்பட வேண்டியன என்ற படிமத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன. (இந்த இடத்தில் சிறுபான்மையளவு நிகழ்ந்தாலும் விதிவிலக்காக கணவன்மார்களுக்கு எதிராக மனைவிமார்களால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் அல்லது புறக்கணிப்புகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தில் பெண்ணிலைவாதிகளும் ஒருப்படுகின்றனர்). உண்மையில் வீட்டு வன்முறை என்பது சீரற்ற சமூகமயமாதல் செயன்முறை, கல்விவாய்ப்பின்மை, பால்சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வின்மை ஆகிய பல்வேறு காரணிகளோடும் தொடர்புபட்டதாக உள்ளது. எவ்வாறாயினும் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் நாட்டின் அரச மட்டத்திலும் சமூக மட்டத்திலும் வீட்டுவன்முறையைத் தணிப்பதற்கான அல்லது ஒழிப்பதற்கான பொறிமுறை என்பது தோல்வியைத் தழுவுவதாகவே வருத்தம் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் வன்புணர்வு அல்லது திருமணத்தின் பின்னரான வல்லுறவு (Marital rape) என்ற விடயமும் வீட்டுவன்முறையுடன் தொடர்புபடுத்தி ஆய்வுசெய்ய வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக மதுபாவனை, இயற்கைக்கு மாறான பாலியல் இச்சைகள், பிறழ்வான உளவியல் தாக்கங்கள் ஆகிய காரணிகளும் இந்த விடயத்தில் செல்வாக்குச் செலுத்துவதை நாம் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

வன்முறைகளில் (Domestic Violence) அநேகம் ஆனவை, மனைவிமார் தமது கடமைகளில் இருந்தும் தவறியமை பற்றியே நிகழ்வதாகக் கூறப்படுகின்றது. இதன் வழி, குடும்ப நிறுவனத்துக்குள்ளேயே பெண் எதிர்பார்க்கப்படும் அல்லது சுமத்தப்படும் நியமங்களை நிறைவேற்ற வேண்டிய நுகத்தடி பூட்டிய மாடு போலவும், வன்முறைகளை மௌனமாகச் சகிக்க வேண்டிய "பூமாதேவி" போலவும் பாரம்பரியம்சார் கருத்தியல்கள் தொழிற்படுவதைக் காணலாம்.

அத்துடன் பெண் மீதான வன்முறை இயல்பானதாக நியாயப்படுத்தத்தக்கதாக, அனைத்தையும் விட ஒரு சமூக நியமமாயும் கருதப்படுவதையும் அவதானிக்கலாம். பின் வந்த காலங்களில் இக்கருத்துக்கள் தீவிரமான விமர்சனங்களுக்கு உள்ளாகின: அவற்றின் மீது தூக்கி எறியப்பட இயலாத கேள்விகளும் முன் வைக்கப்பட்டன.

**2. தாராண்மைவாதம் / மனநல இயல்சார்ந்த பார்வை :**

இந்நோக்கின்படி பெண்கள் மீதான வன்முறை இயல்பான ஒன்றாக அன்றி, ஒரு சமூகப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் சார்பளவில் ஒரு சிறியளவிலான / பாரிய கவனிப்பைக்கோரி நிற்காத பிரச்சினையாகவே கருதுகிறது.

இங்கு வன்முறை மேற்கொள்ளும் ஆண் நோயுள்ளவன், மந்த புத்திமிக்கவன் என்றவாறாக நோக்கப்படுகின்றான். இவ்வாறு யதார்த்தத்திற்குப் புறம்பான குறுகலான சிந்தனை முன்வைக்கப்படுவதற்கு வழக்கறிஞரின் சாதுாரியமான சட்ட நுணுக்கமே காரணமாக அமைகின்றது (அதிக எண்ணிக்கையிலான வழக்கறிஞர்கள் ஆண்களாக இருப்பதும் இதற்கொரு காரணமாக அமையலாம்).

பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட ஆணை "உளவியல் பாதிப்பு மிக்கவன், சமூகமயமாதலில் நிறைவு அடையாதவன்" எனவும் கருதுகோள்கள் உருவாக்கப்பட்டு, குற்றத்தின் தீவிரம் வெளிப்படுத்தப்படாமல், குற்றம் புரிந்தவனுக்குச் சார்பாக நியாயங்கள் தேடப்படும் ஒரு முயற்சியாக இவ் விளக்கங்கள் பெண்ணிலைவாதிகளின் விமர்சனங்களுக்கு உள்ளாகின்றன. எனவே வழக்கிலுள்ள சட்டங்களும் தந்தையாதிக்க கருத்தியல்களின் செல்வாக்கினுள் அமிழ்ந்து கிடப்பது எமக்குப் புலனாகின்றது.

'மனைவியை அடித்துத் துன்புறுத்தும் ஆண்கள் தமது இளம் பராயத்தில் பெற்றோரால் / பாதுகாவலரால் அதிகமாக / கெடுபிடித்தன்மை நிரம்பிய துன்புறுத்தலை அநுபவித்திருக்க வேண்டும். எனவே, பெண்களுக்கு எதிராக எவ்வகையான

வன்முறையைப் பிரயோகிக்கும் ஆணும் 'நோயாளியாக' கருதப்பட்டு, சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டியவனாகக் கொள்ள வேண்டும் என தாராண்மை வாதிகளின் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகள் இதற்கு மாறாகவே உள்ளன. அதாவது வன்முறையில் ஈடுபடும் ஆண்கள் சுயபுத்தி உள்ளவர்களாகவும் சில சமயங்களில் சிறந்த குடும்பப் பின்னணியைச் சேர்ந்தவர்களாகவும் கூடக் காணப்படுகின்றனர். இதனால் மேற்படி முன்வைக்கப்பட்ட குறுகலான அபிப்பிராயமானது ஆண்களின் வன்முறை நடவடிக்கைகள் தொடர்பான தீவிரத் தன்மையைக் குறைத்து, அவற்றுக்கெதிரான சமூக எதிர்ப்புணர்வையும் தணித்து அவற்றை உளநலக் குறைபாட்டுடனும், சீர்திருத்த வேண்டிய ஒரு தனிப்பட்ட பிரச்சினை என்பதாகவும் திசைதிருப்பி விடுகிறது.

### 3. பெண் நிலைவாதம் சார் பார்வை :

இது ஒரு தனியான நோக்கு அன்று. பெண்ணிய முனைப்பைக் கொண்ட பல்வேறு தளங்களிலான பார்வைகளின் கூட்டாக இதனைக் கொள்ளலாம். பெண்ணுடைய அடிமை நிலையே, அவள் மீதான வன்முறையின் மூல ஊற்றாகக் கருதப்படுகின்றது. பாலியல் வல்லுறவும் இதர வன்முறைகளும் பெண்கள் மீதான ஆணின் மேலாதிக்கமாயும் இனங்காணப்படுகிறது.

எழுபதுகளில் பாரம்பரியக் கருத்தாக்கங்களை உடைத்து சமூகவிஞ்ஞானக் கண்ணோட்டத்தில் பெண்களின் பிரச்சினைகள் பரிசீலிக்கப்பட்டன. அப்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், நிலவி வந்த கருத்தியல்களுக்கும் அப்பாலானவகையில் வியாக்கியானம் செய்யப்பட்டன. சமகால இருபத்தோராம் நூற்றாண்டில் சமூக நிலைமைகள் மாறிவருகின்றன. பெண்கள் ஆண்களுக்கு நிகராக பல்வேறு துறைகளில் உயர்பதவிகளை வகிக்கின்றனர். நாட்டினை ஆட்சி செய்கின்ற அரசியல் பரிபாலனத்திலிருந்து, விஞ்ஞானத்துறை, மருத்துவம், பொறிறியல், சட்டம், வங்கியியல் வரையிலும் மிகப் பொறுப்பான கடமைகளை ஆற்றுகின்றனர். தமக்கெதிராக இழைக்கப்படும் வன்முறைகளை சமூக மட்டத்தில் அம்பலப்படுத்துபவர்களாகவும்

அவற்றுக்கு எதிராகப் போராடுபவர்களாகவும், கூடவே எல்லா வகையான வன்முறைகளையும் எதிர்ப்பதற்கு இயக்க ரீதியாக செயல்வாதங்களில் ஈடுபடுபவர்களாகவும் பெண்கள் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும் அடித்தட்டு வர்க்கத்திலும் பிரமுகர் வர்க்கத்திலும் கூட பெண்களுக்கு எதிரான வன்முறைகள் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படத்தான் செய்கின்றன. பெண்களை அவர்களது ஆற்றலை கௌரவிக்கின்ற ஆண்களும் இருக்கின்றனர். குடும்பத் தளத்தினுள் அடித்தட்டு வர்க்கப் பெண்ணிற்கு இருக்கின்ற சுதந்திரம், உயர்வர்க்கப் பெண்ணுக்கு இல்லாத நிலைமையும் காணப்படுகின்றது. ஒட்டுமொத்தமாகவே ஆணாதிக்கம் அல்லது தந்தையாதிக்கம் என்று கூறி எல்லா இடங்களிலுமே பெண்களுக்கெதிரான வன்முறை நிலவுகின்றது என்று நாம் மேற்போக்காகக் கூறிவிட முடியாது. ஆனால் அடியோடு பிரச்சினை இல்லை என்பதாகவும் மகிழ்ச்சிப்படவும் முடியாது. சமூகக் கட்டமைப்பினுள் மிகவும் ஆழமாக வேரோடியுள்ள இப்பிரச்சினை பற்றி ஆண்களும் பெண்களும் அரசாங்கத்துறையினரும், சமூகத்தின் எல்லா மட்டத்திலுள்ளோர்களும் திறந்த மனதோடு பேசி மனித கௌரவம் தொடர்பான உண்மையான அக்கறையை வெளிப்படுத்தும் போதே பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய தீர்வுக்கான முதற்புள்ளியப்படும் என்பது யதார்த்தமாகும். இக்கருத்தையே இன்றைய பெண்ணிலைவாதிகளும் வெவ்வேறு 'குரல்களில்' வெளிப்படுத்துகின்றனர்.

"செயல்முறை சார்ந்த வன்முறையைப் பிரயோகம் மட்டுமன்றி, யாதாயினும் ஒரு அச்சுறுத்தல் வடிவமும் வெளிப்பாடும் கூட வன்முறையாகவே கருதப்பட்டு அது பெண்ணின் நடவடிக்கைச் சுதந்திரம் மீதான ஆணின் கட்டுப்படுத்தல் மேலாதிக்க அழுத்தம் ஆகவும் கொள்ளப்பட வேண்டும்" என்பதாக பெண் உரிமைகளுக்காகப் போராடுவோர் குரல் கொடுக்க ஆரம்பித்தனர்.

ஆண்களது வன்முறையையும், மேலாதிக்கத்தையும் பெண்கள் எப்படி உணர்கின்றனர் என்பதனையிட்டு ஆய்வு செய்வதிலும் பெண்நிலை நோக்கிலான ஆய்வாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். சட்டரீதியிலான சீர்திருத்தம் இப்பிரச்சினை தொடர்பில் மிகவும் மட்டுப்பாடான நிலையில் உள்ளது என்பதனை இவர்களின் ஆய்வுகள்

நிரூபித்துள்ளன. எனினும், தற்போது தமக்கு இழைக்கப்பட்ட வன்முறை பற்றி முறையிடப் பெண்கள் முன்வருகின்றனர். அதனை ஊக்குவிப்பதாகச் சமூக நிறுவனங்களோ, சட்டத்துறை ஏற்பாடுகளோ போதாதிருப்பதே துரதிஷ்ரவசமானது. எவ்வாறாயினும், பெண்கள் மீதான வன்முறைகள் இன்றும் குறைத்தே மதிப்பிடப்படுகின்றன.

அத்துடன், குற்றவியல் சார் நீதி முறைமையும் கூட பெண்கள், பிள்ளைகள் மீதான வன்முறைகள் எத்துணை விசாலம் ஆனவை, பாரதூரத்தன்மை வாய்ந்தவை என்பதனை ஒப்புக்கொள்ளத் தயங்குகின்றன.

உண்மையில் அவ்வன்முறைகள் பாரதூரமானவையாகவே கணிக்கப்பட வேண்டும். இதர குற்றச் செயல்களைப் போன்று அவற்றுக்கும் கடுமையான தண்டனை விதிக்கப்பட் வேண்டும் எனவும் பெண்ணிலைவாதிகள் வாதிடுகின்றனர்.

**பாலியல் வல்லுறவு:**

நாளிதழ்களில் இன்று அதிக பக்கங்களை பாலியல் வல்லுறவு பற்றிய செய்திகளே அடைத்துக் கொள்கின்றன. ஆனால் அவை பெண்களின் உரிமை, தன்னாதிக்கம் என்பவற்றை கட்டுப்படுத்துவது பற்றி ஆணாதிக்க சமூகம் கருத்தில் கொள்வதில்லை. ஆண்களின் கட்டுப்படுத்த இயலாத பாலுறவு சார் உந்துதல்களினால் வல்லுறவு நிகழ்வதாக பொதுப்படையாகக் கூறப்படுகிறது. எனினும் பெண்நிலைவாதிகள் இவ் அபிப்பிராயத்தை அவ்வாறே ஏற்றுக்கொள்வதில்லை. பார்பறா டோனர் (Barbara Toner) என்பவர் மானுடவியல் தழுவிய அத்தாட்சிகளின் பிரகாரம் ஒரு மனித ஜீவியின் பண்பாட்டு விழுமியங்களும் நியமங்களும் அதன் மனப்பாங்குகளிளையே தங்கியுள்ளதாகச் சுட்டிக்காட்டுகின்றார். நியூக்கினியாவின் 'அரீபெஷ்' (Areapesh) தொல்குடியினரிடையே பாலியல் வல்லுறவு என்பது அறியப்படாத விடயமாகவே உள்ளது. கென்னியாவின் 'குஷி' குழுமத்தினர் மத்தியில் அது சமூகரீதியிலான கட்டுப்பாட்டு வடிவமாக தொழிற்படுகிறது.

பாலியல் வல்லுறவு என்பது வன்முறையானதும், மேலாதிக்கம் கொண்டதுமான நடவடிக்கையாகும். அது, பாதிக்கப்பட்டவரை சமூக மற்றும் உளவியல் மட்டத்தில் தாக்குவதும், பாதிப்பிற்குப் பின்னர் பல்வேறு உளவியல் குழப்ப நிலைகளைத் தோற்றுவிப்பதுமாகும் என்று பெண்நிலைவாதிகள் எடுத்துக்காட்டுகின்றனர்.

மிக அண்மையில் நமது நாட்டின் தென்னிலங்கைப் பாடசாலை ஒன்றில் பொதுப் பரீட்சை ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் பாடசாலை மாணவி ஒருத்தி, பாலியல் வல்லுறவுக்குள்ளான சம்பவம் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதிர்ச்சியையும் தாண்டி இத்தகைய சம்பவங்களோடு தொடர்புபட்டவர்கள் பற்றிய சட்டத்தினதும், சமூகத்தினதும் கணிப்பீடு அல்லது தொடர் நடவடிக்கை என்பதே எம்மை விசனத்திற்கு உள்ளாக்குகின்றது.

ஆண்கள் இயல்பாகவே பெண்களைத் தமது "இரையாகக்" கொள்வதும், அவர்களைச் சுரண்டிவாழும் தன்மையும் நிலவுவதாக சுசானா பிறவுன் மிலர் (Susana Brown Miller) என்னும் தீவிரப் பெண்ணிலைவாதி சாடுகின்றார். ஆண்களிற்கு பெண்களை வல்லுறவு செய்வதற்கான ஆதிக்கம் உண்டு. ஆனால் அதற்கு தக்க பதிலடி கொடுக்கும் வாய்ப்பு பெண்களிற்கு இல்லை எனவும் எடுத்துக்காட்டுகின்றார். இந்த இடத்தில் தமிழ் திரைப்படங்களின் பிற்போக்குத்தனமான சித்திரிப்புகளையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். பாலியல் வல்லுறவிற்கு உள்ளான பெண் ஒன்றில் தற்கொலை செய்துகொள்வாள். அல்லது வல்லுறவை மேற்கொண்டவனிற்கு மனைவியாக ஆக்கப்படுவாள். (உதாரணம் சிறை, கிராமத்து மின்னல்.) ஆனால் எவ்வாறாயினும் சமூக யதார்த்தம் வேறுபட்டது என்பதைப் புரிந்து கொள்ள தமிழ்த் திரைப்பட உலகத்தினர் மறுக்கின்றனர். உண்மையில் பாலியல் வவ்லுறவு என்பது தந்தை ஆதிக்கம், ஆணாதிக்கச் சமயம், ஆணாதிக்கச் சட்டம், பாராபட்சமான ஊடகம், பிற்போக்குத்தனமான தேசிய அரசியல் என்பவற்றிற்கான ஆயுதமாகவும் தொழிற்படுவதனை நாம் புரிந்துகொள்ள முற்படவேண்டும்.

ஒரு நிலையில் பாலியல் வல்லுறவு ஒரு அரசியல் நடவடிக்கையாக மாறுகின்றது. பெண்ணின் உடல் மீதான கட்டுப்பாட்டை மேற்கொள்வதன் ஊடாக அவளின் சுயாதீனம் பறிக்கப்படுகின்றது: அபிவிருத்தி பாதிக்கப்படுகின்றது: அவளின் நடமாட்டம் அச்சுறுத்தலிற்கு உள்ளாகின்றது.

**பாலியல் வல்லுறவைப் பற்றிய புனைவுகளும் யதார்த்தங்களும் :**

ஆணாதிக்க சமூகம் பாலியல் வல்லுறவு தொடர்பில் ஏற்படுத்தி வைத்திருக்கும் புனைவுகளின் மாயைகளை பெண்ணிலைவாதிகள் விஞ்ஞானபூர்வமாக கட்டவிழ்த்து வருகின்றனர். அவற்றை பின்வருமாறு நோக்கலாம்.

☞ பாலியல் வல்லுறவானது பரவலாக நடைபெற முடியாத ஒன்றாக நம்பப்படுகின்றது. பெண்கள் அதிலிருந்து எப்போதும் தப்பிக்கொள்ளலாம் என்றும் கருதப்படுகின்றது. ஆயின், இத்தகைய கருத்து நிலை அச்சம், மரண பீதி என்கிற அம்சத்தை முற்றாக அலட்சியம் செய்வதுடன், பாலியல் வல்லுறவின் தாக்கங்களையும் குறைத்து மதிப்பிடுகின்றது.

☞ பெண்கள் வல்லுறவினை விரும்பி அநுபவிக்கிறார்கள் என ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம், வல்லுறவிற்குள்ளானவர்கள் அச்ச உணர்வையும் அவமானத்தையும் தமது அகவய நிலையில் அநுபவித்தமை நிருபணமாகியுள்ளது.

☞ அந்நியர்களால்தான் வல்லுறவு பிரயோகிக்கப்படுவதாக ஓர் அபிப்பிராயம் உண்டு. ஆனால் புள்ளிவிபரம் சார்ந்த ஆய்வுகள் நன்கு அறிமுகமானவர்களாலும், இரத்த உறவினர்களாலும், நண்பர்களாலும்தான் வல்லுறவு அதிகம் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கின்றன.

☞ வல்லுறவிற்கு உள்ளான பெண்கள் சித்தசுவாதீனம் அற்ற நிலையை அடையலாம், தற்கொலை புரியலாம், உளச்சிதைவிற்கு ஆளாகலாம்

என்பது எதிப்பார்ப்பாக உள்ளது. எவ்வாறாயினும், தனது ஆளுமை சிதையாமல் சட்டத்தின் முன்வந்து, நீதியை நிலை நிறுத்தி சமூக மட்டத்தில் தொடர்ந்து ஆளுமையை முன்னெடுக்கும் பெண்களும் இருக்கின்றார்கள்.

**முடிவுரை :**

உண்மையிலேயே வன்முறை என்பது மானிடவியலாளர்களின் பார்வையில் எல்லா அங்கஜீவிகளுக்கும் உட்பதிக்கப்பட்ட ஓர் அடிப்படை உணர்வாகப் பிரேரிக்கப்படுகின்றது. ஆனால், தந்தையாதிக்கச் சமூகம் ஆண்களுக்கே உரிய அல்லது ஆண்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட ஓர் உணர்வாக கட்டமைத்திருப்பதுதான் இங்கு பிரச்சினைக்குரிய விடயமாகிறது. ஆண் ஆத்திரமூட்டப்பட்டால், ஏன் பெண்ணும் ஆத்திரமூட்டப்பட முடியாது என்பதாக பெண்ணிலைவாதிகள் கேள்வியெழுப்புகின்றனர். சட்டம், மருத்துவம், மதம், குடும்பம், பாடசாலை, ஊடகம், அரசு ஆகிய நிறுவனங்கள் ஆண்களால் பிரயோகிக்கப்படும் வன்முறையை நியாயப்படுத்தவே முற்படுவதாக தீவிரவாதப் பெண்ணிலைவாதிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

இந்த இடத்தில் தமிழ்த் தரைப்படங்கள் பற்றியும் நாம் பிரஸ்தாபிக்காமல் இருக்க முடியாது. தமிழ்த் திரைப்பட கதாநாயகர்களும் வில்லர்களும் வரன்முரையின்றி பெண்களை வன்முறைக்குள்ளாக்குவதும் அவை ஏற்புடைய சமூகக் கோலங்களாகச் சித்திரிக்கப்படுவதும் கேள்விக்குள்ளாக்கப்படாமல் பார்வையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனவே, எமது சமூகக் கட்டமைப்புப் பற்றியும் சமூகம் ஏற்படுத்தி வைத்துள்ள கருத்தியல்கள் பற்றியும் நாம் மறுபார்வைக்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. பெண்களின் உரிமைகளும் மனித உரிமைகளே என்பதனை இன்று சர்வதேசமே ஏற்றுக்கொண்டிருக்கின்றது. ஆனால் யதார்த்தத்தில், உலகின் பல்வேறு நாடுகளிலும் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் எவ்வளவு பாரதூரமானவை என்பதனை ஐக்கிய நாடுகள் சபை மூலமாக வெளியிடப்பட்ட அறிக்கை

மிகத்துல்லியமாக வெளிப்படுத்தியது (UN special report on violence against women). பெண்கள் பெண்களாக இருக்கின்ற ஒரே காரணத்திற்காகவே வன்முறைக்குள்ளாகும் தன்மையை பெண்ணிலைவாதிகள் எடுத்துக்காட்டுகின்றனர். உண்மையில் பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது, அபிவிருத்திக்கு எதிரான தடையே ஆகும். ஆண்களும் பெண்களும் பால்நிலை கடந்து சமத்துவம் உடையவர்கள் என்ற கருத்தாக்கம் குடும்பம் என்கிற நிறுவனத்திலிருந்தும் விதைக்கப்படும் பொழுதே, பெண்களுக்கு எதிரான வன்முறையை ஓரளவுக்கேனும் தணிக்க இயலும். எல்லாவகையான வன்முறைகளும் பால்வேறுபாடுகளுக்கும் அப்பால் அடிப்படை மனித தர்மத்திற்கு முரணானவையே எனலாம். எனவே பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினராலும் கண்டிக்கத்தக்கனவே ஆகும். எவ்வாறாயினும், வெறும் கண்டனங்களையும் தாண்டி ஒரு வலுவார்ந்த பரந்துபட்ட செயல்வாதம் (Activism) ஒன்றே இன்றைய அவசரத்தேவையாகின்றது.

**உசாத்துணை :**


1. பெண் சஞ்சிகை, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்(2001), தொகுதி 06, இல 03,04 பக்(19-29).

2. Abbott, Pamela & Wallce, Claire, An Introduction to Sociology- Feminist Perspective, 1997, Rouledge, Londan

3. Barrott, R.D & Phillps. F, Destabilizing Theory: Contemporary Feminist Debates, 1992, Polity University Cambridge.

# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

J. ஜீவரதி

பெண்கள் தலைமைக்குடும்பங்கள் என்பது இலங்கையைப் பொறுத்தவரை ஒரு புதிய தோற்றப்பாடல்ல. ஏனெனில் வரலாறு முழுவதுமே பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டே இருந்து வந்துள்ளனர். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக எமது நாட்டில் நீடித்திருந்த யுத்தம், சுனாமிப்பேரலை மற்றும் பல நிகழ்வுகள் என்பன எமது சமூகங்களின் பாரம்பரிய சமூக பொருளாதார கலாசார சமயக் கட்டமைப்புகளை சீர்குலையச் செய்தன. இதனால் இடப்பெயர்வு, குடும்ப ஒருங்கிணைப்பு அற்றுப் போதல், வாழ்வாதாரச் சிதைவு, நடத்தைக் கோலங்களில் மாற்றம் என்பன குடுப்பக் கட்டமைப்பில் பல மாறுதல்களை ஏற்படுத்தின. இந்நிலையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் என்றொரு அம்சம் தற்போது நமது சமூகங்களில் முக்கியமான ஒரு வெளிப்பாடாகப் பிரதிபலிக்கத் தொடங்கிய அதே நேரம் பெண்ணிலைவாதிகள் மற்றும் சமூக விஞ்ஞானிகளின் கவனத்தை ஈர்ந்துள்ள ஒரு விடயமாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தவகையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் என்பது " ஒரு பெண் அல்லது பெண்கள் குடும்பத்திற்கு வருமானத்தை ஈட்டி அவர்கள் வருமானத்திலே வழிநடத்திச் செல்லும் குடும்பங்கள் எல்லாம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் " என வரைவிலக்கணப்படுத்தலாம். கணவனை இழந்தவர்கள் மட்டுமே பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் சேர்க்கப்படும் நிலைமை இன்று மாறி கணவனால் கைவிடப்பட்ட அல்லது விவாகரத்து பெற்ற பெண்கள்,

குடுபத்தின் மூத்த ஆண் அங்கத்தவர் காணாமல் போதல் அல்லது அங்கவீனமுற்றவராக இருத்தல், வேறு காரணங்களுக்காக ஒரு குடும்பத்தை தலைமையேற்று நடத்தல் என்பன போன்ற பல்வேறு வகைக்குள் அடங்குபவர்களும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்குள்ளே அடக்கலாம். உலகளாவிய ரீதியிலும் சரி, இலங்கையிலும் சரி பெண்கள் ஆண்களை விட சமூகப், பொருளாதார, கலாசார ரீதியாகப் பல பிரச்சினைகளை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர். அதே நேரம் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயற்படும் பெண்கள் ஏனைய பெண்களை விட ஒரு படி மேலான புறக்கணிப்புக்கு உள்ளாகி அவர்கள் வாழுகின்ற சூழலில் உள்ள சமூக, பொருளாதார, கலாசார, சமயப் பின்னணிகளால் பல்வேறு பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பெண்கள் தலைமைக்குடும்பங்களை பொறுத்தவரை அவரது குடும்பத்திற்கு தேவையான பொருளாதாரம், தீர்மானம் எடுத்தல், பிள்ளை பராமரிப்பு போன்ற அனைத்தும் அப்பெண்ணிடமே காணப்படும்.

இவ்வாய்வானது விபரணரீதியான ஆய்வாக அமைந்துள்ளது. இங்கு எண்ரீதியான முறைமையியலும், தரரீதியான முறைமையியலும் கையாளப்பபடடுள்ளது. முதல் நிலைத்தரவுகளை பெறுவதற்காக அவதானம், கட்டமைக்கப்படாத நேர்காணல் ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளை சேகரிப்பதற்காக பத்திரிகைகள், நூல்கள், அறிக்கைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தொன்று தொட்டு நிலவி வரும் பால்நிலை அசமத்துவம் காரணமாகச் சாதாரண கிராம மட்டங்களில் உள்ள பெண்கள் தொடக்கம் நகர்ப்புறங்களிலுள்ள உயர் பதவிகளை வகிக்கும் பெண்கள் வரை சகலரும் ஏதோ ஒரு வகையில் பல சவால்களுக்கு மத்தியிலே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் இவர்கள் எல்லோரையும் விட கணவன் இல்லாது குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயற்படும் பெண்கள் ஒரு படி மேலான நிலையில் சாவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர் என்பதே யதார்த்தமாகும். இதற்குக் காரணம் இவர்கள் மத்தியில் நிலவும் தாழ்வுச் சிக்கலும், ஏனையோர் இவர்களை ஒதுக்கி வைத்தலுமாகும். எனவே தான்

குறிப்பிட்ட இவ்வாய்வுப் பிரதேசத்தில் உள்ள பெண்கள் தலைமைக்குடும்பங்கள் சமூகப்பொருளாதார கலாசார ரீதியாக எதிர் நோக்குகின்ற பல பிரச்சினைகளை இனம் கண்டு தீர்வுகளை முன்வைப்பதன் ஊடாக ஏனைய பெண்களைப் போல் இவர்களும் சமனான அந்தஸ்து சுயகௌரவத்துடன் வாழ வேண்டியவர்கள் என்பதை எடுத்துக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

மட்டக்களப்பு வாவியானது இம்மாவட்டத்தை எழுவான் கரைப்பகுதி, படுவான் கரைப்பகுதியென இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றது. இப்பிரிவினையில் மேற்குப் புற மாக உள்ள பெரும் நிலப்பகுதி படுவான் கரையாகும் இப்பெரும் நிலப்பகுதியின் போரதீவு பற்று பிரதேசத்திற்கும் மண்முனை மேற்குப் பிரதேசத்திற்கும் இடையே காணப்படும் பகுதியே பட்டிப்பளை மண்முனை தென்மேற்குப் பிரதேசமாகும். இப்பிரதேசமானது சுமார் 120 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டது. இங்கு வாவியோரமாக சனத்தொகை கூடிய பல கிராமங்கள் காணப்படுகின்றன. அவையாவன கொக்கடிச்சோலை, முனைக்காடு, முதலைகுடா, மகிழடித்தீவு, படையாண்டவெளி, பண்டாரியாவெளி கடுக்காமுனை, அம்பிளாந்துறை, அரசடித்தீவு, பட்டிப்பளை அருள்நேசபுரம் என்பனவாகும். இவற்றைவிட இப்பிரதேசத்தின் மேற்குப்புறமாக வயல்வெளிகளை அண்டிப் பல கிராமங்கள் காணப்படுகின்றன.

மேலும் இப்பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேசங்களை விட பல வகையிலும் பாதிப்புக்குள்ளான ஒரு பிரதேசமாகவும் பல பின்தங்கிய கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் 20 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்த யுத்தத்தின் தாக்கத்திற்குள்ளான ஒரு பிரதேசமாகும். இதனால் பெண்கள் தலைமைக்குடும்பங்கள் அதிகரித்ததுக் காணப்படுகின்றது. குறிப்பாக 1981ம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் மகிழடித்தீவு இறால் வளர்ப்பு பண்ணை மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை, 1990ம், 1991ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் மற்றும் பல இராணுவ நடவடிக்கைகள் பல பெண்கள் தமது கணவன்மாரை இழக்கக் காரணமாயிருந்தது. அத்தோடு பல்வேறு பட்ட பாதுகாப்புச் கெடுபிடிகளின் நிமித்தம் பலர் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டும், காணாமல் போயும் உள்ளனர். எனவே தான் யுத்தம் காரணமாகவே பல

நூற்றுக்கணக்கான பெண்கள் குடும்பங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றனர். இவை தவிர இயற்கையான மரணங்கள், நோய் வாய்ப்பட்டிருத்தல், விவாகரத்து போன்ற பல காரணங்களினாலும் பெண்கள் குடும்பங்களின் தலைமைப்பங்கை வகிக்கின்றனர். இப்பிரதேசத்தை பொறுத்தவரை குடும்பத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்று செயற்படும் பெண்கள் தமது வாழ்வாதார, பொருளாதார. சமூதத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதிலும். சமூகத்தில் தமது இருப்பை உறுதிப்படுத்தி கொள்வதிலும் பல சவால்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

### 1.4 ஆய்வுப்பிரதேசத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சிலவற்றை வகைப்படுத்தலாம் அவை:

- வறுமை
- நிரந்தரமான தொழில் இன்மை
- பிள்ளைகளின் கல்வித் தேவைகளை நிறைவேற்ற முடியாமை
- போதிய சுகாதார வசதியும், போசாக்கின்மையும்
- பாலியியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுதல்
- சமூகத்தில் கலாசார, பண்பாட்டு ரீதியாக ஒதுக்குதல்
- சமூகத்தில் ஏனையவர்களைப் போல் வாழ முடியவில்லையே என்ற உளத்தாக்கம்

**வறுமை**

இப்பிரதேச மக்கள் பெரும்பாலானோர் ஏழைகளாகவே காணப்படுகின்றனர். **1. "விவசாயமும் அதைச் சார்ந்த தொழில்களுமே பிரதான வருமானம் ஈட்டும் தொழிலாக காணப்படுவதால் குறிப்பிட்ட ஒரு சாராரைத் தவிர ஏனைய பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழே வாழுகின்றனர்"** (Vulnerability - Poverty profile, Batticaloa District, Manmunai South West(paddipalai), 2006.) இந்நிலையானது பெண் தலைமைக் குடும்பங்களைப் பொறுத்தவரை ஒரு படி மேலானதாகவே காணப்படுகின்றது. அதாவது ஏழையாக இருந்த குடும்பங்கள் கணவன்

இல்லாதவிடத்து மிகவும் ஏழ்மை நிலைக்குச் செல்கின்றனர். அந்தவகையில் பெண் தலைமைக் குடும்பங்களைப் பொறுத்தவரை வறுமை என்பது ஒரு பிரதான பிரச்சினயாகும். உணவு, உடை உட்பட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் நாளாந்தம் மிகவும் கஷ்டப்படுகின்றனர். ஏனெனில் நவீன சமூக - பொருளாதார முறைமை காரணமாக உறவினர்களின் உதவியோ நிதி உதவியோ இன்றி இத்தேவைகளை நிறைவேற்ற முடியாதுள்ளனர். இதனால் சமூகத்தில் உள்ளவர்களுக்கும் ஏனையவர்களுக்குமான இடைவெளி அதிகரித்துக் காணப்படுகின்றது. அதாவது இன்று நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வு காரணமாக இப்பெண்களின் குடும்பங்கள் எந்தவித உதவியும் இன்றி உறவினர்கள் உட்பட்ட சமூகத்தில இருந்து அந்நியப்படுத்தப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இதன் காரணமாக பொது வாழ்விலிருந்தும், சமூக வாழ்விலிருந்தும் முற்றுமுழுதாக என்றில்லாமல் ஓரளவு ஒதுக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு நாளும் கடுமையாக உழைக்க வேண்டியளவிற்கு பொருளாதாரச் சுமையை (Economic Burden) உடையவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

**நிரந்தரமான தொழில் இன்மை:**

இக்குடும்பங்களை பொறுத்தவரை வறுமைக்கும் தொழிலுக்கும் இடையில் தொடர்பு அதிகரித்தே காணப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் பொருளாதார நெருக்கடி என்பது எல்லாக் குடும்பங்களிலும் நிலவுகின்றது. இந்நிலையில் ஒரு குடும்பத்தில் கணவன் இல்லாதவிடத்து மொத்த நிதிச்சுமையும் அக்குடும்பப் பெண்ணிடமே விழுகின்றது. ஆனால் இவர்களுக்கு என்று நிலையான ஒரு தொழில் இல்லாமை பாரிய ஒரு பிரச்சினையாகும். இப்பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் குடும்பங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள பெண்கள் தமது நாளாந்த தேவைகளை நிறைவேற்ற கைத்தொழில்களையே செய்து வருகின்றனர். உதாரணமாக நெல் குற்றி விற்றல், தயிர் போத்தல் விற்றல், இலைக்கறிவகை வியாபாரம், மாடு, ஆடு, கோழி வளர்ப்பு, வீட்டுத்தோட்டம், சிறுகடை வியாபாரம் போன்றவற்றையும் இதனோடு வீட்டுப் பணிப் பெண்களாக வெளிநாடு செல்லல் என்பனவற்றையும் குறிப்பிடலம். இத்தொழில்கள் அனைத்துமே நிரந்தரமானவை அல்ல.

ஏனெனில் இவற்றுடாக அவர்களது குடும்பத் தேவைகளை நிறைவேற்றுமளவிற்கு வருமானம் கிடைத்தால் மாத்திரமே அத்தொழில்களை தொடர்ந்து செய்கின்றனர். இல்லாவிட்டால் வேறு வேறு தொழில்களையே செய்ய முற்படுகின்றனர். இத்தொழில்கள் அனைத்திலும் உடல் உழைப்பே அதிகமாக உள்ளதே தவிர அதனால் பெறும் வருமானம் என்பது குறைவாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு ஒரு சில பெண்கள் தவிர பெரும்பாலானோர் எதுவித தொழில்களும் செய்யாது காணப்படுகின்றனர். ஏனெனில் எந்தத் தொழிலை எப்படி செய்வது என்பது தொடர்பாக எந்த வித அறிவும் அற்றவர்களாகவும் அதே நேரம் சுயதொழில் ஒன்றை தொடங்குவதற்குரிய பொருளாதார உதவியும் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களது வருமான வளம் என்பது சமுத்தி உணவு முத்திரை ஒன்றே என்று கூறலாம். எனவே பெண்கள் தலைமைக்குடுமபங்களில் நிலவும் ஏழ்மை நிலைக்கு நிரந்தரமான ஒரு தொழில் இல்லாமை பிரதான காரணம் எனலாம்.

| *பிரதான வாழ்வாதாரம்* | *பெ. த. தா. கு. எண்ணிக்கை* |
|---|---|
| சிறு வியாபாரம் | 02 |
| சிறுகடை | 17 |
| விவசாயம் கால்நடை வளர்ப்பு | 18 |
| கூலி | 515 |
| சுயதொழில் | 343 |
| அரச அரசசார்பற்ற உத்தியோகம் | 12 |
| தொழில் அற்றோர் | 458 |

பட்டிப்பளை பிரதேச பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரதான வாழ்வாதாரம்

SOURCE: CARE International Report.2008

| *வருமானம் ஈட்டும் வழிகள்* | *பெ. தா. கு எண்ணிக்கை* |
|---|---|
| சமுர்த்தி | 1328 |
| ஓய்வுதியம் | 04 |
| வாடகை குத்தகை | 05 |
| உறவினர் உதவி | 0 |
| ஏனையவை | 26 |

## பிள்ளைகளின் கல்வித் தேவையை நிறைவேற்ற முடியாத நிலை:

பெற்றோர் என்ற வகையிலும், குடும்பத்தின் தலைவி என்ற வகையிலும் பிள்ளைகளின் கல்வி உட்பட்ட தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடமை இப்பெண்களுக்கு உண்டு. ஆனால் இவர்கள் எதிர்நோக்கும் பொருளாதார கஷ்டம் காரணமாக இவை சாத்தியப்படாத ஒன்றாகவே இது காணப்படுகின்றது. இக்குடும்பங்களைச் சேர்ந்த ஒவ்வொரு பிள்ளைகளும் அவர்களது குடும்பச் சூழ்நிலை காரணமாகக் கல்வியை தொடர முடியாதுள்ளனர். ஏனெனில் இக்குடும்பங்களில் நிலவும் வறுமை காரணமாக இப்பெண்கள் தமது தொழிலுக்கு உதவியாகத் தமது பிள்ளைகளைக் குறிப்பாக ஆண்பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்கின்றனர். அத்தோடு 16-17 வயதிற்கு மேறபட்ட ஆண் பிள்ளைகள் இக்குடும்பங்களில் இருந்தால் அவர்களே அக்குடும்பப்பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றனர். மாறாகப் பெண்பிள்ளைகளாக இருந்தால் அவர்கள் இளவயதிலே திருமணம் செய்து கொடுக்கப்படுகின்றனர். இதனால் இப்பிள்ளைகள் கல்வியை இடையில் நிறுத்தி விடுகின்றனர். எனினும் குறிப்பிட்டுக்கூறக்கூடிய குடும்பங்களைச்சேர்ந்த பிள்ளைகள் இராமகிருஷ்ண மிஷன், அமெரிக்க மிஷன் போன்ற விடுதிகளில் தங்கி படித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும் உயர்கல்வியைத் தொடர்வது என்பது கஷ்டமாகவே காணப்படுகின்றது. எது எவ்வாறாயினும் பெண்தலைமைக் குடும்பங்களைச்சேர்ந்த பெண்களின் இந்நிலையானது அவர்களை மேலும் பாதிக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும். எனவேதான் இப்பிரதேசத்தில் உள்ள ஏனைய குடும்பங்களைவிட இக்குடும்பங்கள் கல்வி ரீதியாகக் கூடப் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன.

## போதிய சுகாதார வசதியும் போசாக்கின்மையும்

பெண் தலைமைக் குடும்பங்களில் நிலவும் வறுமை நிலையானது அவர்களுக்குத் தேவையான போதிய சுகாதார, மருத்துவ வசதிகளை நிறைவேற்ற முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது. 2.“**மலசலகூட வசதியின்மை, சுத்தமான குடிநீர் இன்மை, சிறந்த போசாக்கான உணவுகளை பெற்றுக்கொள்வதற்கான வசதியின்மை போன்ற**

பலவற்றை இதனுள் குறிப்பிடலாம்" (Vulnerability -Poverty profile, Batticaloa District, Manmunai South West(paddipalai), 2006). ஏழ்மையின் பிடியில் இவர்கள் சிக்குண்டுருப்பதால் இவர்களுக்குக் கிடைக்ககூடிய வளங்களில் முக்கியமான ஒன்றான சுகாதார கவனிப்புக்கள் கிடைப்பதில் தடைகள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக உலக தரிசனம் என்னும் அரசசார்பற்ற நிறுவனம் மலசலகூட வசதிகளை இப்பிரதேசத்தில் அமைத்துக் கொடுத்து வருகின்றது. ஆனால் பெண் தலைமைக்குடும்பங்களைச் சேர்ந்த எல்லோருக்கும் கிடைக்காமை ஒரு குறைபாடாகும். ஏனெனில் இந்நிறுவனம் மலசலகூடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு முதல் இதற்கென தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் குறிப்பிட்ட ஒரு தொகைப்பணத்தை வங்கியில் வைப்புச் செய்ய வேண்டும் என்ற விதி காரணமாக ஏழ்மை நிலையிலுள்ள இக்குடும்பங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. இவர்களுக்கு இதற்கான் மாற்று வழிகள் எதுவும் குறிப்பிட்ட நிறுவனத்தால் செய்து கொடுக்கப்படாமை ஒரு குறைபாடாகும்.

அத்தோடு போசாக்கான உணவின்மை எனும் போது இன்றைய நிலையில் நிலவும் விலைவாசி உயர்வு, வறுமை என்பன காரணமாக இவர்களது வீட்டிலே கிடைக்கக்கூடிய போசாக்கான உணவுகளையும் (பால், முட்டை, மரக்கறி, கீரைவகை) தமது குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக விற்கின்றனர். மாறாக அதை சாப்பிடுவது என்பது குறைவாகவே காணப்படுகின்றனது. இதனால் இப்பெண்களும் இவர்களது பிள்ளைகளும் ஆரோக்கியமற்றவர்களாகவும், இலகுவாக நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகக் கூடியவர்களாக காணப்படுகின்றனர்.

### பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுதல்

இப்பெண்களைப் பொறுத்தவரை வெளிபிபடுத்த முடியாத ஒரு பிரச்சினையாக இது காணப்படுகின்றது. ஏதோ ஒரு வகையில் 3."**ஒவ்வொருவரும் இப்பிரச்சினையை எதிர்கொள்ளுகின்றனர். ஓரளவு வயது முதிர்ந்த பெண்களை விட இவர்களின் பெண் பிள்ளைகளும் இளம் பெண்களுமே கூடுதலாக**

**இப்பிரச்சினைக்குள்ளாகின்றனர்''** (பெண்ணுரிமைகள் கண்ணோட்டம், 2002-2007 தொகுப்புகள், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு.) பெண்கள் தலைமைக் குடும்பங்களைப் பொறுத்தவரை அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருப்பதே மேற்படி பிரச்சினைக்குப் பிரதான காரணமாகும். வளர்ந்த ஆண்பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் தவிர ஏனைய இளம் பெண் தலைமைக் குடும்பங்கள் இப்பிரச்சினையைக் கடுமையாக எதிர் கொள்கின்றனர். ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டது சுற்றிவர உள்ள அயலவர்கள், உறவினர்களுக்குத் தெரியுமிடத்து அக்குறிப்பிட்ட பெண்ணே கெட்டவள் என்று அவளை ஒதுக்கி வைக்கும் தன்மை இச்சமூகத்தில் காணப்படுகின்றது. இதனால் இக்குறிப்பிட்ட பெண் உட்பட அவளின் பிள்ளைகள் கூட ஏனையவர்களினால் ஒதுக்கி வைக்கப்பட்டு உள ரீதியான தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். உதாரணமாக இப்பிரதேசத்திற்குட்பட்ட ஒரு கிராமத்தில் தன் தாய் கெட்டவள் என்று சொல்லி அப்பெண்ணின் இரு ஆண் பிள்ளைகளும் அப்பெண்ணை விட்டு பிரிந்து உறவினர்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இச்சம்பவம் நடந்து ஏழு எட்டு வருடங்களாகியும் அப்பிள்ளைகள் இருவரும் தம் தாயுடன் கதைக்காமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு குறிப்பிட்ட சில ஆண்களால் இப்பெண்கள் பாலியல் பலாக்காரத்திற்கு உட்படுத்தப்படுவதால் அக்குறிப்பிட்ட பெண் மாத்திரமன்றி அப்பெண்ணின் பிள்ளைகளும் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்படுகின்றமை வேதனைக்குரிய விடயமாகும். இதனால் இக்குடும்பங்கள் மேலும் சமூக, பொருளாதார, கல்வி ரீதியாகச் கீழிறங்கியே செல்கின்றன.

### சமூகத்தில் கலாச்சார ரீதியாக ஒதுக்கிவைத்தல்

இன்றைய காலகட்டத்தில் கணவன் இல்லாத பெண்களைச் சமூகத்தில் நடைபெறும் பல முக்கியமான நிகழ்வுகளில் ஒதுக்கி வைக்கும் தன்மையில் ஓரளவு நெகிழ்வுத் தன்மை காணப்பட்ட போதிலும் கிராமப்புறங்களைப் பொறுத்தவரை இது அன்று தொட்டு இன்று வரை அதே நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு ஒதுக்கி வைக்கும் தன்மை காரணமாக

இப்பெண்கள் தாங்களாகவே கலாச்சார நிகழ்வுகளில் கலந்து கொள்ளாது ஒதுங்கி நிற்கின்றனர். குறிப்பாகத் திருமண நிகழ்வைக் குறிப்பிடலாம். இப்பிரச்சினை எல்லா இடங்களிலும் உள்ள பெண்களுக்கும் உள்ள ஒரு பொதுவான பிரச்சினையாகும். இந்நிலை காரணமாக இப்பெண்கள் ஏனைய கணவன் இருக்கும் பெண்களை விட தாங்கள் எப்போதுமே இரண்டாம் பட்சமானவர்கள்தான் என்னும் தாழ்வுச்சிக்கல் இவர்கள் மத்தியில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**சமூகத்தில் ஏனையவர்களை போல் தாங்களும் சிறப்பான அந்தஸ்து சுயகௌரவத்துடன் தமது வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லையே என்ற உளத்தாக்கம்.**

கணவன் இல்லாதவிடத்து குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயற்படும் பெண்களையும் அவர்களது குடும்பங்களையும் எடுத்துக் கொண்டால் சமூக, பொருளாதார, கல்வி கலாச்சார ரீதியாக ஏனையவர்களை விட இரண்டாம் பட்சமாகத்தான் காணப்படுகின்றார்கள். இதனால் உடலியல் உளவியல் ரீதியாகாப் பல பிரச்சினைகளை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை இக்குடும்பங்கள் எப்போதும் பொருளாதார ரீதியான ஒரு நிலைத்த பாதகாப்பையே வேண்டி நிற்கின்றனர். இவ்வாறானதொரு நிலைமை காரணமாக ஏனையவர்களைப் போல் தானும் தனது பிள்ளைகளும் சுயமரியாதையுடனும் அந்தஸ்துடனும் வாழ முடியவில்லையே என்ற உளத்தாக்கம் இவர்கள் மத்தியில் இருந்து கொண்டே இருக்கின்றது. இதற்காக வேண்டி இவர்கள் நாளாந்தம் தமது உடலை வருத்தி உழைத்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள். ஆனால் நிரந்தரமான ஒரு தொழில் இல்லாமையினால் இது சாத்தியப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

ஒரு சில குடும்பங்களைத் தவிர ஏனைய பல குடும்பங்கள் தமது உழைப்பின் மூலம் திருப்தி காணப்படாதவிடுத்து நமது குடும்பம் எப்போதுமே இப்படியே தான் இருக்குமோ என்று எதிர் காலத்தைப்பற்றிய பயம் அவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதனால் இவர்கள் எப்போதுமே உளவியல் தாக்கத்திற்குட்பட்டவர்களாகத்தான் காணப்படுகின்றனர்.

### தீர்வுகள்

பட்டிப்பளை பிரதேசத்தை பொறுத்த வரை பெண்கள் தலைமைக் குடும்பங்கள் கூடுதலாக காணப்படுகின்ற ஒரு பிரதேசமாகும். அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் இவர்களுக்கென்று தனித்துவமான திட்டங்கள் எதுவும் முன்வைக்கப்படாத நிலையில் அவர்கள் கல்வி, கலாச்சார, சமூக, பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொணடு இருக்கின்றனர். பல வகையிலும் யுத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றமையினால் பொதுவாகவே பொருளாதார ரீதியாகப்பின்தங்கிய ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது.பொருளாதார ரீதியான பின்னடைவே ஏனைய பல பிரச்சினைகளுக்கு அடித்தளமாக இருக்கின்றது. இந்நிலையானது பெண்கள் தலைமைக் குடும்பங்களைப் பொறுத்தவரை ஒரு படி மேலானதாகவே காணப்படுகின்றது. எனவே தான் இவர்கள் எதிர்நோக்கும் மேற்படி பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- சுயதொழில் முயற்சிக்கான கடன்வசதிகள் மற்றும் உதவிகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்க வேண்டும்.

- நிறுவனங்கள் தொழில் வழிகாட்டல் மற்றும் பயிற்சி நெறிகளை வழங்க வேண்டும்.

- ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள பெண்கள் அமைப்பு மேற்படி திட்டங்களை செயற்படுத்த முன்வர வேண்டும்.
- உதவி வழங்கும் நிறுவனங்கள் அறிமுகப்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களில் பெண்கள் தலைமைக் குடும்பங்களுக்காக ஓரளவு நெகிழ்வுப் போக்கைக்கடைப்பிடிக்க வேண்டும்.

- இப்பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் ஏனைய குடும்பங்களைப்போல் இக்குடும்பங்களுக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகின்றதா என்பதை இத்திட்டங்களை முன்னெடுப்போரும் ஒவ்வொரு கிராமத்தின் கிராம சேவையாளரும் அவதானிக்க வேண்டும்.

- இங்குள்ள பெண்கள் அமைப்புக்கள் ஏனைய பெண்கள் அமைப்புக்கள் போல இப்பெண்களுக்கும் முன்னுரிமை அளித்து விழிப்புணர்வுத் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

- இவை எல்லா வற்றையும் விட ஒவ்வொரு சமுதாயத்திலும் உள்ளவர்கள், கணவன் இல்லாத பெண்களும் ஏனையவர்ககளுக்குச் சமமானவர்கள் தான் என்பதை உணர வேண்டும்.

*முடிவுரை*

பட்டிப்பளைப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் இங்குள்ள அனைத்துப் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கிக் கொண்டு இருக்கின்றன. சமூக, கலாச்சார பிரச்சினைகள் என்பதை விடப் பொருளாதார ரீதியாகவே இவர்கள் அடிமட்ட நிலையில் உள்ளனர். எனவே இக்குடும்பங்களில் பொருளாதார ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்குமிடத்து ஏனைய பல பிரச்சினைகள் தாமாகவே தீர்ந்து விடும். எது எவ்வாறாயினும் இச்சமூகக் கட்டமைப்பில் மாற்றத்தை உள்வாங்கிய நிலையில் ஏற்படும் சமூகமயமாதலின் காரணமாக ஒவ்வொருவரின் மனப்பாங்கு நடத்தைகளில் ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்தே பெண்கள் தலைமைக் குடும்பங்களில் பிரச்சினைகளுக்கு விடிவு காணலாம், என்பதோடு ஏனையவர்களைப் போல் அவர்களது நிலையான இருப்பையும் சமூகத்தில் உறுதிப்படுத்தலாம்.

## REFERENCES:

01. Selvy Thiruchandran, 1999, The Victims of War, Emergence of Female Headed Households in Eastern, Srilanka, Volume iii,

02. Martha Alter Chen, 1998, Widows in India, Sage Publications, New Delhi/Thousand Oaks/London.

03. CARE international, 2008, Statistical Survey on Women Headed Households in Batticaloa District, No 221, Bar Rd, Batticaloa.

04. மாற்றங்களின் முகப்புகள், இலங்கையில் பெண்கள்(1986-1995), 1995, பெண்கள் ஆராய்ச்சி நிலையம்.

05. நிவேதினி மலர் 2, இதழ் 2, 1995, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, கொழும்பு 06, இலங்கை.

***பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் – மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு – 2008***

கிராம சேவையாளர் பிரிவுகள் : 24 குடும்பங்களின் எண்ணிக்கை : 6533
கிராமங்களின் எண்ணிக்கை : 65 மொத்த சனத்தொகை : 23535
மொத்த பெ.த.தா.கு : 1365

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் பட்டிப்பளை மண்முனை தென்மேற்கு பிரதேதச செயலாளர் பிரிவு-2008.

| பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வகைகள் | வயதெல்லை | | | | | மொ.பெ.த.தா.கு. எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | கீ 18 | 18-25 | 25-30 | 30-50 | 50மே | |
| கணவனை இழந்தவர் | - | 05 | 06 | 125 | 549 | 685 |
| போர்ச் சூழலில் கணவனை இழந்தவர். | - | 07 | 08 | 105 | 72 | 192 |
| விவாகரத்து அல்லது கணவனால் கைவிடப்பட்டோர் | - | 29 | 34 | 136 | 37 | 236 |
| கணவன் காணாமற் போனவர் | - | 07 | 05 | 11 | 10 | 33 |
| வயது குறைந்த கணவனைக் கொண்டோர் | - | 03 | 04 | 16 | 39 | 62 |
| வேறு காரணத்தால குடும்பத்தை தலைமை தாங்குபவர் | 20 | 26 | 11 | 50 | 50 | 157 |
| மொ.த.தா.கு.எண்ணிக்கை | 20 | 77 | 68 | 443 | 757 | 1365 |

SOURCE: CARE International Report.2008


மொ.பெ.த.தா.கு - மொத்த பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள்

பட்டிப்பளை பிரதேச பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரதான வாழ்வாதாரம்

SOURCE: CARE International Report.2008

## இந்நூல்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

*பெண்களின் வாய்மொழி இலக்கியம் தாலாட்டு ஒப்பாரி பற்றிய ஒரு சமூகவியல் நோக்கு :*



ஆண், பெண் இருபாலாரும் ஓதிச், சொல்லிப் பாடிய பாக்கள், பழமொழிகள், நொடிகள், பாடல்கள் ஆகியன மானிடவியல், சமூகவியல், மொழியியல் போன்ற துறைகளுக்குரிய ஆய்வுக் களங்களாக அமைந்துள்ளன. கிராமியக் கதைகள், தாலாட்டு, ஒப்பாரி போன்றன சில தனிச்சிறப்புகளுடையன. இந்தச் சிறுநூல் தமிழ்ப் பெண்களின் எழுதா இலக்கியங்களாம். தாலாட்டு, ஒப்பாரி ஆகியனவற்றை ஆய்வு செய்கிறது.

*தமிழ் வரலாற்றுப் படிமங்களில் ஒரு பெண்நிலை நோக்கு:*




இந்நூல் வரலாறு, மானிடவியல், சமூகவியல் என்ற பல் சங்க கற்கை நெறிப்பாங்குடைத்தாயிருப்பதை அவதானிக்கலாம். மாக்சிச அடிப்படை ஒன்று இருந்தாலும் அதை மீறிய ஒரு தேடலும் உண்டு. சமூகப் பரிமாணங்களை, பொருளாதார அரசியல் உருவாக்கங்களினூடாக விளக்க முற்படுகிறது. அதே சமயம் வர்க்கம், சாதி என்ற பிரிவுகளுக்கூடாகக் கலாசாரக் கட்டுமானங் களை இனம் கண்டு, அரசியல் பொருளாதார உருவாக்கங்களுக்கும், கலாசார கட்டுமானங்களுக்கும் உள்ள தொடர்பினையும் தொட்டு நிற்கிறது. தமிழ் கலாசார இயல்புகளையும், நியதிகளையும் கட்டவிழ்த்து ஆண்சார்ந்த நோக்கினையும் ஆணை மேல் நிலைப்படுத்திய ஆதிக்க அதிகார சமூக கட்டுமானங்களையும், கருத்தியலையும் தொடர்பு படுத்துகிறது. வரலாற்றையும், மானிடவியலையும் இணைத்து மாக்கிச

நெறிமுறையில் பெண் நிலை நோக்கில் செய்யப்பட்ட இவ்வாய்வு ஒரு முதல் நிகழ்ச்சியாகவே கொள்ளப்பட வேண்டும்.


*வர்க்கம், சாதி, பெண்நிலை பண்பாடு :*

பெரியாரியம் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை ஒழுங்குபடுத்தி இருந்தோம். ஆறு கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. அவற்றின் தலைப்புக்கள் ஒரு தர்க்கரீதியான அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்டன. பெரியாரின் ஐம்பெருங் கோட்பாடுகளை ஆய்வு செய்யும் ஒரு முயற்சியாக அது அமைந்தது. பெண்விடுதலை, சாதியம், நாத்திகம், மொழியியல், அரசியல் போன்றவை பற்றிய பெரியாரின் கருத்தியல் கோட்பாடுகள், அவற்றின் விளக்கம், முரண்பாடுகள் போன்றன அக் கட்டுரைகளில் வெளிவந்தன. இவையாவும் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது.



- பெரியாரியத்தின் தோற்றுவாய்க்குக் களமாக அமைந்த தமிழ்நாட்டு சமூக அரசியல் நிலை.
- தேசியவாதக் கருத்தியலும், பெரியாரின் தேசியவாதமும்.
- தமிழ்க் கலாசாரத்தில் பெரியாரின் கோபாவேசமான கடவுள் மறுப்புக் கொள்கையின் தாக்கம்.
- பெரியாரின் பெண்நிலைவாதக் கொள்கை.
- வர்க்க முரண்பாடுகளைப் புறக்கணித்து சாதியத்தை அடிப்படையாகக் கொண்டு பெரியார் வேண்டி நின்ற சமூக உருமாற்றம் சாத்தியப்படுமா?
- பெரியாரின் மொழி இலக்கியம் பற்றிய கொள்கை போன்ற தலைப்புக்களில் கட்டுரைகள் அமைந்தன.


### பெண்நிலைவாதமும், கோட்பாட்டு முரண்பாடுகளும் ஒரு சமூகவியல் நோக்கு :



இந்த நூல், பெண் நிலைச் சிந்தனையை அறிவார்ந்த தளத்தில் அறிமுகம் செய்வதோடு தமிழ்ச் சமூகநிலையில் அதனைப் பிரயோகித்து, தமிழர்களின் வாழ்வியலைப் பல தள நிலைகளில் மறு வாசிப்புச் செய்ய முற்படுகின்றது.


இன்று பெண்ணியச் சிந்தனை சமூகத்துக்கான மாற்றுச் சிந்தனையாகவும், பெண்நிலை நின்று அனைத்தையும் கேள்விக்குள்ளாக்கி, ஆண்சார்ந்த அனைத்து மதிப்பீடுகளுக்கும், விழுமியங்களுக்கும் எதிரான, மாற்றம் ஒன்றை அவாவி நிற்கிறது. இந்த நூலும் இந்த நிலையில் எமக்குப் பயனளிக்கிறது. மேலும் நடைமுறை சார்ந்த விவரங்களை நோக்கி நகர்த்தி ஊடாட வைக்கின்றது.


### கருத்தியலும், பண்பாட்டுக் கோலங்களும், கட்டவிழ்க்கும் சமயக் கொள்கைகளும், கிரியைகளும்:





பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்படும் கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப் படும் கட்டுரைகளில் தகுதியானவை தேர்ந்தெடுக்கப்பட்டு நூல் உருவம் பெறுவது வழமையாக எம்மால் முன்னெடுக்கப்படும் செயல். எம்மால் ஜனவரி மாதம் 18ம், 19ம் திகதிகளில் **பெண்களும் மதமும்** என்ற தொனிப்பொருளை மையமாக வைத்து நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பல முக்கியமான செய்திகள் அடங்கிய கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. அதனை எழுதியோர் அக்கருத்தரங்கில் பங்குபற்றியோரால் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் சிலவற்றை உள்வாங்கிக் கட்டுரைகளைச் செம்மைப் படுத்தியுள்ளார்கள்.

# ஆங்கில வெளியீடுகள்


Continuities/Departures:
Essays on Postcolonial Sri Lankan Women's Creative Writing in English
Edited by
Dinithi Karunanayake
&
Selvy Thiruchandran


REMEMBERING
BERNADEEN


At the Cutting Edge


Women Migrant
Workers & Trafficking
in Sri Lanka
Women's Education & Research Centre

## வருடாந்த சந்தா - நிவேதினி

| | | |
|---|---|---|
| North America | : | US$ 15 |
| UK & Europe | : | US$ 10 |
| India, S. Asia | : | US$ 05 |
| Sri Lanka | : | SLR 275/- |

சந்தா விண்ணப்பம் 2011

நிவேதினி சஞ்சிகைக்குச் சந்தா அனுப்பியுள்ளேன்

........................................................................................................................................

பெயர் : ........................................................................................................................

விலாசம் : ....................................................................................................................

........................................................................................................................

திகதி : ........................................................................................................................

இத்துடன் காசோலை / மணிஓடரைப் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.

**Women's Education and Research Center**
58, Dharmarama Road,
Wellawatta,
Colombo -06,
Sri Lanka.

# கையெழுத்துப் பிரதி ஒப்புவித்தல்

- ☞ கட்டுரை சமர்ப்பிப்போர் தங்கள் பிரதியை வைத்துக்கொண்டு இரு பிரதிகளை எமக்கு அனுப்பவேண்டும். A4 காகிதத்தில் ஒரு பக்கத்தில் ஒவ்வொரு வரிக்கும் இடைவெளி விட்டு (double space) எழுதப்பட வேண்டும்.

- ☞ ஹாவேர்ட் ஒழுங்குமுறையைப் (Harward Systems) பின்பற்றி அடிக்குறிப்புக்களும், உசாத்துணை நூல்களும் எழுதப்படவேண்டும்.

- ☞ அட்டவணைகள் புறம்பான தாளில் அல்லது இருவரிகள் இடைவெளிவிட்டு, எல்லா அட்டவணைகளின் கீழும் விளக்கமான தலைப்புக்களும், அவற்றின் மூல நூல்களும் குறிப்பிடப்படவேண்டும்.

- ☞ புரியாத சொற்கள் உபயோகிக்காமல் தெளிவாக வாசிக்கக்கூடிய நடையைப் பின்பற்றும் அதேவேளை கடினமான சொற்பிரயோகத்தையும் தவிர்த்துக் கொள்ளவும். ஆணாதிக்கம், இனவாதம் முதலியவற்றை வெளிப்படுத்தும் சொற்பிரயோகமும் இடம்பெறுவது தவிர்க்கப்பட வேண்டும்.

பிரசுர உரிமை

- ☞ பிரதிகள் மீளப் பிரசுரிக்கும் முன், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்திடம் பிரசுர உரிமையைப் பெற வேண்டும். இதன் மூலம் தங்கள் பிரதிகளை ஒரு வருடத்துக்குப் பின் வேறு வெளியீடுகளில் பிரசுரிக்க முடியும்.

## புதிய வெளியீடு

இலங்கையில் இந்து சமயத்தில் நிலவும் ஆண்தலைமைத்துவ சிந்தனைப் போக்குகள்.


## வெளிவரவிருப்பது

"Writing Religion Locating Women" என்ற தலைப்பில் செல்வி திருச்சந்திரன் அவர்களால் ஆங்கிலநூல் ஒன்று வெளிவர இருக்கிறது.


" Women's Movement in SriLanka: History, Trends and Trajectories" என்ற தலைப்பில் செல்வி திருச்சந்திரன் அவர்களால் ஆங்கிலநூல் ஒன்று வெளிவர இருக்கிறது.





*Remembering Bernadeen*




*At the Cutting Edge*




*The Laws and Customs of the Tamils of Jaffna*



*Women Migrant Workers & Trafficking in Sri Lanka*



*Stories from the Diaspora: Tamil Women, Writing*

**ISSN: 1391-0353**
**Price : Rs. 275/=**